வளரும் தமிழகம்.. வளர்ந்தோங்கும் நூலகங்கள்...

பொது நூலகச் செய்திமடல்



கல்வியில் சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு
யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்.

பொது நூலகத் துறை வெளியீடு
அக்டோபர் - டிசம்பர் 1996

With Best Compliments from:

மக்கள் குரல்

MAKKAL KURAL

Tamil Daily

The Voice of the People

20 years in the service of the people.

20 years of dedicated service. To the Nation. To Tamil Nadu. And to the people. Through constructive criticism. Visionary views. Objective approach to every public problem. Eschewing egoistic, narrow-minded approach.

In short, editorial excellence.

For further details, please contact :

Advertisement Manager

MAKKAL KURAL

Tamil Daily

1, First Main Road, United India Colony, Kodambakkam, Madras 600 024.

Phone : 483118, 4836464, Fax : 044-4832833

T-UN-647

பொருளடக்கம்

1.	நூலகச் செய்திமடல்	2
2.	நூலகமும் மனிதவள மேம்பாடும்	4
3.	மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்	8
4.	தேசிய நூலக வார விழா : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் சிறப்புரையின் தொகுப்பு	17
5.	வாசகர்கள் கருத்துரைகள்	22
6.	ஒலிம்பிக் நடைபெற்ற இடங்கள்	23
7.	கன்னிமாரா பொது நூலகம்	24
8.	பள்ளிகளில் நூலகம்	31
9.	தமிழ்நாடு ஒரு கண்ணோட்டம்	34
10.	நிழல் தரும் மரம்	38
11.	நூலகம் ஒரு கோயில்	44
12.	பொது நூலகத்திலுள்ள ஓர் புத்தகத்தின் வேண்டுகோள்!	46
13.	நூலகம் செல்வோம் நூலகம் வளர்ப்போம்	47
14.	தமிழகத்து அறிவியக்கம் தழைத்தோங்கட்டும்	48
15.	குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புக்களில் பொது நூலகப்பணி	50
16.	சுவாமி விவேகானந்தர்	53
17.	மாறிவரும் நூலகங்கள்	55
18.	இராசாராம் மோகன்ராய் அறக்கட்டளை நிறுவனமும் பொது நூலக வளர்ச்சிக்கு அதன் உதவிகளும்	59
19.	தேசிய நூலக வார விழா : சிறப்பு நிகழ்ச்சிகள் தொகுப்பு	65
20.	படித்து பழக வேண்டும்	72
21.	நூலகர் அறிமுகம்	73
22.	ஊர்ப்புற நூலகம் திறப்பது குறித்த அரசு ஆணை	74
23.	வாசகர் கனவை நினைவாக்கும் தேவநேயப்பாவாணர் மாவட்ட மைய நூலகம்	77
24.	பதவி உயர்வு பெற்ற மாவட்ட நூலக அலுவலர்களின் பெயர்களும், பணி இடமும்	78
25.	நானின்றி நீயில்லை மானிடனே	79

தலைமை பதிப்பாசிரியர்

திரு. **இரா. கண்ணன்,**

பொது நூலக இயக்குநர்

பதிப்பாசிரியர் குழு

திருமதி. **சுசிலா கணேசன்**
துணைபொது நூலக இயக்குநர்

திருமதி. **செரீன் அகமது**
துணைபொது நூலக இயக்குநர்

திரு. **ந. ஆவுடையப்பன்**
கன்னிமாரா பொது நூலகர்

திரு. **சி. கோபால்**
உதவி பொது நூலக இயக்குநர்

திரு. **கொ. செ. ஞானதேவ்**
நூலகர்

நூலகச் செய்தி மடல்

மடல் - 1 அக்டோபர் - டிசம்பர் 1996 அரும்பு - 2

விலை ரூ.10/-



பொது நூலகத் துறையின் சார்பாக வெளியிடப்படும் 'செய்திமடல்' இரண்டாவது இதழை வெளியிடுவதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதல் இதழ் வர ஒத்துழைத்து எங்களுக்கு ஆக்கமும் ஆதரவும் அளித்த அனைவருக்கும் எங்களது இதயங்கலந்த நன்றியுணர்வைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விதழ் 1996 ஆம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாளும் நூலக வாரவிழாவின் தொடக்க நாளாகிய நவம்பர் பதினான்காம் நாள் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களால் வெளியிடப்பட்டு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் உயர்திரு கோ.சி. மணி அவர்களால் முதல் பிரதி பெறப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள சுமார் 2500 க்கும் மேற்பட்ட நூலகங்களில் இன்று காட்சியளிக்கிறது.

நூலகத்துறையின் சிறப்பினை எடுத்துக் காட்டும் பளிங்குபோல் அமைந்து எல்லோரையும் கவரும் இதழாகவும், பத்திரிக்கைகள் பாராட்டும் இதழாகவும் இலங்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு கல்வி அமைச்சர் மற்றும் மதிப்புக்குரிய கல்விச் செயலர் போன்றோரின் அறிவுரைகள், ஆலோசனைகள் இன்னும்

பெருமைப்படச் செய்யவும், பல
நிறுவனங்கள் இம்மடலைப் பெற்றுப் பயன்
பெறவும் எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டு வரப்படுகின்றன.

"நூலகம் தழைக்க வேண்டும்; நூல் பல இயற்ற வேண்டும்;
கற்றோரின் மனதில் தங்கி கழிப்பெருமை சேர்க்க வேண்டும்;
இந்நிலை ஞாலம் தன்னில் நிலைத்திட வேண்டுமாயின்
அந்நிலை செய்வதேயென் அறப்பணியாகுமன்றோ."

இப்படிப்பட்ட கோட்பாட்டை அடைய இம்மடல் தொடர்ந்து தொண்டு செய்ய முனைந் திருக்கிறது - முனைப்பின் வேகம் முடுக்கிவிடப்பட்டு நல்ல நிலையை அடையப் பாடுபடுவோம்.

இக்காலாண்டில் நூலக வாரவிழாவும் அதற்கு அமைச்சர்களும், அலுவலர்களும் அளித்த ஆதரவும், பத்திரிக்கைகளின் பாராட்டும், சென்னை தொலைக்காட்சியும் சென்னை வானொலி நிலையமும் கொடுத்த ஆதரவும் விளம்பரமும் எங்களின் பாதையைச் சிறப்படைய வைத்துள்ளன.

விடுதலை வேட்கையை தமிழ் மண்ணில் அள்ளித் தெளித்த அறவோன் பாரதியார் பிறந்த நாளும் இக்காலாண்டில் அல்லவா நிகழ்ந்தது. பாரதியார் இல்லத்தை நூலகமாக மாற்றி அமைத்திட தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளது தமிழக பொது நூலகத் துறைக்குக் கிடைத்த பெருமையன்றோ.

பல செய்திகளைத் தாங்கி வரும் இவ்விதழ் அனைவரின் பாராட்டுதல்களையும் ஆதரவையும் பெறும் என நினைக்கிறேன். பொது நூலகத்துறையில் பணியாற்றும் நண்பர்களுக்கும் வாசகர்களுக்கும் எங்களது புத்தாண்டு மற்றும் இனிய பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1997 ஆம் ஆண்டு நூலகத் துறையின் 'வளர்ச்சி ஆண்டு' என இலங்கி வழி செய்யப் பாடுபடுவோம்.

அன்பன்,

(இரா. கண்ணன்)

சென்ற இதழ் தொடர்ச்சி . . .

நூலகமும் மனிதவள மேம்பாடும்

டாக்டர். சி. பழனிவேலு,
இயக்குநர்,
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை - 6.

நூலகத்தில் தானாக விரும்பி ஒரு நூலை எடுத்துப் படிக்கின்ற போது படிப்பவரின் மனநிலை வேறு. தான் விரும்பிப் படிக்கும் நூலை ஆழ்ந்து படிக்கிறார். தன்னை ஈடுபடுத்திக் கொண்டு படிக்கிறார். நூலை முதலில் இருந்து முடிவு வரை தொடர்ந்துப் படிக்கிறார். புரிந்துப் படிக்கிறார். அத்தகைய படிப்பின் மூலம் அறிவு பெறுகிறார். வாழ்நாள் முழுவதும் நிலைத்துப் பயன்தரும் தாக்கம் பெறுகிறார். அதற்குத் துணை நிற்பது நூலகம்.

வகுப்பறைக் கல்வி வரை யறுக்கப்பட்ட பாடங்களுக்குள் அடங்கிய நிகழ்வு. நூலகக் கல்வி எந்தத் துறையில் வேண்டுமானாலும், எத்தனை துறைகளில் வேண்டுமானாலும் வாய்ப் பளிக்கும் நிகழ்வு.

ஒரு வகுப்பறையில் நாற்பது பிள்ளைகள் பயில்கிறார்கள் என்றால் அவர்களில் சிலர் மீத்திறன் படைத்த வர்களாக இருப்பார்கள். ஒருசிலர் சராசரி திறன் உள்ளவர்களாக இருப்பார்கள். மற்றும் ஒருசிலர் சற்று குறைவான திறன் உள்ளவர்களாகவும் இருக்கக் கூடும். இருந்தும் அவர்கள் படிக்க வேண்டிய பாடங்களின் எண்ணிக்கையும் பாடப் பகுதியும் ஒன்றுதான். நாற்பது பிள்ளைகளும் நூலகத்திற்கு ஆற்றுப் படுத்தப்படும் பொழுது அங்கு எந்த வரைமுறையும் இல்லை; கட்டுப்பாடும் இல்லை. அவரவர் விருப்பதிற்கேற்ற துறையில் ஏற்ற நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.

வகுப்பறையில் ஐந்து பாடங்கள் என்றால் கால அட்டவணையில் ஆசிரியருக்கு ஒதுக்கப்படும் நேரம் நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. தமிழில் அதிக ஆர்வம் உடையவரோ, அறிவியலில் மிகுந்த ஈடுபாடு உடையவரோ அப்படி எந்தப் பாடத்தில் அதிக ஈடுபாடு இருந்தாலும் அந்தப் பாடத்திற்கு அதிக நேரத்தை ஒதுக்கச் சொல்ல பிள்ளைகளுக்கு உரிமை இல்லை. அது போலவே கணிதமோ, புவியியலோ அல்லது பிற பாடங்களோ கடினமாக இருக்கிறது; அதிக நேரம் ஒதுக்கிக் கற்பியுங்கள் என்று கேட்கப் பிள்ளைகளுக்கு உரிமை இல்லை. ஆனால் நூலகத்தைப் பயன்படுத்தும்போது தங்களுக்கு விருப்பமான துறையில் புத்தகங்களை எடுத்துப் படிக்க முழு நேரத்தையும் செலவிடலாம்.

வகுப்பறையில் மாணவர்கள் அனைவரும் ஓர் ஆசிரியரின் விளக்கவுரையைக் கேட்டுப் பாடத்தை அறிந்து கொள்கிறார்கள். ஒரு பாடத்திற்கோ பாடப் பகுதிக்கோ ஆசிரியர்தரும் விளக்கம் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக எல்லாக் காலத்திற்கும் ஏற்புடையதாக, எல்லோருக்கும் புரியக்கூடியதாக இருக்கும் என் பதற்கில்லை. திருக்குறளைப் படிக்கின்ற பொழுதெல்லாம் படிக்கின்ற ஒவ்வொரு வரும் ஒவ்வொரு கால கட்டத்திலும் புதுப்புதுப் பொருளை உணர்ந்து கொள்வதை அறிகிறோம். இருந்தும் ஆசிரியர் ஒருவரின் விளக்கவுரையைக் கேட்டுப் பாடத்தை அறிந்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் அனைத்து மாணவர்களுக்கும். ஏற்படகிறது நூலகத்திற்குச் செல்லும் மாணவர்களின் நிலைமை வேறு.

விரும்பிப் படிக்கும் புத்தகத்தை அவரவர்களுக்கு ஏற்ற முறையில் புரிந்து கொள்ளக்கூடிய, பொருள் கொள்ளக் கூடிய வாய்ப்புண்டு.

நிறுவனக் கல்வியில் வகுப்பு மாணவர்களின் திறமைகளில் வேறுபாடு இருந்தாலும் பாடப் பகுதியை முடிக்க வழங்கப்படும் கால அவகாசத்தில் வேறுபாடு இல்லை. ஒரு வகுப்பில் குறைமதி படைத்தவர்களாக இருந்தாலும் மீத்திறன் படைத்தவர்களாக இருந்தாலும் அந்தக் கல்வி ஆண்டில் பாடத்தை முடிக்க வேண்டும். நூலகத்தில் பெறும் வாய்ப்பு இப்படிப்பட்டதல்ல. அவர் அவர் திறமைக்கேற்பப் புரிந்துக் கொள்ளும் ஆற்றலுக்கேற்ப கால அவகாசத்தை எடுத்துக் கொள்ளும் வாய்ப்பை வழங்குவது நூலகக் கல்வி.

தேர்வை முன்னிலைப் படுத்தி வலியுறுத்தப்படுவது நிறுவனக் கல்வி. அத்தகைய நிர்ப்பந்தம் எதுவும் இல்லாமல் நடைபெறுவது நூலகக் கல்வி.

ஒன்றுமே புரியாமல் பாடப் பகுதியை மனப்பாடம் செய்யும் மாணவனும் கூட அதிக மதிப்பெண் பெற வாய்ப்பளிப்பது நிறுவனக் கல்வியின் தேர்வு முறை. நூலகக் கல்வியில் புரியாமல் படிக்கின்ற நிலைக்கே இடமில்லை. புரியாமல் மனப்பாடம் செய்வதற்கான நிர்ப்பந்தமோ கட்டாயமோ இல்லை. மற்றொருவர் தன்னை மதிப்பீடு செய்வார் என்பதற்காகப் பொருள் உணராமல் வாக்கியங்களை மனப்பாடம் செய்யும் பயனற்ற செயலுக்கு இடமில்லை.

கல்வி நிறுவனங்களில் வழங்கப்படும் கல்வியில் முக்கியத்துவம் பெறுவது வினாக்களுக்கு ஏற்ற விடைகள் தாம். பாடப் பகுதி முழுவதும் விடையாக அமைவதில்லை. பாடத்தின் ஒரு சில பகுதிகளே விடையாக அமைகின்றன. அவற்றை அடைப்புக் குறியிட்டுக் கொண்டு மனப்பாடம் செய்வதால் அறிவியல் தாக்கமோ புவியியல் அறிவோ பெற மாணவர்களுக்கு வாய்ப்பே இல்லை.

நூலகக் கல்வியில் வினாக்களுக் குரிய விடைகள் என்று சில பகுதிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கும் நிலையே இல்லை.

எடுத்த புத்தகத்தை முழுவதும் படித்து முடிக்க வாய்ப்பளிப்பது நூலகக் கல்வி.

தேர்வுக்குப் படிப்பதும், படித்ததைத் தேர்விற்குப் பின் மறப்பதும் கல்வி நிறுவனங்களில் பயிலும் பிள்ளைகளில் பலருக்குத் தொடர் நிகழ்வு.

நூலகத்தில் தேர்ந்தெடுத்துப் படித்த நூல்களில் வாக்கியங்கள் மறந்து போகலாம். உணர்ந்து கொண்ட பொருள், பெற்ற தாக்கம் வாழ்நாள் முழுதும் நிலைபெறுகிறது.

பள்ளியோடு, கல்லூரியோடு, பல்கலைக் கழகத்தோடு என்று ஏதோ ஒரு நிலையில் நிறுவனக் கல்வி நின்று போவது.

நூலகம் சாந்துணையும் கல்வி பயில வாய்ப்பளிப்பது.

நிறுவனக் கல்வி வரையறுக்கப் பட்ட நிர்ப்பந்தங்களுக்குள் நிகழ்வது. நூலகக் கல்வி அவரவர் விருப்பதிற்கும், தேவைக்கும் தரத்திற்கும் ஏற்ப நிர்ப்பந்த மில்லாமல் நிகழ்வது.

தொடக்கம் நிறுவனக் கல்வி.

தொடர் நிகழ்வு நூலகக் கல்வி.

வாழ்வில் ஒரு காலகட்டம்வரை நிறுவனக் கல்வி.

வாழ்நாள் முழுவதும் வாய்ப்பளிக்கும் பல்கலைக்கழகம் நூலகம்.

கல்வி நிறுவனங்கள் கைம்மண் அளவு கற்றுக் கொள்ள.

அண்டத்தளவு கற்கத் துணை போவது நூலகம்.

தகவல் சேகரிப்பைப் பெரிதும் வலியுறுத்துவது நிறுவனக் கல்வி; அறிவை வளர்ப்பதும் விரிவுபடுத்துவதும் நூலகக் கல்வி.

ஆற்றலுக்கு வித்திடுவது அறிவு; தன்னம்பிக்கைக்கும் செயல் திறனுக்கும் வித்திடுவது அறிவு; மனிதனை வளப்படுத்துவது அறிவு.

அறிவே மனிதவளம். வளமான மனிதரால் வளம்பெறுவது வீடு; வளமான வீடுகள் சேர்ந்தது ஊர். வளமான ஊர்கள் சேர்ந்தது வளமான நாடு. வளமான நாட்டை உருவாக்குவது அறிவு. அறிவை நல்குவது நூலகக் கல்வி. வளமான நாட்டை உருவாக்குவது நூலகக் கல்வி.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நமது நாட்டில் நீர் வளமும், நில வளமும், கனி வளமும், காட்டு வளமும், நூறு ஆண்டுகளுக்கு முன்பை விட மலிந்திருந்த நேரம்.

ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த மக்கள் தொகை, மக்கள் பரவல் நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்கள் தொகை, மக்கள் பரவலைவிட மிகக் குறைவு.

இருந்தும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மக்களின் வாழ்க்கைத் தரம் நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்களைவிட உயர்வாக இல்லை.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இன்று எத்தனையோ முன்னேற்றங்கள்.

வேறு எப்பொழுதும் இருந்ததைவிட இன்று நீர்வளம் குறைவு; தொடர்ந்து பயன்படுத்துவதால் நில வளம் குறைந்துள்ளது. காட்டுவளம் குறைந்து விட்டது. கனிவளம் குறுகி விட்டது. அதே நேரத்தில் மக்கள் தொகை கட்டுக்கடங்காமல் பெருகி விட்டது. இறப்பு விகிதம் குறைந்து விட்டது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையின் நீட்சியும் அதிகரித்து விட்டது. இருந்தும் இன்றைய மக்கள் எல்லாத் துறையிலும் முன்னேறி நூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்ததைவிடச் சீரும் சிறப்புமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இயற்கை வளங்கள் குறைந்து விட்ட சூழ்நிலையில் வாழ்க்கைத் தரம் குறைந்திருக்க வேண்டும் இந்த நூறு ஆண்டுகளில்.

மக்கள் தொகை பெருகி விட்டதால் தனி ஒருவருக்குக் கிடைக்கும் சராசரி இயற்கை வளம் குறைந்துவிட்டது. ஆகவே வாழ்க்கைத் தரம் குறைந்திருக்க வேண்டும்.

வாழும் ஆண்டுகள் அதிகரித்து விட்டதால் வாழ்க்கைத் தரம் குறைந்திருக்க வேண்டும்.

மாறாக இன்று நம் நாட்டில் நமது மூதாதையர்கள் யாரும் பெற்றறியாத வாய்ப்பு வசதிகளைப் பெற்று வாழ்ந்து வருகின்றோம். அவர்கள் அறிந்திராத நிரந்தரமான வீடுகளில் இன்று வாழ்கிறோம். வசதிகளைப் பெற்றிருக்கிறோம். போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்துகிறோம். முந்தைய தலைமுறையினர் அறிந்திராத வகை வகையான ஆடைகளைப் பல வண்ணங்களில் அணிந்து மகிழ்கிறோம். அறுசுவை உணவை - சரிவிகித உணவை அறிந்து உண்ணுகிறோம். உயர்ந்தபட்ச மருத்துவ வசதிகளைப் பெற்று வாழ்கிறோம். தகவல் தொடர்புச் சாதனங்களைப் பெற்றுப் பயன்படுத்தி மகிழ்கிறோம். அறிவியல் சாதனைகளை அனுபவித்துப் பயன்பெறுகிறோம்.

இயற்கை வளங்கள் மிகவும் குறைந்துவிட்ட நிலையில் அனைத்தும் நடைபெற்றிருக்கிறது.

இயற்கை வளங்கள் தான் மக்கள் வாழ்க்கைத் தரத்தின் அளவுகோல் என்றால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனித இனம் உன்னதமான வாழ்க்கையை வாழ்ந்திருக்க வேண்டும்.

நூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்க்கைத் தரம் குறைந்து இன்று மனித இனம் மாபெரும் சீரழிவிற்கு ஆட்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதற்கு எதிர்மாறான நிகழ்வுகளைப் பார்க்கிறோம். இதற்கு என்ன காரணம் ?

ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு இல்லாதது நூறு ஆண்டுகட்கு முன்பு இல்லாதது இன்று இருப்பது என்றால் 'அறிவு வெடிப்பு' (Knowledge explosion) ஒன்றுதான்.

ஒவ்வொரு துறையிலும் அறிவு வளர வளர அறிவியல் கண்டுபிடிப்புகள் வளர வளர வாழ்க்கைத் தரம் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

வாழ்க்கைத்தர உயர்விற்கு அடிப்படையாக அமைவது அறிவு வளம் என்பதை அறிந்திருக்கிறோம்; மனிதவள மேம்பாடு என்று உணர்ந்திருக்கிறோம்.

எரிமலைகள் நிறைந்த நாடாக இருந்தாலும், சமவெளியே இல்லாத நாடாக இருந்தாலும், மிகக் குறைந்த மண்வளமும், காட்டு வளமும் உள்ள நாடாக இருந்தாலும், கனி வளமே இல்லாத நாடாக இருந்தாலும் மேம்பாடு அடைந்த மனித வளத்தை மட்டும் நம்பியே உற்பத்தியைப் பெருக்கி, உலகச் சந்தையை வளைத்து, தனி மனித வருமானத்தைக் கூட்டி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, உலக அரங்கில் நாட்டை முன்னணியில் நிலைநிறுத்திக் கொண்டிருப்பவர்களைப் பார்க்கிறோம். அதே நேரத்தில் எல்லா வளங்களும் நிறைந் திருந்தாலும் நாட்டின் மனித வளம் மேம்பாடு அடையாத காரணத்தால் எந்த வளமும் பயன்படாமல், வாழ்க்கை வளம் பெறாமல் உள்ள நாடுகளையும் அறிவோம்.

வளம் என்பது ஒவ்வொருவர் உள்ளிருந்தும் வெளிப்படுவதேயல்லாமல் வெளியிலிருந்து சேர்க்கப்படுவது அன்று.

குன்றனைய செல்வத்தைக் குறையாத செல்வத்தை - மூதாதையர் விட்டுச் சென்றாலும், வளமற்ற பிள்ளையின் கையில் ஒரு சில ஆண்டுகளில் கரைந்து போவதைப் பார்க்கிறோம். ஒருசில ஆண்டுகளில் அவர் நடுத் தெருவிற்கு வந்து விடுவதையும் பார்க்கிறோம்.

எந்தச் செல்வத்தையும் மூதாதையர் விட்டுச் செல்லாத நிலையிலும் வளமான ஒருவர் தன் வாழ்நாளில் குறையாத செல்வத்தை - குன்றனைய செல்வத்தைச் சேர்ப்பதையும் பார்க்கிறோம்.

எந்த நிலம் பயனுள்ள நிலம் ? எந்த பூமி பயனற்ற பூமி ?

இந்த பூமி வளமானது என்றும், அந்த பூமி வளமற்றது என்றும் நிலத்தை வகைப்படுத்த முடியுமா ?

வளமானவர்களின் கையில் விழும் நிலம் வளம் பெறுகிறது. வளமற்றவர்கள் கையில் விழும் நிலம் வளத்தையும் இழக்கிறது.

வளமான உழைப்புக்குச் சொந்தக்காரர் பாறை நிலத்தையும் பண்படுத்தி விடுகிறார்.

வளமற்றவர் முயற்சியற்றவர். வளமான நிலத்தையும் பாழடித்து விடுகிறார்.

மனித வளமே வளம். மனித வளத்தின் கைவண்ணம் பிற வளங்களின் மேம்பாடும் பயன்பாடும். எல்லா வளங்களுக்கும் மேலான மனித வளத்திற்கு அடிப்படை அறிவு; அறிவின் திரட்டே நூலகம். நூலகமே ஒரு நாட்டின் தலையாய வளம். நூலகம் வளர வேண்டும். நூலக இயக்கம் தழைக்க வேண்டும்.

- டாக்டர் கலைஞர்

எதைக் கற்க வேண்டும்?

எதைக் கற்க வேண்டும்?
கற்பவை கற்க வேண்டும்.
கற்கத் தகுந்தவைகளையே கற்க வேண்டும்.
அப்படிக் கற்கத் தகுந்தவை, எவை
என்பதை முன்கூட்டித் தெரிந்து
கொள்ளவும் கற்க வேண்டும்.
அதைக் கற்ற பிறகே கற்பவை கற்க
முனைய வேண்டும்.
அவ்வாறு கற்பவையும் பிழையறக் கற்க வேண்டும்.
முழுமையாகக் கற்க வேண்டும்.
கற்கத் தகுந்தவைகளைக் கற்றபின்
அவ்வண்ணம் கற்றதற்கு
ஏற்றவாறு நல்வழியில் நடக்க வேண்டும்.

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்

ஓர் அறிமுகம்

சு. பரமசிவன்
மாநிலத்திட்ட இயக்குநர்
மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்
சென்னை - 600 006.

''கி.பி. 2000 ஆண்டு நிறைவடைதற்குள் பதினான்கு வயது நிறைவடைந்த நம் நாட்டுக் குழந்தைகள் யாவருக்கும் தரமான, இலவச கட்டாய ஆரம்பக் கல்வியை வழங்குதல் வேண்டும்'' என்று 1986-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது.

அக்கொள்கையையொட்டி எழுந்துள்ள ''எல்லார்க்கும் கல்வி'' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற, கீழ்க்காணும் கருத்துகள் வலியுறுத்தப் படுகின்றன. அவை :-

1. மக்கள் வாழ்விடங்களுக்கு அண்மையில் கல்விக் கூடங்கள் அமைத்துப் பள்ளி வயது எய்திய அனைத்துக் குழந்தைகளையும் பள்ளிகளில் சேர்த்தல்.
2. பதினான்கு வயது வரை இடை நிறுத்தமின்றித் தொடர்ந்து கல்வி கற்கச் செய்தல்.
3. கல்வித்தரமுயர்வில் முன்னேற்றம் அடைதல் ஆகியவையாகும்.

1990 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள், 5 முதல் 9-ஆம் நாள் வரை, தாய்லாந்து நாட்டின் ஜாம்டின் (Jometien) என்னும் இடத்தில் ''எல்லார்க்கும் கல்வி'' என்னும் கொள்கையை மையமாக வைத்து 'யுணஸ்கோ' ஓர் உலகளாவிய மாநாட்டை நிகழ்த்தியது. இந்த நூற்றாண்டு முடிவடைவதற்குள் அந்த இலக்கினை எய்த வேண்டும் என்பது அம்மா நாட்டின் முடிவாகும்.

இதனைத் தொடர்ந்து நம் இந்தியக் பேரரசு மாநிலங்களை முடுக்கி விட்டு உலகளாவிய அக்கொள்கையில் நம் நாடும் வெற்றி காண உறுதி பூண்டது.

தமிழக அரசும், கி.பி. 2000 க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வியைக் கட்டாயமாக அளித்தாக வேண்டும் என்ற உறுதி மேற்கொண்டுள்ளது. அதற்காகக் கல்வித் துறை நிருவாகிகள், சமுதாய நலப்பணியாளர்கள், ஆசிரியர்கள் பங்கேற்ற பல பணிமனைகளை நிகழ்த்தி 1994 முதல் 2000 ஆண்டுக்குள்ளான கல்வித் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இதிலிருந்து, தமிழ்நாடு அரசின் எல்லார்க்கும் கல்வி வழங்குவதற்கான நோக்கும் போக்கும் யுனெஸ்கோவின் உலகளாவிய மாநாட்டுத்தீர்மானங்களையும் நமது தேசிய கல்விக் கொள்கைகளையும் அடியொற்றிச் செல்கின்றன என்பதை உணர முடிகிறது.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களில் அடிப் படையில்தான் தொடக்கக் கல்வியை நம் நாட்டில் மேம்படுத்துவதற்காக மைய அரசு மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து ''மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்'' என்ற ஒரு சிறப்பான திட்டத்தை வழங்கி உள்ளது.

நம் இந்திய அரசு, தனது கல்வி பற்றிய அறிக்கையில் தொலைநோக்குத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடும்பொழுது மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் இன்றியமையாமையையும் அதன் செயல்முறைகளையும் கூறுவதுடன் அத்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளது.

தொடக்கக் கல்வியை முழுமையாகச் சீர் செய்வதற்கு ஏற்ற முறையாகவே இம்மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

இத்திட்டம் இந்திய நாட்டிலேயே உருவான திட்டம், இதன் நெறி முறைகளும் குறிக் கோள்களும் தேசிய கல்விக் கொள்கையிலிருந்து உருவாக்கப் பெற்றுள்ளவை. எல்லாருக்கும் முறை யான பள்ளிக் கல்வி என்பதோடு, எல்லாருக்கும் தொடக்கக் கல்வி என்பதே நமது நோக்கமாகும், திட்டம் பரந்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எல்லா மாவட்டத்திற்கும் அவற்றின் தேவைக்கு ஏற்றபடி திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒரே மாதிரியான திட்டம் கட்டாயப்படுத்தப்படுவதில்லை.

தமிழகத்தில் பெண்கள் எழுத்தறிவு விகிதம் குறைந்துள்ள 4 மாவட்டங்களில் தொடக்கக் கல்வி வளர்ச்சியடைவதற்கான முதன்மையான நிதி மற்றும் கல்வித் தரத்தை உயர்த்தத் தேவையான கல்வித் தொழில் நுட்ப உதவி அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது.

திட்டத்தின் குறிக்கோள்கள்:-

1. பள்ளி வயது எய்திய குழந்தைகள் அனை வரையும் பள்ளியில் சேர்ந்து, அவர்களை 5-ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கற்கச் செய்தல். அதில் குறிப்பாகப் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், நலிவுற்றோர் ஆகியோரின் குழந்தைகளுக்குத் தனிக்கவனம் அளித்தல்.
2. ஒவ்வொரு நிலையிலும் குறைந்த அளவு கற்றல் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் தரமான கல்வி அளிக்க வகை செய்தல்,
3. கற்றல், கற்பித்தலுக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க, போதிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

திட்டம் செயல்படுத்தப்படும் இடங்கள்:

• நாடு முழுவதும் 7 மாநிலங்களில் மொத்தம் 43 வருவாய் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றுள் தமிழ்நாட்டில் கீழே குறிக்கப்பெற்றுள்ள மாவட்டங்கள் இத்திட்டத்திற்கென தேர்ந் தெடுக்கப் பெற்றுள்ளன :

1. தருமபுரி மாவட்டம்.
2. தென்னாற்காடு மாவட்டம் (விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், தென்னார்காடு வள்ளலார் மாவட்டம்).
3. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.

திட்டம் நிறைவேற்றுவதற்கான காலம் :

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் 1994 - 1995 ஆம் கல்வியாண்டில் தொடங்கப் பட்டுள்ளது. ஏழு ஆண்டுகளில் நிறைவேற்றப் படும்.

மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பெற்ற மைக்கான காரணங்களாவன :

1. பெண்களின் எழுத்தறிவு தேசிய சராசரியை விடப் பின்தங்கியுள்ள மாவட்டங்கள்.
2. அறிவொளி இயக்கம் வெற்றிகரமாகச் செயல்பட்டு அதன் பயனாய் தொடக்கக் கல்விக்குக் கூடுதல் தேவை ஏற்பட்டுள்ள மாவட்டங்கள்.

1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மாநில எழுத்தறிவு பெற்றோர் விகிதம் 63.72. அதில் ஆண்கள் 74.88%, பெண்கள் 52.2%.

தமிழ் நாட்டில் பெண்களுள் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை தேசிய சராசரியை விட உயர்வாக உள்ளது. எனினும் மாவட்ட அளவில் தருமபுரி (35.8%), திருவண்ணாமலை சம்புவராயர் (39.2%), தென்னாற்காடு (38.5%) ஆகிய மாவட்டங்களில் பெண்களில் எழுத்தறிவு

பெற்றோர் எண்ணிக்கை தேசிய சராசரியை விடக் குறைவாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் தற்போதுள்ள கல்வி நிலைமைகளைக் கண்டறியவும், திட்டம் செயல்படுத்தும் முன் உள்ள சிக்கல்களையும், பிரச்சினைகளைக் கண்டறியவும் பல்வேறு நிறுவனங்கள் முதல்நிலை ஆய்வுகள் மேற்கொண்டன.

அவையாவன :

1. அடிப்படை ஆய்வு.
2. பெண்கல்வி பற்றி ஆய்வு.
3. ஆசிரியரின் தொழில் ஆர்வம், பயிற்சி வசதிகள் பற்றி ஆய்வு.
4. பழங்குடியினரின் கல்வி.
5. மாநிலப் பொருளாதாரம்.
6. பாடநூல் வடிவமைப்பு, அச்சிடுதல், வழங்குதல்.

அவற்றில் கண்டறியப்பட்ட முடிவுகளில் அடிப்படையில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் நெறிமுறைகள் வகுக்கப் பெற்றுள்ளன.

தொடர்புடைய அனைவரும் பங்கேற்று, ஒருங்கிணைந்து திட்டப் பத்திரத்தை உருவாக்கியுள்ளார்.

அடிப்படை நிலையிலும் மாவட்ட அளவிலும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள், ஆசிரியர் சங்க அமைப்புகள், பெற்றோர் ஆசிரியர் கழகங்கள், அன்னை ஆசிரியர் கழகங்கள், மகளிர் மன்றங்கள் ஆகியவை ஈடுபடுத்தப் பெற்றது சிறப்பம்சமாகத் திகழ்கிறது. அவை தற்போதைய கல்விப் பிரச்சினைகள், சிக்கல்கள் ஆகிய வற்றையும் அவற்றிற்கான தீர்வுகளையும் கண்டறிந்துள்ளன.

மாநில அளவிலும், மாவட்ட, மாநில அலுவலர்கள், உலக வங்கி நிர்வாகிகள், மனிதவள மேம்பாடு, தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், தேசிய கல்வித் திட்டமிடல் நிருவாக நிறுவனம் ஆகியவற்றின் அலுவலர்கள், பல்வேறு கருத்தரங்குகளில் மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகள் அவற்றின் தேவைகள் ஆகிய வற்றைப் பற்றிக் கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு திட்டப் பத்திரம் தயாரிக்கப் பெற்றுள்ளது.

திட்டம் செயல்படுத்தப்படும் போதும், விளைவு ஆய்வு செய்யும் போதும், இதே போல் பல்வேறு அமைப்புகள் பங்கேற்கும்.

பல்வேறு தொண்டு நிறுவனங்கள், ஆசிரியர் சங்க அமைப்புகள், மகளிர் மன்றங்கள் இத்திட்டம் செல்படவும், விளைவு ஆய்வை நடத்த உதவும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் திட்டப்பகுதிகளில் நடத்தப் பெறுகின்றன.

திட்டத்தின் முக்கிய செயல்பாட்டு விவரங்கள் :

அ) பகுதி, பகுதிகளாகச் செயல்படுத்தப் பெறும் தனித் திட்டகளாக இல்லாமல் மாவட்ட அளவில் தொடக்கக் கல்வியை முழுமையாக அடைய எல்லா நடவடிக்கைகளும் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப் பெறும்.

ஆ) இவ்விதம் முழுமையாகத் திட்டமிடும் போது, திட்டம் மற்றும் செயல்பாடு ஆகியவற்றில் ஆண், பெண் பாகுபாட்டினை நீக்க முக்கியத்துவம் அளிக்கப்பெற்றுள்ளது. மேலும் எல்லாருக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதற்கான நடவடிக்கைகள் ஒருங்கினைக்கப் பெறும்.

இ) குடியிருப்புகளுக்கருகிலேயே பள்ளிகள் அமைத்தல். இதனால் பெண்கள், தாழ்த்தப் பெற்ற / பழங்குடியினக் குழந்தைகள், வாய்பற்ற குழந்தைகள், பள்ளிக்கு வராமல்

வீதிகளில் சுற்றித் திரியும் குழந்தைகள் ஆகியவர்கள் எளிதாகப் பள்ளிகளில் சேரத்தக்க வகையில் இருப்பிடங்களுக்கு அருகாமையில் பள்ளிகள் அமைத்தல்.

ஈ) பள்ளியின் வசதிகளை அதிகரித்தல்.

உ) பள்ளியில் சேர்ந்து பயிலுதலுக்கு வசதி இல்லை என்ற நிலையில் மாற்றாக பள்ளிசாராக் கல்வித் திட்டத்தை வலுப்படுத்துதல்.

ஊ) கல்வி வளர்ச்சியல் மக்களைப் பங்கேற்க வைத்து அதன் மூலம் பள்ளிவயதுப் பிள்ளைகளைச் சேர்த்தல், நிலைநிறுத்துதல் மற்றும் தொடக்கக் கல்வியை 5 ஆண்டுகள் கற்று முடித்தல் ஆகியவற்றை அதிகரிக்கச் செய்தல்.

எ) ஆசிரியர் கற்பித்தல் திறன், ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் ஊக்கம் ஆகியவை அதிகரிக்கச் செய்தல்.

ஏ) கற்போரின் கற்றல் திறனையும், தேர்ச்சி யையும் அதிகரிக்கச் செய்தல்.

ஐ) வழக்கமான கற்பித்தல் தொடர்பானவற்றில் திட்டமிடுதல், மேலாண்மை அகியவற்றைச் சீர் செய்தல்.

ஒ) அறிவெளி இயக்கம், முறைசாராக் கல்வி, தொடக்கக் கல்வியின் நெறிமுறைகள், மழலையர் கல்வியும் உடல் நலமும் ஆகிய வற்றை மாவட்டத் தொடக்கக்கல்வித் திட்டச் செயல்பாடுகளில் ஒருமுகப்படுத்துதல்.

மாநில, மாவட்ட, வட்டார, கிராம நிலைகளிலுள்ள பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் சீரிய ஈடுபாட்டோடும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த கீழே குறித்துள்ள அரசுத் துறைகளின் தொடர்பும் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது : -

1. பள்ளிக் கல்வித் துறை.
2. தொடக்கக் கல்வித் துறை.
3. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சித் துறை
4. ஊரக வளர்ச்சித் துறை.
5. சமூக நலத் துறை.
6. முறைசாராக் கல்வித் துறை.
7. தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் நலத்துறை.
8. பெண்கள் நலத்துறை.
9. சுகாதாரத் துறை.

இத்துறைகளின் மாவட்ட, கிராமப்புறப் பணியாளர்களின் சீரிய ஒத்துழைப்பு இத்திட்டத்தின் வெற்றிக்கு இன்றியமையாதது.

திட்ட வளர்ச்சிப் பணிகள் :

1. பள்ளி வசதிகளைப் பெருக்குதல் (Improving Access)

தற்போதுள்ள பள்ளிகளில் புதிய / கூடுதல் வசதிகளை ஏற்படுத்துதல். பள்ளி மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை ஆகிய வற்றைப் பொருத்து 3 அல்லது 2 வகுப்பறைகள் முறையே ரூ.3 லட்சம் அல்லது ரூ.2 லட்சம் செலவில் கட்டப் பெறும். இதன்படி 1197 பள்ளிகளுக்குப் புதிய, கூடுதல் கட்டடங்கள் நான்கு மாவட்டங்களிலும் கட்டப்படும்.

2. குடிநீர் வசதியும், மாணவிகளுக்கென்று கழிவறையும் 1547 பள்ளிகளில் ஏற்படுத்தப் பெறும். ஒவ்வொரு பள்ளியிலும் கழிவறை கட்ட ரூ.15,000/- மும் குடிநீர் வசதிக்கு ரூ.10,000/- மும் ஒதுக்கப் பெற்றுள்ளது.

3. பள்ளியை இடையில் விட்டவர்கள், பள்ளியில் சேர்ந்து பயிலும் வாய்ப்பு இல்லாதோர் ஆகியோரைப் பள்ளியில் சேர்க்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

பள்ளியில் சேராமலே இருந்து விட்டவர்களுக்கு, பயிற்சிபெற்ற ஊக்குநர்கள், மேற்பார்வையாளர்களைக் கொண்டு முறைசாராக்

கல்விமையங்கள் ஏற்படுத்தப்பெறும். நன்னெறிக் கல்வி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த திட்ட காலத்தில் சமுதாய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப் பெறும்.

4. ஆசிரியர்கள் கூடுதலாகத் தேவைப்படும் பள்ளிகளுக்குக் கூடுதல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப் பெறும்.

5. பள்ளி வயது குழந்தைகளுக்கு அவர்களின் ஊருக்கருகாமையில் பள்ளி இல்லை என்னும் குறையைத் தீர்க்கவும், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட பழங்குடியின் மக்களுக்கு வாய்ப்பளிக்கவும் மாணவர் வடுதிகளுடன் கூடிய பள்ளிகள் திறக்கப்படும். இதற்குத் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் சிறப்பிடம் வழங்கப் பெறும்.

கற்போர் தேர்ச்சி, தொடர்ந்து கற்றல் ஆகியவற்றை மேம்படுத்துதல் (Improving Retention and Learner Achievement)

பள்ளி மாணவர்களின் உயர் தேர்ச்சி நிலை இல்லாமை, தொடர்ந்து கல்லாமை ஆகிய வற்றிற்கான காரணிகளாவன :

1. போதிய அளவுக்குக் கட்ட, தளவாட வசதிகள் இல்லாமை.
2. பாடத்திட்டத்தோடு ஒன்றிப் பாடம் நடத்த இயலாமை.
3. சுவையில்லாக் கற்பித்தல் முறைகள்.
4. ஆசிரியர்களுககுப் போதிய பணியிடைப் பயிற்சிகள் இல்லாமை.

இத்தடைகளை நீக்க எல்லாப் பள்ளிகளுக்கும் கற்றல், கற்பித்தல் பொருள்கள் வாங்கப் பெறும், இதற்காக ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆண்டுக்கு ரூ.500/- வீதம் வழங்கப்படுகிறது.

தேவையான தளவாடச் சாமான்கள், இருக்கைகள், கருவிகள், பராமரிப்பு ஆகிய வற்றிற்கென ஆண்டுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.2000/- வீதம் வழங்கப்படுகிறது.

பலவகையான ஆசிரியர் பணியிடைப் பயிற்சிகளை நடத்திட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு வட்டாரக் கருவூல மையம் (Block Resource Centre) கட்டப்படும். இம்மையங்கள் ஊராட்சி ஒன்றிய அளவில் பயிற்சிகள் நடத்திடச் சிறப்பு நிலையமாக விளங்கும். இம்மையங்கள் ஒவ்வொன்றிற்கும் பயிற்சி வசதிகளுக்காகவும் கருவிகளுக்காகவும் ரூ.1,50,000/- வழங்கப்படும்.

மாணவர் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கப் பயிற்சி ஏடுகள், ஆசிரியர்களுக்குக் கையேடுகள் ஆகியவை அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்ப்படவிருக்கிறது.

பள்ளியை விட்டு விலகி விடாமல் தொடர்ந்து கற்போர் விகிதத்தை அதிகரிக்க நன்கு பயிற்சி பெற்ற வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதில் பெண்கள், தாழ்த்தப் பெற்ற, பழங்குடியினக் குழந்தைகளுக்குத் தனிக் கவனம் செலுத்தப்பட உள்ளது.

திறன் வளப்படுத்துதல் (Capacity Building)

1. இத்திட்டத்தில் முக்கிய நோக்கமே கல்வித்தர முன்னேற்றம் ஆகும். ஆசிரியர்களுக்குச் சிறப்பாக பயிற்சி அளிக்க வட்டாரக் கருவூல மையங்கள் எல்லா வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்படும்.

2. மாணவர் சேர்க்கை, பள்ளியை விட்டு நின்று விடாமல் தொடர்ந்து கற்று, தொடக்கக் கலவவியை முடித்தல் ஆகியவற்றிற்குச் சமுதாயத்தின் பங்கேற்பு பெரிதும் உதவும். கிராமக் கல்விக் குழு, அன்னை ஆசிரியர் கழகம், மகளிர் மன்றம், பெற்றோர் ஆசிரியர் கழகம் இவற்றின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அந்தந்தப் பகுதிகளிலுள்ள பள்ளிகளைச் சிறப்பாக நடத்தவும், முன்னேற்றவும் இவர்களின் ஒத்துழைப்பு பெறப்படும்.

இவ்விதம் சமுதாயத்திற்கும் பள்ளிக்கும் உள்ள இடைவெளி குறைக்கப்படும். பிற துறைகளுடன் தொடர்பு கொள்ளவும் அவர்களின் ஆதரவைப் பெறவும், தன்னார்வ அமைப்புகளின் உறுப்பினர்களுக்கும் பயிற்சி அளிக்கப் பெறும்.

திட்டம் சிறப்பாகச் செயல்படத் திறமையான மேலாண்மை வேண்டும். இதற்கெனக் கல்வித் துறையில் சிறந்த அனுபவம் மிக்கவர்கள் கருத்தாளர்களாக நியமிக்கப் படுவார்கள்.

இத்திட்டத்தை முழுமையாக வெற்றிபெறச் செய்வதற்கு எல்லோரின் உதவியும் பெறப்படும்.

திட்ட வடிவமைப்பு, நிதி ஒதுக்கீடு, பங்கீடு, மாநிலச் செலவினம் :

இத்திட்டத்திற்கு ஏழு ஆண்டுகளுக்கும் ஒதுக்கப் பெற்றுள்ள தொகை ரூ.125.80 கோடி களாகும். திட்டம் செயல்படும் மாவட்டங்களுக்கு ரூ.118.99 கோடி. மாநில அளவில் செலவினத் திற்கு ரூ.6.79 கோடி, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு ரூ.39.46 கோடி, தருமபுரிக்கு ரூ.39.53 கோடி, தென் ஆற்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் ஆகிய இரு மாவட்டங்களை உள்ளடக்கிய தென்னார்காடு மாவட்டத்திற்கு ரூ.40 கோடியுவு ஒதுக்கப்பட்டுள்ளது.

செலவின விவரம் :

புதிய பள்ளிக் கட்டடம் கட்டுதல் மற்றும் பள்ளி வசதிகளை மேம்படுத்தல்.	ரூ.72.11 கோடி
கற்போர் தேர்ச்சி, தொடர்ந்து கற்றல் வகைக்கு	ரூ.41.00 கோடி
திறன் வளப்படுத்துதல்	ரூ. 5.86 கோடி

மொத்த திட்ட ஒதுக்கீட்டில் 85% உலக வங்கியிடமிருந்து மைய அரசால் பெறப்பட்டு திட்டத்தை நிறைவேற்றும் அமைப்பிற்கு மான்யமாக வழங்கப்பெறும். மீதியுள்ள 15% மாநில அரசின் செலவினமாகும்.

செலவினங்களின் ஒதுக்கீட்டு விவரம் :

கட்டுமானப் பணி	24%
மேலாண்மை நிர்வாகம்	6%
ஆசிரியர்களுக்குப் பயிற்சி மற்றும் தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்த	70%

மாநில அளவிலான பணிகள் :

இத்திட்டம் ஒரு மேலாண்மையின் கீழ் இயங்குவதற்கு மாநில நிலையில் சில பணிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது. இதன் மூலம் மாநில அளவில் திட்டமிடுதல், மனிதவளம் மற்றும் போதிய நிதிவசதி ஏற்படுத்துதல், மாவட்ட அளவில் ஒருங்கிணைத்தல், கணக்கீடு மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை நடைபெறும்.

மாநில அளவில் செய்யப்படும் முக்கிய ப்பணிகள் :

சென்னையில் உள்ள கல்லூரிச் சாலை, கல்வி வளாகத்தில் இத்திட்டத்திற்கென ஒரு தலைமையகம் மற்றும் பயிற்சி மையம் கட்டுதல்.

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககத்தையும், மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனத்தையும் வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தை வலப்படுத்துதல்.

மேலாண்மைச் செய்தி அமைப்பை நிறுவுதல் (Management Information System)

மாநில அளவில் அலுவலர்கள் நியமித்தல்.

நிர்வாக அமைப்பு :

இத்திட்டம் குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக அர்ப்பணிப்புத் தன்மை அடிப்படையில் செயல்படுகிறது. தொடக்கக் கல்வியில் ஒரு பொது முன்னேற்றத்தை ஏற்படுத்த ''தமிழ்நாடு மாநில எல்லாருக்கும் கல்வி இயக்கம்'' என்னும் பதிவு பெற்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுக்குழு ஒன்றும் செயற்குழு ஒன்று இவ்வமைப்பில் செயல்படும்.

பொதுக்குழுவின் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர். இதன் துணைத் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர்.

தமிழக அரசுத் தலைமைச் செயலர், கல்வித் துறைச் செயலர், பல்வேறு துறைச் செயலாளர்கள், அரசுத்துறை இயக்குநர்கள், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அலுவலகப் பிரதிநிதிகள், தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம், தேசியக் கல்வி திட்டமிடல் நிர்வாக நிறுவனம் ஆகியவற்றின் வல்லுனர்கள், அரசுத்துறையல்லாத அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் செயற குழு உறுப்பினர்களாகப் பணியாற்றுவார்கள். பெண்கள், தாழ்த்தப்பட்ட / பழங்குடியின மக்கள், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் செயற்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். மாநிலத் திட்ட இயக்குநர் இதன் உறுப்பினர் - செயலாளர் ஆவார்.

இத்திட்டத்தைச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும் மாநில அளவில் ஒரு குழு உள்ளது.

மாவட்டக்குழுவிற்கு மாவட்ட ஆட்சியாளர் தலைவர். முதன்மைக் கல்வி அலுவலர் துணைத் தலைவராவார். மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் இதன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார். மாவட்ட உதவி ஒருங்கிணைப் பாளர் முழுநேர அலுவலராகச் செயல்படுவார். மாவட்டக் கல்வித் துறை அலுவலர்கள், பிற துறை அலுவலர்கள் ஆகியோர் இதன் உறுப்பினர்கள் ஆவர். மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மாவட்டக் குழுவின் உறுப்பினர்-செயலாளராகப் பணிபுரிவார்.

மாவட்ட அளவில் மேற்பார்வைக் குழு ஒன்று நியமிக்கப்படும். இதில் மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளரும், சில வல்லுநர்களும் திட்டத்தைச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும் நியமிக்கப்படுவார்கள்.

ஊராட்சி ஒன்றிய அளவில் உதவிக் கல்வி அலுவலர், திட்டத்தைச் செயல்படுத்துவார். பிறதுறையின் அலுவலர்கள், தன்னார்வ நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க எல்லா வசதிகளையும் கொண்ட வட்டாரக் கருவூல மையம் அமைக்கப் பெறும். மாவட்ட அளவில், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனமும், மாநில அளவில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி, பயிற்சி இயக்கமும் இத்திட்டத்திற்கு கல்வி நுட்ப உதவிகளை வழங்கும்.

கிராம அளவில் பெற்றோர் ஆசிரியர் கழகம் / அன்னை ஆசிரியர் கழகம் ஆகியவை உதவிக் கல்வி அலுவலருக்கு திட்டத்தை திறம்படச் செயல் படுத்துவதற்குத் துணை புரியும்.

மேலாண்மைத் தகவல் அமைப்பு :

. இத்திட்டத்திற்கென ஒரு மேலாண்மைத் தகவல் அமைப்பு நிறுவப்பெறும், மாநில அளவில் முதல் கட்டத்தில் கணிப்பொறி நிலையம் திட்டத் தலைமையகத்தில் அமைக்கப்படும். இரண்டாவது கட்டத்தில் மாவட்ட அளவில் கணிப்பொறி நிறுவப் பெறும்.

மூன்றாவது கட்டத்தில், "NICENT" என்னும் அமைப்பு மூலம் புது தில்லியில் உள்ள தேசிய தலைமையகத்தோடு தொடர்பு ஏற்படுத்தப்பெறும். இந்த மேலாண்மைத் தகவல் அமைப்பு

நிதிக்கட்டுப்பாடு, கணக்கீடு, பணியாளர் விவரம், கல்விப் புள்ளியியல், அச்சிடுதல் ஆகியவற்றை மேற்கொள்ளும்.

செயல் திட்டம் :

இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.125.80 கோடி. இதில் மாநில அளவிலான பணிகளும் அடங்கும்.

முழுத் திட்ட விவரம்

	விவரம்	தருமபுரி	திருவண்ணாமலை	தென்னார்காடு
		....	(ரூபாய் லட்சங்களில்)	....
1.	பள்ளி வசதிகளைப் பெருக்குதல்	2487.100	2612.640	2112.470
2.	கற்போர் தேர்ச்சி தொடர்ந்து கற்றல் மேம்படுத்துதல்	1301.810	1136.310	1663.980
3.	திறன் வளப்படுத்துதல்	164.985	197.795	223.745
	மொத்தம்	3953.895	3946.765	4000.195

மாநில அளவிலான பணிகளுக்காக : ரூ.679.0 லட்சங்கள்

தமிழக உள்ளாட்சி அமைப்புகள் விவரம்!

தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் மாவட்டபஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள், நகர பஞ்சாயத்துக்கள் மற்றும் வார்டுகள் விவரம் வருமாறு:-

மாநகராட்சி	-	6
மாவட்டபஞ்சாயத்து	-	28
நகராட்சிகள்	-	106
நகரபஞ்சாயத்து	-	635
பஞ்சாயத்து யூனியன்கள்	-	384
ஊராட்சிகள்	-	12586
வார்டுகள்		
மாநகராட்சி வார்டுகள்	-	474
மாவட்டபஞ்சாயத்து வார்டுகள்	-	649
நகராட்சி வார்டுகள்	-	3368
பஞ்சயாத்து யூனியன் வார்டுகள்	-	6504
நகரபஞ்சாயத்து வார்டுகள்	-	10152
கிராம பஞ்சாயத்து வார்டுகள்	-	40734

1994 - 95 ஆண்டில் மாநிலப் பணிக்கு ரூ.99.33 லட்சங்கள் ஒதுக்கப்பெற்றுள்ளன. இதில் மாநிலத் தலைமையகம் மற்றும் பயிற்சி மையம் கட்டுவதற்கான ரூ.50 லட்சமும் அடங்கும்.

1994 - 95 ல் பள்ளிகள் ஏற்படுத்துவதற்கு ரூ.298.55 லட்சமும், கற்போர் தேர்ச்சி, தொடர் கற்றல் ஆகியவற்றிற்கு ரூ.148.38 லட்சமும் ஒதுக்கப் பெற்றுள்ளது. திறன் வளப்படுத்து வதற்கு ரூ.55.215 லட்சம் ஒதுக்கப் பெற்றுள்ளது.

ஆய்வு நிறுவனங்களின் பணி :

தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம், தேசியக் கல்வி திட்டமிடல் நிர்வாக நிறுவனம், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம் ஆகிய உயர்கல்வி நிறுவனங்கள் இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்று வதற்கு நுட்ப உதவிகளை வழங்கும்.

பல்வேறு பயிற்சித் திட்டங்கள் அமைக்கவும், பயிற்சி முறைகளை வகுக்கவும், இந்நிறுவனங்கள் ஆலோசனைகள் வழங்கும்.

திட்டத்தால் ஏற்படும் விளைவுகளும் திட்டத்தின் எதிர்காலமும் :

கி.பி. 2000 ம் ஆண்டில் இத்திட்டத்தினால் பெறப்படும் ஏற்றமிகு மாற்றங்கள் :

1. பள்ளி செல்லும் வயதுடைய எல்லாக் குழந்தைகளும் பள்ளியில் சேர்ந்திருப்பார்கள்.
2. பள்ளியில் சேர்வோர், தொடர்ந்து கற்போர் விகிதம் ஒன்றாகும். சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளில் உள்ள குழந்தைகளின் பள்ளியை விட்டு இடையில் நின்றுவிடும் விகிதம் 10% க்கும் குறைவாகிவிடும்.
3. குறைந்த அளவு கற்றல் திறன் பெற்று 5 ஆண்டுகள் தொடக்கக் கல்வி அல்லது பள்ளிசாராக் கல்வி மூலம் அனைவரும் குறை ந்தபட்ச கற்றல் திறன்களை அடைந்திருப் பார்கள்.
4. பள்ளிச் சேர்க்கை, கற்போர் தேர்ச்சி மற்றும் பள்ளியை விட்டு நின்றுவிடுதல் போன்ற வற்றில் இருபலாரிடமும், எந்த இரு சமுதாயப் பிரிவினரிடமும் வேறுபாடு 5% அளவுக்குக் கீழே குறைந்திருக்கும்.
5. மழலையர் கல்வி நல மையங்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒருங்கிணைப்பு ஏற்பட்டிருக்கும்.
6. பணியிடைப் பயிற்சி மூலம் கல்வித் தரம் வெகுவாக உயரந்திருக்கும்.
7. மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிப்பதன் மூலம் தேர்ச்சி நிலை 25% அதிகரிக்கும். இது ஏற்கனவே அளவிடப் பெற்ற திட்ட முந்தய நிலையைவிட 25% அதிகமாகிவிடும். அதிலும் குறிப்பாக இந்தத் தேர்ச்சிநிலை பெண் குழந்தை / தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த / பழங்குடியின மக்கள் குழந்தைகளிடம் ஏற்பட்டிருக்கும். இத் திட்டத்தில் விளைவுகள் பரிசீலிக்கப் பெற்று, வரும் ஆண்டுகளில் பிற மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

தேர்ந்தெடுக்கப் பெற்ற இந்த 4 மாவட்டங்களுக்கு மட்டுமே இத்திட்டம் செயல்பட்டாலும் கிடைத்த அனுபவங்கள், தயாரிக்கப்பெற்ற விவரங்கள், மைய மாநில அரசின் உதவிகளுடன் எதிர்காலத்தில் பிற மாவட்டங்களுக்குப் பயன்படுத்தப் பெறும். இதன் பயனாக, கி.பி.2000 ஆம் ஆண்டிற்குள் ''எல்லாருக்கும் தொடக்கக் கல்வி'' என்னும் குறிக்கோள் நிறைவேறிவிடும். ஆசிரியர், அரசு, சமுதாயம் ஆகியவற்றின் ஒத்துழைப்பால், இன்றுவரை எய்தப் பெறாமல் இருந்த ''எல்லாருக்கும் கல்வி'' என்னும் குறிக்கோள் கி.பி. 2000 க்குள் அடையப் பெறும் என்பதில் ஐயமில்லை.

தேசிய நூலக வாரவிழா

- மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் சிறப்புரையின் தொகுப்பு

ஜனநாயகத்தின் முதுகெலும்பாக இருக்கும் கிராம மக்கள் தெளிவடைய நூலக இயக்கம் வளர வேண்டும். கல்வி அமைச்சர் பேராசிரியர் வலியுறுத்தல்

''ஜனநாயகத்தின் முதுகெலும்பாக விளங்கும் கிராம மக்கள் தெளிவடைவதற்கு நூலக இயக்கம் வளர வேண்டும். அந்த நூலக இயக்கத்தினுடைய பயனை அவர்கள் உணரும்படி சிற்றூர்களில், பேரூர்களில் நூலக வார விழா நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும்'' என்று சென்னை-தேவநேயப் பாவாணர் அரங்கில் நடைபெற்ற நூலக வார விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய கல்வி அமைச்சர் பேராசிரியர் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய பிறந்தநாள் என்ற வகையில் நூலக இயக்கத்திற்கும் ஒரு பெரிய ஊக்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

உயர்ந்த நோக்கத்திற்காக எழுதுவதை மதிக்க வேண்டும்

எழுத்தாளர்களில் தலைசிறந்தவர் பண்டிதர் நேரு என்று சொல்லப்படுவதற்கு மிக முக்கியமான காரணம்; சிந்தனையாளர்களிலும், அவர் தலைசிறந்தவர். சிந்தனையாளராக இல்லாத எழுத்தாளர் எழுதுகிற எழுத்தை நம்முடைய முழுச் சிந்தனையையும் பயன்படுத்திக்கூட விளங்கிக் கொள்ள முடியாது. ஆனால் நேரு அவர்களின் எழுத்தைப் படிப்பவர்கள் - எவ்வளவு எளிதாக உணரமுடியும் என்பதை அவ்ருடைய கட்டுரைகளை, நூல்களைப், படித்தவர்கள் எல்லோரும் அறிவார்கள்.

ஆனால் எழுத்து நடை என்பது பலவகைப்பட்டது. பொதுமக்களுடைய உள்ளத்தை ஈர்த்து அவர்களை தான் சொல்லுகிற படி செயல்படுத்தக்கூடிய அளவுக்கு எழுதக் கூடிய ஆற்றல்மிக்க எழுத்தாளர்கள் பலபேர் தமிழகத்திலும் விளங்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் டாக்டர் மு.வ. அவர்களின் எழுத்து அந்தத் தெளிவுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கும். எழுத்து, அதைப் பயில்கிறவர்களை- தன்னுடைய குறிக்கோலுக்கு செயல்படக் கூடியவர்களாக ஆக்குகிற ஆற்றல், திறன் இவை போன்ற எழுத்து தமிழ் நாட்டில் பேரறிர் அண்ணா

அவர்களால் எழுதப்பட்டது. அதைப்போல தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்களால் எழுதப்பட்டது. எனவே எழுத்திலே பலவகை உண்டு என்று சொன்னாலும் கூட, உயர்ந்த நோக்கத்துக்காக எழுதப்படுகிற எழுத்தை என்றைக்கும் நாம் மதிக்க கடமைப் பட்டிருக்கிறோம்.

பயனுள்ள செய்திகளை வழங்காத ஏடுகள்

இங்கே நம்முடைய லேனா தமிழ்வாணன் பேசுகிற போது புகைவண்டியிலே செல்லுகிற ஒருவர் ஒரு ஏடுவாங்கினால் ஒன்பது பேர் அந்த ஏட்டை எப்படியாவது நோக்கி ஓரளவு படித்துக் கொண்டு மனநிறைவு அடை கிறார்கள் என்பதை நகைச் சுவையாக எடுத்துச் சொன்னார். அது நகைச்சுவை அல்ல, நாட்டின் நிலை. அந்த நாட்டு நிலைக்கு இரண்டு காரணங்கள் காசு கொடுத்து வாங்குகிற அளவுக்கு தகுதி இல்லாத ஏடுகள் ஏராளமாக இருக்கின்றன. படிக்கிற சாதாரண மக்கள் தங்கள் கையிலே இருந்து ஒரு ரூபாய் எடுத்துக்கொடுத்து ஒரு ஏடு வாங்கிப் படிக்க வேண்டுமானால், அவர்களுடைய நிலையில் அது இயலாத காரியம் என்பது ஒன்று. சில ஏடுகள் அந்த ஒரு ரூபாய்க்குக் கூட, தகுந்த செய்திகளை வழங்காத நிலை மற்றொன்று! 'தகுந்த செய்தி' என்பது 'பயனுள்ள செய்தி' என்ற பொருளில் நான் சொல்கிறேன். அதற்காக குறை சொல்லவில்லை. அதுதான் நம்முடைய நிலை.

கேரளத்திலே ஏடுகளைடைய தரமும் உயர்ந்து. படிப்பவர்களுடைய தகுதியும் உயர்ந்து இந்த அறிய வேண்டிய செய்திக்காக செலவழிக்கக் கூடிய பணமும்- அறிய செலவழிக்கக் கூடிய மனப்பான்மையும் உயர்ந்து அவர்கள் ஈட்டுகிற செல்வமும் உயர்ந்து- அந்த நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள்.

கல்வி உயர்ந்து செல்வம் உயர்ந்து பயன்பாட்டு முறை உயர்ந்து தாங்கள் வாங்குகிற ஏட்டை தாங்களே கையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று அந்த ஏடு பாதுகாத்து வைக்கப்படுகிற அளவுக்கு உணர்வு அங்கே உண்டு.

இங்கே நம்முடைய நாட்டில் பாதுகாத்து வைக்கப் படக்கூடிய, ஏடுகள் - பத்து ஏடுகளில் ஒன்றிரண்டு ஏடுகள்தான். அதற்கு மேல் விரிவாகச் சொல்லத்தேவையில்லை.

ஆனாலும் படிப்பதற்காக கைப்பொருளை செலவிடுவது என்பது நம்முடைய நாட்டில் மிக நீண்ட காலமாகவே மங்கிப் போன ஒரு மனப்பான்மை! ஒரு ஏடு, ஒரு புத்தகம் நல்ல புத்தகம் என்றால்கூட, வாங்கிப் படிப்பதைவிட மற்ற வர்களிடத்திலே உள்ள ஏட்டை வாங்கி தாங்கள் அதற்காக கைப்பொருளை செலவிடாமல் படிக்க வேண்டும் என்று எண்ணுகிற ஒரு எண்ணம் தமிழ்நாட்டில் உள்ளது.

ஒரு காலத்திலே படிக்கவேகூடாது என தடுக்கப்பட்டவர்கள்- இன்னொரு காலத்தில் படிக்க அனுமதிக்கப்பட்டவர்கள், அதற்குப் பின்னால் படிக்க வந்தவர்கள், படிக்க வந்தும் முழு அளவுக்கு தாங்கள் விரும்பும் அளவுக்கு படிக்க வாய்ப்பில்லாதவர்கள்- வாழ்க்கையிலே கூட போட்டிகளுக்கு ஈடுகொடுக்க முடியாதவர்கள்- எனவே இந்தப் பல்வேறு சூழ்நிலைகள் சேர்ந்து நூல்களுக்காக, புத்தகங்களுக்காக கைப் பொருளை செலவிடுகிற ஒரு மனப்போக்கு தமிழ்நாட்டு மக்களிடத்திலே சற்று குறைவு.

தீபாவளி கொண்டாடுவதற்கு பட்டாசுக்கு செலவழிக்கிற பணம்கூட தமிழ்ப் புத்தகத்திற்கு தமிழ்நாட்டில் செலவழிக்கப்படவில்லை. ஆனால் தீபாவளியை நம்முடைய பெருமக்கள் கண்டிக்கமாட்டார்கள். கண்டிக்கவும் மாட்டார்கள். கண்டித்தால் வருகிற வம்பை விலைக்கு வாங்கவும்மாட்டார்கள்.

ஆனால் பொருள் வீணாவதுகூட, ஒரு மகிழ்ச்சி அடிப்படையில், ஏதோ ஒரு பக்தி அடிப்படையில், உணர்வு அடிப்படையில், கைப்பொருளை செலவிடுவதற்கு அந்த நேரத்திலே மனம் வருகிறது. ஆனால் ஏடுகளை வாங்க புத்தகங்களை வாங்கசெலவழிக்க ஒரு மனப்பான்மை இல்லை. ஆனால் அது மெல்ல மெல்ல மாறும். மாறாது என்பதல்ல, சூழ்நிலை மாறுகிறபோது அதுவும் மாறும்.

புத்தகங்களை படிப்பதில் ஈடுபாடில்லை

அறிஞர் அண்ணா அவர்கள் ''வீட்டுக்கு ஒரு புத்தக சாலை வேண்டும்'' என்று மிக வலியுறுத்திச் சொன்னார்கள். புத்தக சாலை என்றால் பெரிய புத்தக சாலை அல்ல. ஒரு இருபது முப்பது புத்தகங்களை மட்டுமாவது தேர்ந்தெடுத்து வைத்திருக்கிற ஒரு மனப்பான்மை- தமிழர்களுக்கு வேண்டும். பல வீடுகளிலே 20, 30 புத்தகங்கள் கூட சேர்த்து வைக்கிற மனப்பான்மை கிடையாது. அப்படி புத்தகங்கள் வைத்திருக்கும் மனப்பான்மை இல்லாததன் மிக முக்கியமான காரணம், இந்த நூல் நமக்கு இன்றியமையாத நூல் என்ற- உணர்வு இல்லை. புத்தகங்களைப்பற்றி ஒரு பெரிய மதிப்பு இல்லை. கதை கேட்பதிலே இருக்கிற ஈடுபாடு நூல்களைப் படிப்பதிலே இல்லை. திண்ணையிலே அமர்ந்து நான்கு பேருடன் உரையாடிக் கொண்டிருப்பத்தில் இருக்கிற ஈடுபாடு புத்தகங்களைப் படிப்பதிலே இல்லை.

பேசுவதன் மூலமாகத்தான் தமிழ்நாட்டு மக்களிடம் சில எண்ணங்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. அது இளைஞர்களுக்கு விளங்க வாய்ப்பில்லை. என்னுடைய வயதுக்கு அதனுடைய தேவை எனக்குத் தெரியும். பெரியார் பேசாமல் இருந்திருந்தால் நாமெல்லாம் முட்டாள்களாகத் தான் இருந்திருப்போம். எனக்கு இப்பொழுது 74 வயது. பெரியார் மட்டும் இந்த நாட்டில் பேசாமல் இருந்திருந்தால் நாமெல்லாம் இந்த நாட்டில் மனிதர்களாகி இருக்க முடியாது. அறிஞர் அண்ணா பேசாமல் இருந்திருந்தால் நாம் தமிழர்களாக ஆகியிருக்கமாட்டோம். ஒரு வளர்ச்சி அந்த வளர்ச்சி நிலையை சமுதாயத்தில் அவர்கள்தான் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. பேச்சினுடைய பெரிய மதிப்பால் சொல்லவில்லை. பேச்சும் அடிப்படைகளில் தேவைப்படுகிற ஒன்றாக, கட்டாயமாக தேவைப்படுகிற ஒன்றாக, ஜனநாயகத்தைப் பாதுகாக்க இன்றியமையாத ஒன்றாக, ஒரு அடிப்படை உணர்வை ஏற்படுத்த தேவைப்படுகிற ஒன்றாக பேச்சு இருக்கிறது.

கிராம மக்கள் படிப்பதற்கு ஊக்கம்தர வேண்டும்

கிராமங்களிலே இருக்கிற மக்களுக்கு எந்த வகை யிலாவது படிப்பதற்கு ஊக்கம் தர வேண்டியது நம்முடைய கடமைகளிலே ஒன்று. அது ஜனநாயகக் கடமை. இரண்டாவது- அவர்களை நல்வழிப் படுத்துவதற்கான கடமை, மூன்றாவது- அவர்களுடைய நேரம் வீணாகாமல் பாதுகாப்பதற்கான கடமை, ஓய்வு நேரத்தை வீணாக்குகிற ஒரு கட்டாயமான நிர்பந்தத்தில் தமிழ்நாட்டில் ஏராளமானோர் இருக்கிறார்கள். முழு நேரம் பணி கிடையாது. உழைப்பு கிடையாது. அந்த முழு நேரம் உழைத்து ஒரு குறிப்பிட்ட வருமானத்தை அதனால், அதிகம் பெற்று விட முடியாத. இடையிலே இருக்கிற ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையிலே அவர்களால் செலவழிக்க முடியாது. அந்த நேரம்- அவர்களை தவறான பாதையில் இட்டுச் செல்கிறது. 'தவறான பாதை' என்றால் பயன்படாத பாதையில் சமூகக் கேடுதரக்கூடிய பாதையில் இட்டுச் செல்கிறது.

அந்த நிலையிலே உள்ள மக்களை எண்ணித்தான் நூலகங்களினுடைய தேவையை நாம் உணர வேண்டும். ஒரு பக்கம் கன்னிமாரா

நூலகங்களைப்போல, நாட்டுப்பெருமைசேர்க்கக் கூடிய நூலகம்- மிகப்பெரிய அறிவாளிகள் பயன்படுத்தக்கூடிய நூலகம் அறிஞர் அண்ணா போன்றவர்கள் பயன்படுத்தி பேரறிவு பெற்ற நூலகம் ஒரு பக்கம் வளர வேண்டும். இன்னொரு பக்கம், பரவலாக மக்கள் எங்கே ஒரு மணிநேரம் ஒய்வு கிடைத்தாலும் நூலகத்திலே வந்து அந்த நேரத்தை செலவிடக் கூடிய அளவுக்கு ஒரு புதுவாய்ப்பு, ஒரு இடம் அவர்களுக்கு கிடைக்க வேண்டும். கிராமங்களிலே வாழக்கூடிய மக்கள் ஜனநாயத்திலே முதுகெலும்பாக இருப்பவர்கள். அவர்கள் மட்டும் தீர்மானிக்கிற ஆற்றல் கொண்டவர்களாக இருப்பார் களேயானால் நாடு கெட்டே போகாது. சமுதாயம் இழிவடையாது. ஏமாற்றுவது- நாட்டினுடைய மேடைப் பேச்சாக இருக்காது கொள்ளைக்காரர்கள் அரசியல் நடத்த மாட்டார்கள்.

மக்கள் தெளிவடைய நூலக இயக்கம் வளர வேண்டும்

எனவே இவைகளுக்கெல்லாம் மூலமாக இருக்கிற அந்த மக்கள், தெளிவடைவதற்கு நூலக இயக்கம் வளர வேண்டும். அந்த நூலக இயக்கத்தினுடையபயனை அவர்கள் உணரும்படி சிற்றூர்களில்- பேரூர்களில் நூலக வார விழா நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டுமென்று நூலகத்துறை இயக்குனரிடத்திலே சொன்னேன், அதை அமைச்சர் கோ.சி.மணி அவர்களும் இங்கே பேசுகிறபோது வரவேற்றார்கள். இதை அடுத்து ஆண்டு உள்ளாட்சித் துறை மூலமாக ஒவ்வொரு ஒன்றியத்திலாவது கூடுமானால் ஒரு மாவட்டத்திலே ஒரு பத்து ஒன்றியத்திலாவது இந்த நூலக வார விழாவை நடத்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நூல்களைவிட சிறந்த நண்பர்கள்யாரையும் நாம் தேட முடியாது. எவ்வளவு நல்ல நண்பராக இருந்தாலும் அவர் நோக்கத்திற்கு நமது நேரத்தை எடுத்துக்கொள்வார். ஆனால் நூல்களாக இருக்குமானால்நாம்விரும்புகிறமுழு நேரத்தையும் அந்த நூல்களில் செலவழிக்க முடியும். நாம் விரும்புகிற நூலை எடுத்துப் படிக்க முடியும், விரும்புகிற கருத்தை சிந்தனையோடு நாம் நாட முடியும். அந்த ஆசிரியரின் கருத்தை நம்முடைய விருப்பத்திற்கு ஏற்ப நாம் ஏற்றுக்கொள்கிற முறையில் ஏற்றுக் கொள்ள முடியும்.

எனவே அதிலே இருக்கிற வாய்ப்பு வேறு எதிலும் கிடையாது. ஒரு மனிதன் சிந்தனை யாளனாவதற்கு சுய அறிவைப் பயன் படுத்துவதற்கு ஒரு மாறுபாடு இல்லாமல் தன்னுடைய கருத்தை வளர்த்துக் கொள்வதற்கு நூல்களை விட சிறந்த நண்பன் வேறு கிடையாது.

எனவே அப்படிப்பட்ட நூல்களைப் படிப்பதற்கு நூலக இயக்கம் தொடர்ந்து முயற்சி எடுத்துக் கொள்ளும்.

ஏறத்தாழ ஒரு ஆயிரம் கிளை நூலகங்கள் தமிழ் நாட்டில் உருவாக்கப்பட் வேண்டும். ஒரு மாவட்டத்திற்கு 50, 100 என்று கிளை நூலகங்களை ஏற்படுத்துவதன் மூலமாக ஒரு பத்தாண்டு காலத்தில்ஒரு 5000 கிளை நூலகங்கள் தமிழ்நாட்டில் உருவானால்தான்- அரசாங்கம் கல்விக்காக செலவிடுகிற பணம் வீணாகாமல் அந்த கல்வி ஓரளவு பெற்றவர்கள், தொடர்ந்து வளர்த்துக் கொள்ள அங்கங்கே அந்த வாய்ப்பை உருவாக்க முடியும்.

625 கிராமங்களில் நூலங்களை ஏற்படுத்த அரசு திட்டம்

அந்த முறையிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அந்தத் துறை அலுவலர்களுக்கும் கூட நான் தெரிவிக்க விரும்புகிறேன்; எந்தெந்த உள்ளாட்சி மன்றம்- மாநகராட்சி மன்றமோ, மாவட்ட ஊராட்சி மன்றமோஎவ்வளவுநிதிதருகிறதோ, தரவேண்டிய

முறைப்படி, சட்டப்படி நிதி தருகிறதோ- அந்த நிதியில் நூற்றுக்கு அறுபத்தைந்து பங்கு- எழுபது பங்கு அந்தப் பகுதிக்கே தான் செலவிடப்படும். உதாரணத்திற்கு, திருச்சி மாவட்டத்திலிருந்து ஒன்றரைக் கோடி ரூபாய் கிடைக்குமானால்- ஒரு கோடிக்குக் குறையாமல் அதே மாவட்டத்தில் அந்தந்த உள்ளாட்சி மன்றப் பகுதியில் நூலக வளர்ச்சிக்காக செலவிடப்படும்.

ஐநூறு, அறுநூறு கிளை நூலகங்களை ஏற்படுத்துவதற்கான திட்டம் அரசின் கையில் இருக்கிறது. எங்கெங்கே நூலகம் ஏற்படுத்தப்பட வேண்டுமோ, அந்த கிராம மக்கள் ஒரு இடத்தைக் காட்ட வேண்டும். தற்காலிகமாக நூலகம் வைப்பதற்கு ஒரு பழைய கட்டிடமோ ஒரு சிறிய அறையோ தரவேண்டும். அந்த சிறிய ஏற்பாடுகளை எல்லாம் அவர்கள் செய்து கொடுத்தால் பின்னர் அங்கே நூலகக் கட்டிடம் கட்டுவதற்குக்கூட முயற்சிக்கலாம். இந்த அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்கக் கூடிய 625 கிராமங்களில் கிளை நூலகங்கள் ஏற்படுத்துவது என்று தீர்மானித்திருக்கிறோம். அதை முறைப்படி செயல் படுத்துவோம் என்று இத்தருணத்தில் உறுதி கூறிக் கொள்கிறேன்.

நூற்றாண்டு விழாக் காணுகிற கன்னிமாரா நூலகம் போதுமான அளவு கட்டிட வசதி பெற்றிருக்கவில்லை. தமிழக அரசு ஏதேனும் ஒருவகையில் கட்டிட இணைப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருந்தோம். மத்திய அரசு - இது ஒரு தேசிய நூலகம் என்கிற முறையில் அதற்கான பணிகளை நிறைவு செய்வதற்கு ஒத்துழைக்க வேண்டும். ஒரு தேசிய நூலகம் என்ற அடிப்படையில் அதைச் செம்மைப் படுத்துவதற்கு, சீர்படுத்துவதற்கு, தேவையானால் நவீனப் படுத்துவதற்கு மிக உயர்ந்த சிறப்ப வேலைப்பாடுடைய தேக்கு மரத்தில் இழைக்கப் பட்ட பல்வேறு சிறப்புக்களை உடைய கன்னிமாரா நூலகம் அதன் எழில் குன்றாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அங்கே உள்ள நூல்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முயற்சியில் அரசு ஈடு பட்டுள்ளது. அதன் காரணமாக விரைவில் கன்னிமாரா நூலகம் ஒரு உயர்ந்த, சிறந்த, பயன்மிக்க ஒரு நூலகமாக விளங்குவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் உரையாற்றினார்.

படிக்கும் பழக்கம்

அஞ்சா நெஞ்சம் படைத்த மாவீரன் நெப்போலியன்; தன் வாழ்நாளில் பெரும் பகுதியைப் போரில் கழித்ததாக வரலாறு கூறுகிறது. போருக்குச் செல்லும்பொழுது தம்முடன் நிறைய நூல்களை எடுத்துச் செல்லும் பழக்கமும் இருந்ததாகவும் அறிய முடிகிறது. இந்நாட்களில் நூல்படிப்பதையே வெறுக்கும் மனிதர்களைத்தான் அதிகம் காணமுடிகிறது. ஏன் எழுத தயாராகும் தேர்வுக்குக்கூட மாணவன் கையில் பாடப் புத்தகத்தைக் காணமுடிவதில்லை.

செவியின் வழியாகக் கேட்டவற்றை எல்லாம், நெஞ்சில் நிறுத்தி அவற்றைத் திரும்பச் சொல்லும் இயல்பை அனைவரும் பெற்றிருக்கவில்லை. இந்தக் காரணத்தினால்தான் நூல் எழுதவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நூல்கள் படிப்பு மனிதனை முழுமையாக்குகிறது என்பது அறிஞர் பேக்கன் கருத்து. நாம் வாழும் நாட்களோ குறைவு இக்காலத்தில் பயனற்ற நூல்களைப் படித்து வாழ்க்கையை வீணாக்காமல் நல்ல நூல்களைப் படிக்க வேண்டும்.

வாசகர்கள் கருத்துரைகள்

புத்தக மதிப்புரை வரப்பெற்றோம்

பொது நூலகச் செய்தி மடல் (காலாண்டு இதழ்) வெளியீடு : இயக்குனர், பொது நூலகத்துறை, சென்னை - 6.

பொது நூலகத்துறையினரின் நல்ல - பயனுள்ள - முயற்சியாக, இச்செய்திமடல் - மலர்ந்துள்ளது. நூலகத்துறை தமிழகத்தில் ஆற்றிவரும் நறபணிகளை பொது நூலக இயக்குனர் இரா. கண்ணன் தம் கட்டுரையில் நன்கு விளக்கியுள்ளார். டாக்டர் சி. பழனிவேலு, இரா. முத்துக்குமாரசாமி, திருமதி சுசிலா கணேசன், திருமதி. ஷெரீன் அகமது, பேராசிரியர் திருக்குறள் க. பாஸ்கரன், கோ. ஜெகதீசன், கொ.செ. ஞானதேவ், டாக்டர் மலையமான் மற்றும் பலரின் கட்டுரைகள் மடலை மணம் வீசச் செய்கின்றன. தமிழகத்தில் நூலகத்துறையின் அரிய பணிகள் குறித்தும், நூலகக்கல்வியின் தேவை குறித்தும், அறிய இச்செய்திமடல் நன்கு உதவும். நூலகம் செல்வோர், கேட்டு வாங்கிப் படிக்க வேண்டிய நூலாக இது அமைந்துள்ளது.

-நன்றி
தினமலர், சென்னை - 2.

அன்வுடையீர்!

வணக்கம்

இன்று தினமலர் ஏட்டில், புத்தக மதிப்புரையில், பொது நூலகச் செய்திமடல் (காலாண்டிதழ்) பற்றிய மதிப்பீடு படித்தேன் இயக்குநர் இரா. கண்ணன் அவர்களின் கட்டுரை, நூலகத்துறை பற்றியறிய வேண்டிய தகவல்களை உள்ளடக்கியுள்ளது என்பதை அறிய முடிந்தது.

நன்றி

- இளம்பிறை எம்.ஏ. ரக்மன்

''தமது பார்வை''

திருமிகு **இரா. கண்ணன்,** எம்.ஏ., பிஎட்.,
பொது நூலக இயக்குநர்
பொது நூலக இயக்கம்,
737/1, அண்ணா சாலை, சென்னை - 600 002.

பெருந்தகையீர்

வணக்கம். தங்களைத் தலைமைப் பதிப்பாசிரியராகக்கொண்டு வெளிவரும் ''பொது நூலகச் செய்தி மடல்'' கண்டு கழிபேருவகை கொண்டேன். நீண்டநாள் தேவையைத் தாங்கள் இப்போது நிறைவேற்றியுள்ளீர்கள். ''தமிழ்நாட்டின் பொதுநூலகப் பணியின் வளர்ச்சி'' குறித்துத் தாங்கள் எழுதிய கட்டுரையால், வாசகர்கள், பல அரிய செய்திகளைத் தெரிந்து கொள்ளக்கூடும். நூலகங்களைப் பற்றிப் பல்வேறு சுவையான கட்டுரைகளும் இதழை அணிசெய்கின்றன.

எமது ''தமிழ் மாருதத்'' தில் ''நூல் நிலையம் நாடு'' என்ற தலைப்பில் சில மாவட்ட நூலகங்களைப்பற்றியும் அவை செய்துவரும் சேவைகள்பற்றியும் வெளியிட்டதைத் தாங்கள் அறிந்திருக்கலாம்.

''பொதுநூலகச் செய்திமடல்'' இன்னும் பல்வேறு சிறப்புக் கட்டுரைகளைத் தாங்கித் தமிழுலதிற்குப் பெரும்பயன் நல்கவேண்டும் என விழைகின்றேன்.

மதுரைமாவட்ட நூலக ஆணைக்குழுத் தோன்றியகாலத்து முதல்முதலில் அதிற் பணியிற் சேர்ந்து, தமிழ்ப்பற்றின் காரணமாகத் தமிழாசிரியப்பணி மேற்கொண்டவன் என்று தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வாழ்த்து

''நூலகச் செய்திம்டல் நூனயம் போல்மிளிரும்
சீலமுடன் பேர்சொல்லச் செய்திடவும் வேண்டு
மென்பேன்! கண்ணன் சுருணையினால்
காலமெல்லாம் ஓங்கிடவே எண்ணி இறைஞ்சுவன்
இன்று'' வாழ்க பொதுநூலகச்செய்திமடல். நன்றி.

- க. சாம்பசிவனார்

இதுவரை ஒலிம்பிக் நடைபெற்ற இடங்கள்

1896	ஏதென்ஸ், கிரேக்கம்
1900	பாரிஸ், பிரான்சு
1904	செயிண்ட் லூயி, அமெரிக்கா
1906	ஏதென்ஸ், கிரேக்கம்
1908	லண்டன், இங்கிலாந்து
1912	ஸ்டாக்ஹோம், ஸ்வீடன்
1920	அண்டவெர்ப், பெல்ஜியம்
1924	பாரிஸ், பிரான்சு
1928	அம்ஸ்டர்டாம், நெதர்லாந்து
1932	லாஸ் ஏஞ்சல்ஸ், அமெரிக்கா
1936	பெர்லின், ஜெர்மனி
1948	லண்டன், இங்கிலாந்து
1952	ஹெல்ஸிங்கி, பின்லாந்து
1956	மெல்போர்ன், ஆஸ்திரேலியா
1960	ரோம், இத்தாலி
1964	டோக்கியோ, ஜப்பான்
1968	மெக்சிகோ நகரம், மெக்சிகோ
1972	ம்யூனிச், ஜெர்மனி
1976	மாண்ட்ரியல், கனடா
1980	மாஸ்கோ, சோவியத் யூனியன்
1984	லாஸ் ஏஞ்சல்ஸ், அமெரிக்கா
1988	சியோல், தென்கொரியா
1992	பார்சிலோனா, ஸ்பெய்ன்
1996	அட்லாண்டா, அமெரிக்கா

அடுத்த ஒலிம்பிக் : 2000 சிட்னி, ஆஸ்திரேலியா

நூலகப் பராமரிப்புப் பொன்னுரைகள்

1. நூல்களை எப்பொழுதும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.
2. நூல்களில் கண்டபடி எழுத்துக்கள் மறையும்படி கோடிடக் கூடாது.
3. பேனா, போன்றவைகளைக் கொண்டு கோடிடக் கூடாது. பென்சிலால் மட்டும் நூலில் தேவையான கருத்துக்களை தாள்களில் எழுதிக் கொள்ளலாம்.
4. படித்தபக்கம் அறிந்து கொள்ள அந்த பக்கத்தின் தாளை மடித்து வைக்கக் கூடாது. ஒரு அடையாள குறியீடு அட்டை வைத்து உரிய பக்கத்தை உடனே அறிந்து கொள்ளலாம்.
5. மை நூல்களில் கொட்டிவிடாமல் பாதுகாக்க வேண்டும்
6. மழைக் காலங்களில் நூல்களை நூலகத்திலிருந்து பெற்றுச் செல்லும் பொழுதும், மீண்டும் கொண்டுவந்துதரும் பொழுதும் மழையினால் நூலில் ஈரம் படாமல் இருக்க பாலித்தின் கவர்களில் நூல்களைப் பாதுகாப்பாகக் கொண்டு வரவேண்டும்.
7. நூல்களைப்படிக்கும் பொழுது நூல்களை முழுவதுமாக மடித்து அதன் கட்டுமானம் பழுதாகும் வகையில் நூல்களைக் கையாளக் கூடாது.

கன்னிமாரா பொது நூலகம்

நூற்றாண்டு கண்ட நூலகம்

ந. ஆவுடையப்பன்
நூலகர்
கன்னிமாரா பொது நூலகம்

தோற்றம் :

மனித வள மேம்பாட்டிற்காக, நூலகப் பணியின் அவசியத்தை உணர்ந்து அப்பணிக்காக, செலவிடப்படுகின்ற தொகை அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது என்றால் அது மிகையல்ல. உண்மைதான். சிறந்த நூலகப் பணியின் மூலம் மிகத் தரம் வாய்ந்த மனித ஆற்றலை உருவாக்க முடியும். மேலை நாடுகளில் இந்நிலையை உறுதிப்படுத்தி யிருக்கிறார்கள். மிகத் தரம் வாய்ந்த மனித ஆற்றலினால் ஒரு நாட்டின் வளரச்சிக்கு தேவையான உயர்ந்த சூழலை ஏற்படுத்த முடியும். அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, பிரான்சு போன்ற முன்னேறிய நாடுகள் பரந்த நூலகப் பணியின் அவசியத்தை நூறாண்டுகளுக்கு முன்னரே தெளிவாக நன்குணர்ந்து நாட்டு மக்களுக்கு சிறந்த நூலகப் பணியை வழங்கி அந்நாட்டு மக்களின் அறிவுத் திறன் மேம்பட உதவியுள்ளன.

நூலகப் பணியின் அவசியத்தை அறிவு பூர்வமாக அறிந்த அன்றைய சென்னை மாநில ஆளுநர் (1886-1890) கன்னிமாரா பிரபு அவர்கள் உண்மையான முதல் பொது நூலகத்தை சென்னையில் நிறுவ எண்ணினார். எண்ணத்தோடு நின்று விடாமல் செயலிலும் இறங்கினார். அதன் விளைவாகத்தான் நூலகப் பணியில் நூறாண்டு காணும் கன்னிமாரா பொது நூலகத்திற்கான அடிக்கல் 1890-ம் ஆண்டு மார்ச் திங்கள் 22ம் நாள் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டி விழாவில் கன்னிமாரா பிரபு ஆற்றிய உரை அற்புதமானது. பொது நூலகத்தின் தேவையையும், அவசியத்தையும் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"It has been for a long time, the wish of my colleques and myself to see a free Public Library establised in Chennai; We have recognised it for a long time as one of the most urgent wants of the educated people of this Presidency Town. In all populous places a free Public Library is a very great boon, and I am quite sure that where a great number of students and educated natives of India have not got the means of providing themselves with the books that one needed for their study, in their business, a want of this kind is very deeply felt. I trust that this want will be supplied by this free Public Library".

சென்னையில் பொது நூலகம் நிறுவ செயல்பட்ட ஆளுநர் கன்னிமாரா பிரபுவின் செயற்கரிய செயலின் நினைவை நெஞ்சில் தமிழக மக்கள் என்றென்றும் தாங்கி நிற்கும் வண்ணம் நூலகக் கட்டிடம் கட்டப்பட்டு பொது மக்களுக்காக

அர்ப்பணித்த 5.12.1896-ம் நாளில் கன்னிமாரா பிரபுவின் பெயர் சூட்டப்பட்டு தமிழகத்தின் முதல் அரசுப்பொது நூலகமாக கன்னிமாரா பொது நூலகம் திகழந்து வருகிறது.

கட்டடம்

இந்நூலகக் கட்டிடம் எச். இர்வின் என்ற கட்டிடக் கலை நிபுனரால் வடிவமைக்கப்பட்டது. இருபுறமும் அரைவட்ட வடிவம் கொண்ட செவ்வக வடிவில் ஆங்கிலோ-இத்தாலிய நடையில் கட்டப்பட்டது. அழகிய வேலைப் பாடுகள் கொண்ட தேக்குமர புத்தக அலமாரிகளைக் கொண்ட பிரம்மாண்டமான, அற்புதமான சிறந்த வேலைப்படுகளுடன் கூடிய பரந்த படிக்கும் அறை இதன் தனிச் சிறப்பாகும். இதன் கூரை அழகு நமது கண்களுக்கு விருந்தாகும். வேலைப்பாடுகளுடன் கூடிய இலைகள் மற்றும் பூக்கள் இக்கட்டிடத் தூண்கள், ஜன்னல்கள் மற்றும் நூல் அடுக்குகளை அலங்கரிக்கின்றன. ஆந்திர மாநில கிருஷ்ணா மாவட்டத்திலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக மரக்கலங்களின் மூலம் கொண்டு வரப்பட்ட சலவைக் கற்கள் தரையை அலங்கரிக்கின்றன.

இந்நூலகத்தின் தென் பகுதியில் 1905-ம் ஆண்டுவரை ''சென்னை இலக்கிய சங்க நூலகம்'' செயல்பட்டு வந்தது. சென்னை இலக்கியச் சங்க நூலகம் நுங்கம்பாக்கத்திலுள்ள கல்லூரிச் சாலைக்கு தற்போதுள்ள இடத்திற்கு இடம் பெயர்ந்தபோது ஏற்பட்ட காலிப்பகுதியில் சென்னைப் பல்கலைக்கழக நூலகம் 1928-ம் ஆண்டு வரை கன்னிமாரா பொது நூலகக் கட்டிடத்திலேயே செயல்பட்டு வந்தது. இந்திய நூலக இயக்கத்தின் தந்தையான டாக்டர். எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழக நூலகராக, கன்னிமாரா பொது நூலகக் கட்டிடத்தில் நூலகராகப் பொறுப்பேற்று பணியாற்றினார் என்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.



நூறாண்டு கண்ட கன்னிமாரா பொது நூலகத்தின் எழில்மிகு தோற்றம்

1952-ம் ஆண்டில் அதிக வாசகர்கள் படிப்பதற்கு ஏற்ப தேக்கு மரத்தலான சேந்தி ஒன்று இக்கட்டிடத்தில் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் பெருகி வந்த நூல்களை முறையாக வைப்பதற்கும், படிக்க அதிகமாக வரும் வாசகர்களை சமாளிக்கவும் மூன்றடுக்கு புதிய கட்டிடம் ஒன்று 50,000 ச.அடி. பரப்பளவில் கட்டப்பட்டு 1.4.1974 முதல் செயல்பட்டு வருகிறது.

வளர்ச்சி

1896-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் தொடங்கப்பட்ட கன்னிமாரா பொது நூலகம், அரசு அருங்காட்சியகத்தின் ஒரு பிரிவாக செயல் பட்டு வந்தது. நூலகத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு கன்னிமாரா பொது நூலகத்திற்கு முழு நேர நூலகராக திரு.ஆர். ஜனார்த்தனம் நாயுடு அவர்கள் 1929-ம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டார். இவரே இந்நூலகத்தின் முதல் இந்திய நூலகராவார். இவருக்கு முன்னர் ஆங்கிலேயர்களே இந்நூலகத்தின் பொறுப்பினை ஏற்று வந்துள்ளனர். திரு. ஆர். ஜனார்த்தனம் நாயுடு அவர்கள் பிற்காலத்தில் சென்னைப் பல்கலைக்கழக நூலகராகவும் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறையின் முதல் நூலக சிறப்பு அலுவலராகவும் (Special Officer for Libraries) பணியாற்றிய பெருமை பெற்றவர் ஆவார்.

திரு.ஆர். ஜனார்த்தனம் நாயுடு அவர்கள் நூலகராக இருந்த காலத்தில், கன்னிமாரா பொது நூலகம் அருங்காட்சியகத்திலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டது. பின்னர் நூலகத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் நிறுவனமாக 1.4.1939 முதல் செயல்பட்டு வந்தது. தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948-ல் இயற்றப்பட்டு தமிழகமெங்கும் நூலகவரி வசூல் மற்றும் அரசு நிதி உதவியுடன் பொது நூலகங்கள் தொடங்க வகை செய்யப்பட்டது. இச்சட்டமே இந்தியாவில் இயற்றப்பட்ட முதல் பொது நூலகச் சட்டமாகும். இந்த முதல் பொது நூலகச் சட்டத்தின்படி, கன்னிமாரா பொது நூலகம் 1950ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் முதல் மாநில மைய நூலகமாக அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் (பொது நூலகங்கள்) விநியோகச்சட்டம், 1954 ன்படி கன்னிமாரா பொது நூலகம் இந்தியாவிலுள்ள நான்கு தேசிய நூலகங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி இந்தியாவில் அனைத்து மொழியிலும் வெளியாகும் நூல்கள் மற்றும் பருவ இதழ்களின் ஒரு படியை கன்னிமாரா பொது நூலகம் இலவசமாகப் பெறும் தகுதியை பெற்றுள்ளது. கல்கத்தாவிலுள்ள தேசிய நூலகம். மும்பையிலுள்ள 'மத்திய நூலகம்' மற்றும் புது தில்லியிலுள்ள 'தில்லி பொது நூலகம் ஆகிய மூன்று நூலகங்களும் பிற தேசிய நூலகங்களாக நூல்கள் விநியோகச் சட்டத்தின்படி அறிவிக்கப்பட்டவைகளாகும்.

1955 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் நிறுவன நூல்கள் தகவல் மையமாகவும், 1965 ம் ஆண்டு முதல் யுனெஸ்கோ நிறுவன தகவல் மையமாகவும் செயல்பட்டு வருகிறது. 1992 ம் ஆண்டு முதல் ஆசிய வளர்ச்சி வங்கி வெளியீடுகளின் தகவல் மையமாகவும் செயல்பட்டு வருகிறது.

நூல் இருப்பு

அரசு அருங்காட்சியக நூலகத்திலிருந்தும் தலைமைச் செயலக நூலகத்திலிருந்தும் கன்னிமாரா பொது நூலகத்திற்கு ஆரம்பகாலத்தில் நூல்கள் பெறப்பட்டன. இவற்றோடு ஆண்டு தோறும் அரசு வழங்கிய நிதியிலிருந்து நூல்களும், பருவ இதழ்களும் வாங்கி நூல் இருப்பில் சேர்க்கப்பட்டன. இராவ் பகதூர் ஆற்காடு தனகோடி முதலியார் அவர்கள் அன்பளிப்பாக வழங்கி ரூ.20,000/- நிதியிலிருந்து வாங்கப்பட்ட நுண்கலை தொடர்பான நூல்களும் இருப்பில் சேர்க்கப்பட்டன. பின்னர் நூல் விநியோகச்

சட்டத்தின் மூலமும், ஐக்கிய நாடுகள் நிறுவனம், யுனெஸ்கோ நிறுவனம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி மூலமும் பெறப்பட்ட நூல்கள் நூல் இருப்பில் சேர்க்கப்பட்டன. 1950-51 ம் ஆண்டில் 74,000/- ஆக இருந்த நூல் இருப்பு 1995-96ம் ஆண்டில் 5.14 இலட்சமாக உயர்ந்தது. நூலகத்தில் கிடைப்பதற்கு அரிதான நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. சான்றாக சில நூல்கள்

1. The Bible, 1608.
2. Hortus Indicas Malabaricus 12 Vol.1670-1703.
3. Flora Indica, 1768.
4. Memoris of Zahir-Ed-Din Muhammad Baber, 1826.
5. Besclis Grammer of the high dialect of the Tamil language, 1882.

இந்நூலகத்திலுள்ள நூல் இருப்பு உயர்கல்வி கற்கும் மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள், அறிவாய்ந்தவர்கள், தொழில் முனைவோர்கள், அரசியல் அறிஞர்கள், ஆட்சியாளர்கள் போன்றவர்களுக்கு வரப்பிரசாத மாகும்.

பணிகள்

இந்நூலகம் பொதுமக்கள் பயன்படுத்து வதற்கு வழி செய்யப்பட்டதற்கு முன்னர், அரசு அருங்காட்சியக நூலகமாக அருங்காட்சியக அலுவலர்கள் பயன்படுத்தும் குறிப்புதவி நூலகமாக பணியாற்றி வந்தது. 1896-ம் ஆண்டு முதல் பொதுமக்கள் பயன்படுத்தும் நூலகமாக மூடிய அடுக்கு முறையில் (closed Access) 1930-ம் ஆண்டுவரை செயல்பட்டு வந்தது. பின்னர் வாசகர்களே நூலடுக்கிற்குச் சென்று தங்களுக்குத் தேவையான நூல்களை தாங்களே தேர்வு செய்ய வசதியாக திறந்த அடுக்கு முறை திரு. ஆர். ஜனார்த்தனம் நாயுடு அவர்களால் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் மூடிய அடுக்கு முறையில் வாசகர்கள் தங்களுக்குத் தேவையான நூல்களை பெறுவதற்கு நூலக அலுவலர்களின் சேவையை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலை அடியோடு களையப்பட்டது. பொது நூலகப் பணியில், 1930ம் ஆண்டில் திறந்த அடுக்குமுறை (Open Access) அறிமுகப் படுத்தப்பட்டது வரலாற்று சிறப்பு நிகழ்ச்சி என்றே சொல்லாம். இன்றைக்கும் தமிழகத்திலுள்ள பொது நூலகங்கள் அனைத்துமே திறந்த அடுக்கு முறை யில் செயல்பட்டு வருவது இங்கு நினைவு கூறத்தக்கதாகும்.

மேலும், 1930 சனவரித் திங்கள் முதல் நாள் அன்று கன்னிமாரா பொது நூலகத்தின் நூல் இரவல் பணி தொடக்கப்பட்டது. இன்றைக்கு பல்வேறு முக்கிய பணிகளில் தலையாய பணியாக நூல் இரவல் பணி திகழ்கின்றது. நூலகத்திற்கு வந்து நூல் இரவல் பெற இயலாத பிரிவைச் சார்ந்த மக்களும் நூலக பணியை பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் அவர்கள் வீட்டிலேயே நூல்கள் இரவல் வழங்கி திரும்பப்பெறும் ''வீடு வழி நூல் விநியோகப் பணி'' யும் 1930 ம் ஆண்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், ஆண்டேடுகள், கையேடுகள் போன்ற குறிப்புதவி நூல்களைக்கொண்ட குறிப்புதவிப் பிரிவு ஒன்று சுமார் 20,000 நூல்களைக்கொண்டு குறிப்புதவிப் பணியாற்றி வருகிறது.

மாணவர்கள் நலன் கருதி தனியாக பாடநூல் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவில்

அனைத்து துறை சார்ந்த பாடநூல்கள் சுமார் 35,000 நூல்கள் உள்ளன. இப்பிரிவில் குறிப்புதவிக்காக ஒரு படியும், நூல் இரவலுக்காக இரண்டு படிகளும் வைக்கப்பட்டுள்ளன.

நூலகத்திலுள்ள நூல்கள் மற்றும் பருவ இதழ்களிலிரந்து தேவையான பகுதிகளை நகல் எடுப்பதற்கென்றே ''நகல் எடுக்கும் பிரிவு'' ஒன்று செயல்பட்டு வருகிறது. நகர் எடுக்க பிரதிக்கு 0.75 காசுகள் வசூலிக்கப்படுகிறது.

நூல்கள் மட்டுமே இன்றைய அறிவியல் உலகத்தில் போதிய செய்திகளை வழங்க இயலாது என்பதை நன்குணர்ந்த நூலகம் ''ஒலி-ஒளி பிரிவின்'' (Video Section) மூலம் கல்விப் பணி ஆற்றி வருகிறது.

படித்து பட்டம் பெற்ற மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக் கொள்ள முனைவது இன்று அனைவரிடமும் காணப்படுகிறது. போட்டிகள் நிறைந்த உலகில் அறிவுத்திறன் உள்ளவர்கள் மட்டுமே வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்ற நிலையை மாணவர்கள் குறிப்பாக பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்கள் மற்றவர்களை விட நன்குணர்ந்துள்ளார்கள். இவர்களுக்கு வடிகாலாக அமைவது அறிவுத் திறனை பெருக்க உதவும் நூல்கள் மட்டுமே. எந்தப் போட்டித் தேர்வானலும் போட்டித் தேர்வுக்கு நன்கு தன்னை தயார்படுத்திக் கொள்ளாத மாணவன் வெற்றி என்ற இலக்கை இலகுவாகப் பெற இயலாது. நல்ல நூல்களை நாடிச் சென்று படிப்பது பல மாணவர்களுக்கு அருகிலேயே இருந்து வருகிறது. இந்நிலையை நன்குணர்ந்த இந்நூலகம் படித்த மாணவர்கள் அதிகம் பயன்பெற வேண்டும்; அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக ''குடிமைப் பணி கல்வி மையம்'' ஒன்றை இந்தியன் வங்கி மற்றும் தமிழ்நாடு பாடநூல் கழகம் ஆகியவற்றின் நிதி உதவியோடு 1994-ம் ஆண்டு தொடக்கியது. இம்மையத்தில் சுமார் 4000 நூல்கள் போட்டித் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் பயனுக்காக மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. இந்நூல்கள் தவிர முப்பதுக்கும் அதிகமான தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களும் இப்பிரிவில் பயன்பாட்டிற்காக வாங்கப்பட்டு வருகின்றன. இம்மையத்தை நாள்தோறும் சராசரியாக 150 மாணவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இம் மையமே தமிழகத்தில் முதலில் தொடக்கப்பட்ட குடிமைப்பணி கல்வி மையமாகும். இம்மையத்தில் வெற்றியினைத் தொடர்ந்து குடிமைப்பணி கல்வி மையங்கள் பல்வேறு மாவட்டங்களில் உள்ள முக்கிய நகரங்களில் உள்ள மாவட்ட நூலக ஆணைக்குழு நூலகங்களில் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் செயல்பட்டு வருகின்றன.

சமுதாயத்தில், உடல் ஊனமுற்றவர்கள் நலிந்த பிரிவினர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு பல்வேறு வகைகளில் அரசும், அரசு சாராத அமைப்புகளும் பல்வேறு நலப்பணிகளை நிறைவேற்றி வருகின்றன. உடல் ஊனமுற்றோர்கள் குறிப்பாக பார்வையற்றோர் அதிக அளவில் அடுத்தவர்களை நம்பி வாழ்க்கை நடத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். இவர்களுக்கு நூல் அறிவு கிடைப்பதற்காக இந்நூலகத்தில் தனியாகப் ''பார்வையற்றோர் மற்றும் பேசும் நூல்கள்'' பிரிவு ஒன்று தேசிய பார்வையற்றோர் சங்கத்தின் சென்னைக் கிளையின் ஆதரவோடு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில் பார்வை யற்றோர் பயன்படுத்து

வதற்குத் தேவையான ப்ரெய்லி நூல்கள், ஒலி நாடாக்கள் வைக்கப்பட்டுள்ளன.

1930ம் ஆண்டிற்கு முன்னர் பதிப்பிக்கப்பட்ட நூல்கள், நுண்கலை நூல்கள், பருவ இதழ்களின் பழைய பிரதிகள், மத்திய மற்றும் மாநில அரசிதழ்கள், சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புகள், அரசு வெளியீடுகள் போன்ற முக்கிய நூல்கள் தொடர்பான குறிப்புதவிப் பணி நூலகத்தின் பழைய கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. இக்கட்டிடத்திற்குச் செல்ல புதிய கட்டிடத்தின் முதல் தளத்தில் இணைப்பு வழி அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள நூல்கள் வாசகர்களின் விண்ணப்பத்திற்கிணங்க நூலக அலுவலர்களால் குறிப்புதவிக்கு வழங்கும் பணி நடைபெறுகிறது.

இந்நூலகம் மாதந்தோறும் ''தமிழ்நாடு மாநில நூற்றொகை'' ஒன்றினை தமிழ் நூல்களுக்கா 1964 ம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகிறது. இந்நூற்றொகை மாவட்ட நூலக ஆணைக்குழு நூலகங்கள் தங்கள் நூல்களை பகுக்கவும், பட்டியிடவும் பெரிதும் பயன்படுகிறது. நூல் தேர்வு மற்றும் குறிப்புதவி பணிக்கும் இந் நூற்றொகை பயன்படுகிறது.

புதிய நூலகக் கட்டிடத்தின் தரைத் தளத்தில் 1930 ம் ஆண்டிற்குப் பின்னர் பதிப்பான ஆங்கில நூல்கள் வாசகர்களின் பயனுக்காக வைக்கப்பட்டுள்ளன. முதல் தளத்தில் நூல்கள் விநியோகச் சட்டத்தின் கீழ் பெறப்படும் ஆங்கிலம் மற்றும் பிற இந்திய மொழிகளைச்சார்ந்த சுமார் 250 நாளிதழ்கள் மற்றும் 3500 பருவ இதழ்கள் கொண்ட ''பருவ இதழ் பிரிவு'' செயல்பட்டு வருகிறது. இரண்டாம் தளத்தில் இந்திய மொழிகளில் வெளியான நூல்களின் அடுக்கு அறை செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவில் சுமார் 1.5 இலட்சம் நூல்கள் இருப்பில் உள்ளன. இப்பிரிவை அனைத்து மாநில மக்களும் பயன்படுத்தி வருவது தேசிய ஒருமைப்பாட்டிற்கு சான்றாக திகழ்கிறது.

நூலகத்தைப் பயன்படுத்துதல்

இத்தகைய பெருமை வாய்ந்த இந்நூலகத்தை பயன்படுத்துவது எப்படி என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. நீங்கள் 15 வயதிற்கு மேற்பட்டவராக இருந்து சென்னை மற்றும் சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதியில் வசிப்பவராக இருந்தால் நூலகத்தில் உறுப்பினராகி நூல்களை இரவல் பெற்றுச் செல்லலாம். நாங்கள் தான் சென்னையில் வசிக்கவில்லையே, பின்னர் எப்படி இந்நூலகத்தைப் பயன்படுத்துவது என்று வருந்தத் தேவையில்லை. நீங்கள் சென்னையிலிருக்கும் போது இந்நூலகத்திற்கு வந்து இங்குள்ள நூல்களைப் பயன்படுத்துவதற்கு எந்தவித தடையுமில்லை நீங்கள் நூல் இரவல் பெற விரும்பினால் உங்கள் ஊரிலுள்ள கிளை நூலக நூலகரை அணுகி 'நூலகங்களுக்கிடையிலான நூல் இரவல் பணி'' மூலம் நூல்களை இரவல் பெறலாம்.

நூலக உறுப்பினராக சேர விரும்பும் சென்னை வாழ் மக்கள் நூல் காப்புத் தொகையான மூன்று நூல்கள் இரவல் பெற ரூ.150/- கட்ட வேண்டும். அதோடு ஆண்டு சந்தாவாக ஒவ்வொரு நிதி ஆண்டிற்கு ரூ.25 செலுத்த வேண்டும். இந்நூலகம் வார நாட்களில் காலை 9.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை இடைவெளியின்றி செயல்படுகிறது. ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை செயல்படுகிறது. ஆண்டிற்கு

ஒன்பது நாட்கள் மட்டுமே இந்நூலகத்திற்கு விடுமுறையாகும். அவை முறையே மூன்று தேசிய விடுமுறை நாட்கள் மற்றும் பொங்கல் பண்டிகை, தமிழ் வருடப்பிறப்பு, சரஸ்வதி பூஜை, அயுதபூஜை தீபாவளி மற்றும் கிற்ஸ்துமஸ் ஆகிய ஆறு பண்டிகை நாட்களாகும்.

வருங்காலத் திட்டங்கள்

நூலகத்தின் பல்வேறு பிரிவுகளை கணிப்பொறி மூலம் இணைத்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக "Malibnet" மற்றும் "Internet" தொடர்பு வசதிகளை ஏற்படுத்தி வாசகர்களுக்கு சிறப்பு பணி புரியவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நூலகத்திலுள்ள அரிதான நூல்களை நுண்படமாக்கி பாதுகாக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

1996-97-ம் ஆண்டு நூலகத்தின் நூற்றாண்டு ஆகும். இந் நூற்றாண்டை சிறப்புற கொண்டாட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நூற்றாண்டு நினைவு தபால் தலை வெளியிடுதல் மற்றும் பெருகி வரும் தேவையை முன்னிட்டு நூலகத்தின் முன்பகுதியில் புதிய நூற்றாண்டு நினைவு நூலகக் கட்டிடம் ரூ.420 இலட்சம் செலவில் கட்ட திட்டமிடப் பட்டுள்ளன.

மக்கள் பங்கு

எந்த ஒரு பொது நிறுவனமும் வெற்றிகராமாகச் செயல்பட பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். குறிப்பாக பொது நூலகங்களுடைய வெற்றிக்கு அடிப்படை, நூலக இயக்கத்தில் பொதுமக்கள் காட்டுகின்ற ஆர்வமும், அக்கறையுமே ஆகும். ஈடுபாடும், அக்கறையும் நிறைந்த மக்கள் நூலக உடைமைகளை கவனத்துடன் பயன்படுத்தி நூலகப் பணிக்கு உதவ வேண்டும். ஆர்வமுள்ள பொதுமக்கள் நூலக வளரச்சிக்கு நன்கொடை வழங்கி நூலக இயக்கத்தை வெற்றி பெறச் செய்யலாம். நூலக ஆர்வலர்கள் நன்கொடையாக நூலக வளரச்சிக்கு வழங்கும் தொகைக்கு வருமானவரிக்கு விலக்கு வழங்கப்பட்டுள்ளது நூலகங்கள் ஜாதி, மத, இன, ஏழை, பணக்காரன் என்ற எந்தவித பாகுபாடுமின்றி பணியாற்றும் ஒரு சிறந்த அமைப்பாகும். நூலகத்திற்கு வழங்கப்படும் நன்கொடை அனைத்து தரப்பு மக்களையும் சென்ற டையும் என்பதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லை. நூலக ஆர்வலர்கள் நூலக வளரச்சிக்கு தாராள நன்கொடை வழங்கி நூலகத்தை பெருமைப்படுத்துவதோடு தங்களையும் உயர்த்திக் கொள்ளலாம். தொழில் அதிபர் திரு.நல்லி குப்புசாமி செட்டி அவர்கள் கன்னிமாரா பொது நூலக வளர்ச்சிக்கு 1991ம் ஆண்டு மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் பேரர்சிரியர் க. அன்பழகன் அவர்களிடம் ரூ.1 லட்சம் நன்கொடையாக வழங்கியது இங்கு குறிப்பிடுவது சாலப்பொருத்தமாகும்.

> "A GOOD BOOK IS THE PRECIOUS LIFE BLOOD OF A MASTER-SPIRIT, EMBALMED AND TREASURED UPON PURPOSE TO A LIFE BEYOND LIFE
>
> (John Milton)

பள்ளிகளில் நூலகங்கள்

பள்ளிகளில் நூலகங்களின் தேவை

பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் நூலகங்களை தங்களின் மாணவப் பருவத்திலிருந்தே பயன்படுத்திக்கொள்வதற்கான ஈடுபாட்டை பள்ளி நூலகம் ஏற்படுத்துகிறது. ஆசிரியர்கள் கற்றுத்தரும் பள்ளி பாடங்களில் ஏற்படும் ஐயப்பாடுகளையும், தெளிவான கருத்துக்களையும், விரிவான தகவல்களையும் மேலும் மேலும் அறிந்து கொள்வதற்கும், உடனடியாக பள்ளி நூலகத்திலேயே அதறகான பதில் களையும் பெற்று விடமுடிகிறது. உடனடி குறிப்பு நூல்களான கலைக்களைஞ்ஞி யங்கள், அகராதிகள், உலக வரை படங்கள், வினாடி வினா நிகழ்ச்சிகள் எனப் பல பொதுவான கருத்துக்களை பள்ளி நூலகத்திலேயே பெற்றுவிட முடிகிறது. குறிப்பாக பள்ளி நூலகங்கள் மாணவர்களின் படிக்கும் பழக்கத்தை அதிகமாக்கவும், அவர்களை மேலும் மேலும் படிக்க ஆர்வத்தை தூண்டு வதற்காகவும், தங்களுக்கென ஒரு நூலகம் பள்ளியில் இருக்கிறது என்ற எண்ணத்தில் அவர்களுக்கு நூலகத்தின் பயன்பாட்டை இளமை பருவத்திலேயே தூண்டிவிடுவதற்காகவும் பள்ளி நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



கி. ஏழிசைவல்லி, எம்.ஏ.,
அலுவலர்
இந்திய ரிசர்வ் வங்கி

பள்ளி நூலகங்களின் பயன்பாடு

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை''

என்று திருவள்ளுவர் தீர்மானமாகச் சொல்லியிருக்கிறார். கல்வி, அகவாழ்வு, புறவாழ்வு இரண்டையும் மேம்படுத்த வல்லது என்பதனாலேயே திருவள்ளுவர் அதற்கு இந்தச் சிறப்பினைத் தருகிறார்.

பள்ளிக்கூடங்களும், ஆசிரியர்களும் போலவே, பள்ளிக்கூடங்களும், நூலகங்களும் பிரிக்க முடியாத இணையாக விளங்க வேண்டும். கரும்பலகை இல்லாத வகுப்பறைகள், என்ன பயன் தருமோ, அதே பயனைத்தான் நூலகம் இல்லாத பள்ளியும் தரக் கூடும்.

நாளைய குடிமக்கள், குடிமக்களை ஆள வேண்டிய அரசுப் பொறுப்பினர் எல்லோரும் இன்றைய பள்ளிக்கூடங்களில் தான் உருவாக்கப் படுகின்றனர் என்பது வலியுறுத்தப்பட்டு வரும் செய்தி. அவ்விதமானால் பள்ளிக்கூடம் வெளியே தயார் செய்து அனுப்பும் பிள்ளைகள் பண்பட்ட மனிதர்களாக, திறன்மிக்க செயல் வீர்களாகத் திகழ்வதற்குத் தயாராகி வரவேண்டும் அல்லவா? இதற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது நூலகங்கள் தானே?

குழந்தைப்பருவத்தில் பெற்றோரும், பிறகு, ஆசிரியர், நண்பர்கள், நூல்கள், தலைவர்கள், பொழுது போக்கு சாதனங்கள் உள்ளிட்ட பல

சக்திகளும் தான் மாணவப் பருவத்து மலர்களை மணம் பரப்பச் செய்ய முடியும். இந்தச் சக்திகளில் நூல்களின் பங்கு மிகப் பெரியது என்றால் பள்ளிகளும், நூலகங்களும் பிரிக்க முடியாத இணையாகத்தானே இருக்க வேண்டும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் ஒரு மாணவனின் பக்கத் துணையாக எப்போதும் இருக்க முடியாது. எந்த நேரத்திலும் துணையாக, வழிப்படுத்தி, வயப்படுத்தி, மேம்படுத்தும் பணியை இரு கைகளுக்குள் அடங்கும் நூல்களே செய்ய முடியும்.

இந்த உண்மையைப் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டியது பள்ளிக் கல்வியைச் சேர்ந்த வல்லுநர்களும், அரசுப் பொறுப்பில் உள்ளவர்களும்தாம். உணவின் சுவையைக் அறிய வைப்பதும் உறவின் அருமையைச் சுட்டிக் காட்டுதலையும் செய்கின்ற அன்னையும், தந்தையும், நூல்களையும் பிஞ்சுப் பருவத்திலேயே அறிமுகப் படுத்த வேண்டும். பாட நூல்கள் நீங்கலாய்ப் பரவிக் கிடக்கும் பல்வேறு நூல்களையும் அந்தந்த வயதுக்கேற்றபடி அறிமுகம் செய்ய வேண்டும். சின்னக் குழந்தைகள் நடமாடும் நேரத்தில், தொலைக் காட்சிப் பெட்டியின் முன்னால் அமரும் நேரத்தைக் குறைத்து, நூல்களின் மூலம், நெஞ்சில் பதியும் பாடல்கள், படங்கள் மூலம் நல்ல செய்திகளை, அறிவியலை, தாய் நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களை அறிமுகம் செய்திட வேண்டும் அவ்வாறே, ஆசிரியர்களும், சுவையான நூல்களை வகுப்பறையில் படித்துக் காட்டி நூல் நிலையங்களில் ''இன்னும் பல செல்வங்கள் இது போல் குவிந்து உள்ளன. நுகர்ந்து பயன் பெறுங்கள்'' என்று சுட்டிக் காட்டிட வேண்டும். தேனின் சுவையை நாடிச் செல்லும் வண்டினம் போல், நூலின் சுவையை நாடி இளம் செல்வங்கள் அணி வகுத்திட ஆர்வத்தை விதைத்திட வேண்டும்.

நூல்கள், நூலகங்கள் மீது ஆர்வத்தை விதைப்பது பெற்றவர்கள், ஆசிரியர்கள் கடமை என்றால், நூலகம் இல்லாத பள்ளிக்கூடமே இல்லை என்னும் நிலையை உருவாக்கித் தருவது கல்வித் துறை வல்லுநர்கள், அரசுப் பொறுப்பில் உள்ளவர்களின் தலையாய கடமை ஆகும். மேலை நாடுகளில், மற்றும் வளர்ந்த நாடுகளில் இளம் பிஞ்சுகள் புத்தக மூட்டைகளை முதுகில் சுமப்பதில்லை. அழகாய் அச்சடிக்கப்பட்ட நூல்கள் காட்டும் செய்திகளை மூளையில் பதிந்துகொள்ளவும் நெஞ்சில் நிலை நிறுத்திக் கொள்ளவும் பழக்குகிறார்கள். இந்த மண்ணின் குழந்தைகள், குறைவான ஏடுகளைக் கையில் சுமந்து, வகுப்பறையில் ஆசிரியர் சொல்லித் தருவதை நெஞ்சில் சுமந்து, நூலகங்களுக்குச் சென்று அறிவை வளர்க்க வேண்டும் என்னும் ஆர்வத்தை மாணவப் பருவம் முழுவதும் சுமந்தால், சுகம் தரும் சுமைகளாக, எல்லாம் அமையும். மணாவர்களுக்கு நூல்கள் சுமப்பதற்கு மட்டுமே என்றில்லாமல், சுவைப்பதற்கு என்று பள்ளி நூலகம்தான் காட்டும்.

பள்ளி நூலகம் என்று இங்கு குறிப்பிடப்படுவது நீதி நூல்கள், பல துறை அறிவியல் நூல்கள், தாய்த்திரு நாட்டின் சிறப்பு, வரலாறு உணர்த்தும் நூல்கள், பல கலைகளிலும் படிப்படியாகத் தேர்வு பெற உதவும் அடிப்படை நூல்கள் இவைகள் எல்லாம் வயதுக்கேற்படி முறையாக வைக்கப்பட்டுப் பயனபடுத்தப்படும் ''ஆற்றுப் படுத்தும் ஆலயம்'' போன்ற இடம் தான் நூலகம். இந்த நூலகத்தில், நன்கு படித்துத் தெரிந்த அறிஞர்

பெருமக்கள், நூலகர் தேர்வு செய்து தரும் நல்ல நூல்கள் மட்டுமே இடம் பெற்றிருக்கும். ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு என்பதற் கொப்ப, வயதுக்கு மீறிய உணர்வுகளைத் தூண்டும் கீழ்ந்தர பருவ இதழ்கள் நூல்களால் தவறான தகவல்களைத் தரும் தரம் தாழ்ந்த நூல்கள் இடம் பெறக் கூடாது என்று அரசால் சிறந்த நூல்கள் மட்டும் வாங்கி வைப்பது சிறப்புக் குரிய ஒன்றாக இருக்கும். பள்ளி நூலகத்துக்கு ஆண்டுக்கு ஆண்டு புதிய நூல்கள் வாங்கப் பட வேண்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அரசு பள்ளிகளில் பஞ்சாயத்து முதல், மாநில அரசு வரை யாருடைய நிர்வாகத்தின் கீழ் வரும் பள்ளியாயிருந்தாலும் சரி, நூலகப் பாதுகாப்பு, வளர்ச்சி, பயன்படும் முறையைக் கண்காணிக்க அரசுப் பொறுப்பில் உள்ளோர் தனிப் பொறுப்பு மேற்கொள்ள வேண்டும். இதற்குப் பள்ளி ஆய்வாளர் போல மாணவர்களின் பொது நூல் அறிவைச் சோதிக்க நூலக அறிவு ஆய்வாளர்கள் கூட அமர்த்தப்படலாம். இதற்குச் செலவிடப்படும் தொகையை அரசாங்கம் ஒரு நல்ல முதலீடு என்று கருத வேண்டும் என்பது அனைவரும் அறிந்ததேயாகும்.

''வெள்ளத்து அனைய மலர்நீட்டம்
மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு''

என்பது திருக்குறள். மக்கள் மனத்தளவே, மண்ணின் மேன்மை விளங்கும் என்பதால், மக்கள் மனத்துயர்வு மாணவப் பருவத்தில் தான் உருப்பெறுகிறது என்பதால், மாணவர்களின் படிப்போடு பின்னிப் பிணைந்ததாகப் பொது நூல்கள் தரும் அறிவும் புகட்டப்பட வேண்டும். ஆகவே, நூலோர்களும், அரசில் உள்ள மேலோர்களும், இதைச் செய்தே ஆக வேண்டும். கரும்பலகை இல்லாத வகுப்பறைகள் ஆசிரியர் இல்லாத பாட வகுப்புகள் சில இடங்களில் சரியான கட்டிடமே இல்லாத கல்விக் கூடங்கள் என்றுள்ள நிலைமையில், நூலகத்திற்கு முக்கியம் தர முடியுமா? என்று வினா தோன்றலாம். நூலகம் கட்டாயம் வேண்டும் என்று விரும்புகின்ற மனங்களில், சரியான கல்விக்கூடம் முறையான வகுப்பு அறைகள் இல்லாத வரை இந்த நாடு முன்னேற முடியாது என்ற எண்ணம் ஏற்படுவது இயற்கையான ஒன்றாகும்.

எனவே, பாரதி சொன்னது போல், 'பள்ளித் தலமனைத்தும் கோயில்' செய்து ஏழை எளியவர்களின் குழந்தைச் செல்வங்கள் அனைவர்க்கும் எழுத்தறிவிப்போம் என்ற உறுதிதான் இந்தச் சமுதாயத்தின் முதல் பணியாக இருக்க வேண்டும் என்பதில் இருவேறு கருத்தில்லை. பஞ்சாயத்துப் பள்ளிகள் என்றாலும், நகராட்சிப் பள்ளிகள் என்றாலும், எல்லா அடிப்படை வசதிகளும் நிச்சயமாக இருக்க வேண்டும். மாநிலம் முழுவதும் ஒரே தரமான கல்வி பயிற்றுவிக்கப் பட வேண்டும். நூலகங்கள் நிச்சயமாக இடம் பெற வேண்டும்.

இந்தக் கல்விப் பணி சிறக்க - பண்பாடு சிறக்க பள்ளித் தலங்களைக் கோயில்களாக்கி நூலகங்கள் என்னும் கும்பிடும் தெய்வங்களை நிச்சயமாக நிறுவிடுவோம்.

ஏற்றிடுவோம் இந்தச் சபதம்

போற்றிடுவோம் மனித மாண்பு

சிறப்பித்திடுவோம் எங்கும் கல்விக் பணியை உருவாக்கிடுவோம் எங்கும் நூலகப்பணியை நாடு முன்னேற அயராது உழைப்போம்! உழைப்போம்!! உயர்வோம்!!

தமிழ் நாடு ஒரு கண்ணோட்டம்

மண்டல புள்ளிஇயல் துணை இயக்குநர், சென்னை மண்டலம்

திரு. ந. முருகேசன், எம்.ஏ., எம்.பி.ஏ., டி.எச்.ஆர்.எம்.,

உலகிலேயே பெரிய குடிஅரசு நாடு என அழக்கப்படும் இந்திய நாட்டின் முன்னேறிய மாநிலங்களில் ஒன்றாகவும், அரசியல், பொருளாதார, சமூகக் கண்ணோட்டத்தில் முன்னோடி மாநிலமாகவும் திகழும் தமிழ் நாடு, கலை, கலாச்சாரம், இலக்கியம், பண்பாடு, பாரம்பரியம் மிக்க மாநிலம், மனிதநேயம் மதிக்கப்படும் இம்மாநிலத்தில் நானிலம் போற்றிடும் நூலறிஞ்ஞர், அரசியல் அறிஞர், பகுத்தறிவாளர் என பலர் தோன்றினர். ''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என இலக்கணம் வகுத்தனர். திக்கெட்டும் புகழொடு கொட்டிடும் தமிழ்நாடு ஒரு கண்ணோட்டம்.

புவி அமைப்பு - தட்ப வெட்பம் :

இந்திய துணைக் கண்டத்தின் அங்கமான தமிழ் நாட்டின் பரப்பு130058 சதுர கீலோ மீட்டர். இப்பரப்பு இந்திய பரப்பில் (3287263 ச.கீ.மீ) 3.96 விழுக்காடு. தமிழ் நாடு வடநெடுக்குகோடு (Latitude) 8' 5' - 13.30' இடையிலும் கிழக்கு குறுக்குக்கோடு (Longtitude) 76' 15' - 80' 20' இடையிலும் அமைந்துள்ளது. வண்டல் மண், செம்மண், கரிசல் மண் வகை கொண்ட இம்மாநிலம் கீழ்புறம் தென் வடக்கில் 1000 கி.மீ. நீளமுடைய கடற்கரையும், மேற்புறம் மேற்கு தொடர்ச்சி மலையும் அழகு படுத்துகிறது. காவிரி தென்பெண்ணை, பாலாறு, வைகை தாமிர பரணி என்ற ஆறுகள் இருப்பினும் வறட்சிதான். நீருக்கு அண்டை மாநிலங்களை சார்ந்திருக்க வேண்டிய நிலை. தமிழ் நாடு சீரான தட்ப வெட்பநிலை யுடையது. கோடையில் உச்ச அளவாக 40.2°. குளிர்காலத்தில் 16.9° வெப்பம் நிலவும் அண்டின் சராசரி மழையளவு 925 மி.மீ.

மக்கள் தொகை :

உலகிலேயே சீனாவுக்கு அடுத்து அதிக மக்கட் தொகையுடைய இந்திய நாட்டின் மக்கள் தொகையில் 6.60 விழுக்காடு கொண்டது தமிழ்நாடு மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் 7-வது இடத்தில் உள்ளது. 1991 ஆண்டின் மக்கட் தொகை கணக்கெடுப்புபடி தமிழ் நாட்டில் எழுதபடிக்க தெரிந்த மக்கள் தொகை விழுக்காடு 62.66. இது இந்திய எழுதப்படிக்க தெரிந்த மக்கட் தொகை விழுக்காடு (52.21) காட்டிலும் அதிகம். மற்ற மாநிலங்களுடன் எழுதப்படிக்கத் தெரிந்த மக்கட் தொகை விழுக்காட்டுடன் ஒப்பிடுகையில் 5வது இடத்திலும் பெரிய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் 3-வது இடத்திலும், தென் மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் கேரளத்திற்கு அடுத்து 2-வது இடத்திலும் உள்ளது. எழுதப்படிக்க தெரிந்த பெண்கள் விழுக்காடு மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் கேரளத்திற்கு அடுத்து 2-வது இடத்தில் இருப்பது பெருமைதரும் செய்தியாகும்.

1991 ஆண்டில் மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி மக்கட் தொகை வளர்ச்சி

15.38 விழுக்காடு. முந்தய மக்கட் தொகை கணக்கெடுப்பு ஆண்டுகளில் வளர்ச்சி விழுக்காடு ஒப்பிடும்போது வளர்ச்சி விகிதம் குறைந்து வருவது தமிழ் மக்களின் விழிப்புணர்ச்சியை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் ஆண், பெண் விகிதம் 1000 : 974. இது இந்திய நாட்டின் விகிதத்தை விட சற்று அதிகம் (1000 : 927). மக்கட் தொகை அடர்த்தியை பொறுத்தவரை தமிழ் நாட்டில் 1 ச.மீ. க்கு 429. இது இந்திய நாட்டு மக்கள் தொகை அடர்த்தியைவிட (1 ச.மீ. 267) மிகவும் அதிகம்.

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற கோட்பாடும் எம்மதமும் சம்மதம் என்ற நோக்கம் கொண்ட தமிழ் நாட்டில் 89 விழுக்காடு, இந்து மத்தினரும், 6 விழுக்காடு கிருஸ்துவரும், 5 விழுக்காடு முகமதியர்களும், சமத்துவரும் சகோதரத்துவம் உயிர் மூச்சாக வாழ்கிறார்கள்.

தமிழ் நாடு	
பரப்பு	: 130058 ச.கி.மீ.
மக்கள் தொகை (1990 - 91)	: 55858946
எழுத்தறிவு பெற்றோர்	: 27559971
மாவட்டங்கள்	: 29
சட்டமன்ற தொகுதிகள்	: 234
பாராளுமன்றங்கள்	: 39
கிராமங்கள்	: 17213
ஊராட்சிகள்	: 12612
ஊராட்சி ஒன்றியங்கள்	: 384
நகராட்சிகள்	: 101
மாநகராட்சிகள்	: 5

வேளாண்மை (1993 - 94)	
	(பரப்பு ஹெக்டேரில்)
மொத்த பரப்பு	: 13020663
சாகுபடி பரப்பு	: 7158464
நிகர சாகுபடி பரப்பு	: 5900689
மொத்த நீர்பாய்ச்சப் பட்ட பரப்பு	: 3544458
நிகர நீர்பாய்ச்சப் பட்ட பரப்பு	: 2799565

நிதி அறிக்கை (1995 - 96)	
(ரூபாய் இலட்சத்தில்)	
வருவாய்	: 898507
செலவு	: 991062
பற்றாகுறை	: 92555
மாநில வருவாய்	: 4793736
தனி நபர் வருமானம்	: 8283

தட்ப வெட்பம்	
அதிக அளவு வெப்பம்	: 40.2° C
குறைந்த அளவு வெட்பம்	: 16.9° C
மழை அளவு	
சராசரி அளவு	: 925 மி.மீ.

உணவு தாரியம்	
உணவு தானிய உற்பத்தி	: 7981000 டன்
பருப்பு வகைகள் உற்பத்தி	: 8257000 டன்
எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி	: 33114000 டன்
நிலகைப்பற்றித் தாரர்கள்	: 79308932
மீன் வளம் (1994 - 95) பிடிப்பு*	
கடல் மீன்	: 330729 டன்
மற்ற வகை மீன் பிடிப்பு (ஏரி, குளங்கள், ஆறுகள்)	: 108000 டன்

மின்சக்தி நுகர்வு (1994 - 95)

வேளாண்மை	: 7790 மி.யூனிட்
தொழிற்சாலைகள்	: 8287 மி.யூனிட்
வாணிகம்	: 1037 மி.யூனிட்
வீடுகள்	: 3160 மி.யூனிட்
தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் தொட்டிகள்	: 419 மி.யூனிட்
மின்வசதி பெற்றுள்ள கிராமங்கள்	: 15822 மி.யூனிட்

சுகாதாரம் (1993 - 94)

மருத்துவமனை	: 282
ஆரம்ப சுகாதார நிலையம்	: 1420
மருத்துவ நிலையங்கள்	: 428
மருத்துவர்கள்	: 9050
செவிலியர்கள்	: 19351
மருத்துவமனை : மக்கள் விகிதச்சாரம்	: 1 : 5084
மருத்தவர் : மக்கள் விகிதச்சாரம்	: 1 : 597
செவிலியர் : மக்கள் விகிதச்சாரம்	: 1 : 2994

கல்வி (1993 - 94)

பல்கலை கழகங்கள்	: 15
கலை கல்லூரிகள்	: 242
மருத்துவ கல்லூரிகள்	: 22
சட்ட கல்லூரிகள்	: 6
அனைத்து பள்ளிகள்	: 41325

வர்த்தகம் 1993 - 94

	ரூபாய் இலட்சத்தில்
ஏற்றுமதி	: 808580
இறக்குமதி	: 811180

முக்கிய பொருள் உற்பத்தி (1994-95)

சர்க்கரை	: 1184599 டன்
துணிகள்	: 89264000 மீட்டர்
சிமென்ட்	: 5623840 டன்
டயர்	: 8663953
டிராக்டர்	: 12249
டீசல் என்ஜின்	: 79160
மின்சார மோட்டார்	: 173206
மோட்டார் சைக்கிள்	: 254026
சைக்கிள்கள்	: 1457188

தொழிற்சாலைகள் (1994)

இயங்குபவை	: 18480
மனித வேலை நாட்கள்	: 266530506
தொழிலாளர் சங்கங்கள்	: 5981

போக்குவரத்து (1993 - 94)

தேசிய நெடுஞ்சாலை	: 2002 கி.மீ.
மாநில சாலை	: 51144 கி.மீ.
நகராட்சி மற்றும் மாநகராட்சி சாலை	: 10521 கி.மீ.
ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலை	: 83728 கி.மீ.
அகல ரயில் பாதை நீளம்	: 1332.03 கி.மீ.
மீட்டர் ரயில் பாதை நீளம்	: 2681.51 கி.மீ.
ரயில் நிலையங்கள்	: 679
துறைமுகங்கள்	: 9
விமானநிலையங்கள்	: 5

வங்கிகள் மற்றும் காப்பீட்டு கழகங்கள் (1994 - 95)

வங்கிகள்	: 4448
காப்பீட்டு கழகங்கள்	: 175
பாலிசி தாரர்கள்	: 1052487

செய்தி தொடர்பு (1994 - 95)

அஞ்சல் நிலையங்கள்	: 8341
தந்தி அலுவலகம்	: 108
தந்தி மற்றும் அஞ்சல் சேவை அலுவலகம்	: 3833
தொலைபேசி இணைப்பகம்	: 1355
தொலைப்பேசி இணைப்புகள்	: 884779

காவல்துறை 1994

காவலர்கள்	: 3823
ஆயுதபடை காவலர்கள்	: 15059
காவல் நிலையங்கள்	: 1130
புறகாவல் நிலையங்கள்	: 162

பொழுதுபோக்கு (1993 - 94)

திரையரங்கங்கள்	: 1489
திறந்தவெளி திரையரங்கம்	: 10
டூரிங் திரையரங்கம்	: 830

நூல்

நூல் என்றால் என்ன? நுவலப்பட்டது நூல் எனப் பெயர் வந்தது. நூலெனப்படுவது ஏடு, ஓலை சுவடி, தூக்கு, பனுவல், புத்தகம் எனப் பலபெயர்களால் அழைக்கப்படுகிறது. நூலகத்தின் கருப்பொருள் நூல்கள் தான். நூல்கள் இல்லாமல் நூலகம் இல்லை. நூலகம் இல்லாமல் நூலகர் இல்லை.

நிகழ்காலத்தையன்றி முன் காலத்தில் வாழ்ந்திருந்த அறிஞர் பெருமக்கள் அனைவரும் நல்லவர்களது கருத்தையெல்லாம் பலரும் அறிவும் வண்ணம் அவர்கள் எழுதிய நூல்களில் எழுதிவைத்ததால், அந்த நல்ல கருத்துக்கள் நமக்கு உதவியாக இன்றும் இருந்து வருகின்றன. இவ்விதம் காலத்தால் அழிந்து போகாது என்றும் மறைந்து போகாது இருப்பது நூல்களன்றோ!

நூலின் இலக்கணம்

நூல் எனப்படுவது ஒரு கருவியைப் போன்றதாக இருக்க வேண்டும். ஒருவருடைய கருத்தினை மற்றவர் அறியும் வண்ணம் உதவ வேண்டும். ஒரு இடத்திலிருந்து மற்றதோர் இடத்திற்கு எளிதில் எடுத்துச் செல்லும் வகையில் அமைய வேண்டும். நல்ல கல்வியை தரும் வகையில் இருக்க வேண்டும். நடை முறை நிலை அறியும் வண்ணம் உதவிட வேண்டும். கடமையுணர்வினை யூட்டி, உரிமைகளைப் பெற்றிட உதவ வேண்டும். பொருளாதரம் சிறப்புற்று மேன்மை பெறும் வகையில் அமைய வேண்டும். மேலும் முக்கியமாக கலாச்சாரத்தைப் பேணி காக்கும் பணிக்கு உதவியாக அமைந்திட வேண்டும்.

படிப்பு என்பது ஒருவனுக்கு அறிவையும், ஆற்றலையும், சிந்திக்கும் தன்மையையும், ஊக்கத்தையும் தந்து நல்ல வளமான வாழ்விற்கு அழைத்துச் செல்லக்கூடிய ஒன்றாகும்.

நூல்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று பொழுது போக்குக்கு உரிய நூல்கள் என்றும், மற்றெ ான்று வாழ்க்கைக்கு உரிய நூல்கள் என்றும் நூலைப் பாகுபாடு செய்யலாம். தேவையில்லாத, வாழ்க்கைக்கு பயன்படாத நூல்களையெல்லாம் கற்பதால் பயனில்லை. கற்கத்தகுந்த நூல்கள், கற்கத்தகாத நூல்கள், இன்றியமையாத நூல்கள், தேவையற்ற நூல்கள் என்ற பாகுபாடு வேண்டும். இவ்விதம் செயல்படாமல் இருந்தால், காலமும், முயற்சியும் வீணாவது தவிர, தவறான கல்வியாலும், சுமையான கல்வியாலும் வாழ்க்கை கெடும். ஆகையால், கற்க வேண்டிய நல்ல நூல்களை தேர்ந்தெடுத்துக் கொண்டு அவற்றைக் கற்க வேண்டும்.

நிழல் தரும் மரம்

சிறுகதை

திருமதி
சுசிலா கணேசன்
துணை பொதுநூலக இயக்குநர்

வெயிலின் கொடுமை குறைந்து மாலை நேரத்தென்றல் வீசத் தொடங்கியது. தெருக் கோடியிலுள்ள தேநீர் விடுதிக்குச் சென்று தேநீர் அருந்திவிட்டு வீடு திரும்பினான் முருகன். கயிற்றுக் கட்டிலைத் தூக்கி, தனக்குப் பிடித்த வேப்பமர நிழலில் போட்டுக் கொண்டு தலையணையைச் சரிய செய்தபடியே சாய்ந்துக் கொண்டான். சில்லென்ற காற்று உடம்பில் பட, இதமான கனவில் மனம் மூழ்கியது. முதுமையின் விளிம்பில் நின்றுக் கொண்டு இதுவரை தான் கடந்துவந்த நெடிய பாதையினைச் சற்றே அசைப்போட, கண் தானாக மூடிக் கொண்டது.

காந்தியடிகளை நினைவுப்படுத்தும் உருவம் முருகனுக்கு. இடுப்பில் உள்ள அரைமுழ வேட்டியும், அரைபாச்சு கட்டாக சில சமயம் காட்சித்தரும்; தலையிலே முண்டாசு; ஒல்லியான உருவம், ஒளிவிட்டு பிரகாசிக்கும், குழிவிழுந்த கண்கள் கையில் எப்போதும் ஒரு மண்வெட்டி, அந்த நூலகத்தின் இரவு காவலராகவும் தோட்டக்காரனாகவும் பணிபுரியும் முருகன் தான் உண்டு தன் வேலை உண்டு என இருக்கும் அப்பிராணி.

கட்டிலில் படுத்தப்படியே, கண்ணை மெல்லத்திறந்துவேப்பமரத்தை உற்றுப்பார்த்தான். முருகனின் மனம் தளர்ச்சியாகும் போதெல்லாம், தன் கிளைகளை ஆட்டி உற்சாகப்படுத்துவது இந்த வேப்ப மரம்தான். இருப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்றது முருகனின் மனம்.

நூலகத்தில் வேலைக்குச் சென்று இரண்டு மூன்று வருடங்கள்தான் ஆகியிருக்கும். அதற்கு முன்னால் 'மிலிட்டரியில் வேலை பார்த்த அனுபவம், வறண்டுப்போன வாழ்க்கையாக தோன்றவே அந்த வேலையை விட்டு விட்டு குடும்ப வாழ்க்கையை விரும்பி சொந்த ஊருக்குத் திரும்பின முருகனைக் கைபிடிக்கக் காத்திருந்தாள் கனகம். அவனது அத்தை மகள்தான் கனகம். இவளைக் கைப்பிடித்த நேரம் அரசு உத்தியோகமும் கிடைத்தது. காவல் உத்தியோகம் என்றாலும் தோட்ட வேலையும் கூட சேர்ந்து இருந்ததால் முருகனுக்குப் பிடித்திருந்தது.

கனகத்திற்குத் தலை பிரசவம் ஆப்பரேஷன் செய்துதான் குழந்தையை எடுக்க வேண்டும் என்று மருத்துவர் நேற்று கூறியதையே நினைத்துக் கொண்டு மனசஞ்சலத்தோடு இருந்த முருகனின் கைகள் மட்டும் வேலை செய்து கொண்டிருந்தது. தனது 'குவார்டஸ்க்குப் பக்கத்தில் இருந்த மண்ணைப் பதப்படுத்தினான். தானாகவே முளைத்திருந்த வேப்பஞ் செடியைத் தன் வீட்டு அருகில் நட்டால் என்ன என்று தோன்றவே, அதனை எடுத்து ஒரு குழி தோண்டி அழுத்தமாக

நட்டு, தண்ணீரை ஊற்றிக் கொண்டிருந்த போது ''முருகா உனக்கு பிள்ளை பிறந்துருக்குடா'' என்று சொல்லிக் கொண்டே வேகமாக மூச்சிறைக்க வந்தாள் முருகனின் தாய்.

தன் தாயை உற்று கவனித்த முருகனிடம் ''என்னடா பார்க்கிற, ஆப்பரேஷன் பண்ணல. சுகப் பிரசவம்தான். ஆனா கனகா கொஞ்சம் மயக்கமா இரக்கா, இரண்டு நாழி கழிச்சு போய்ப் பாரு'' என்று கூறிக் கொண்டே வீட்டினுள் நுழைந்தாள் அவன் தாய்.

நட்டுக் கொண்டிருந்த வேப்பங் கன்றுகளைப் பாசத்தோடு முருகன் பார்த்தான் உன்னை நட்ட நேரம் எனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கான். அவனையும் உன்னையும் கண்போல வளர்ப்பேன் என்று நன்றி கலந்த புன் முறுவலோடு பார்த்துக் கொண்டே ஆஸ்பத்திரிக்குக் கிளம்ப தயாரானான் முருகன்.

குமரன் வளர்ந்து வந்தான். கவிழ்ந்து, தவழ்ந்து, அடி எடுத்து வைத்து நடந்து பிஞ்சுக் கரங்களால் கைதட்டி - இப்படி அவன் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்த முருகன் - வேப்பங்கன்றையும் மறக்கவில்லை. பாதுகாப்பாக வேலி போட்டு, காப்பாற்றி வந்த செடி, மரமாக வளரத் தொடங்கிவிட்டது.

நூலக வளாகத்தை காவல் காக்க வேலையில் சேர்ந்தபோது இந்த இடம் கட்டாந்தரையாகத்தான் இருந்தது. முருகனின் கடின உழைப்பாலும், செடிகளின் மேலும், மரங்களின் மேலும், அவனுக்குள்ள ஆர்வம் காரணமாக இந்த இடம் நந்தவனமாக மாறியுள்ளது. அதுமட்டுமா! நூலகத்திற்கு வரும் குழந்தைகள் விளையாடவும் ஏற்ற இடமாக அவன் மாற்றியுள்ளதைக் குழந்தைகளின் பெற்றோர்களும், வாசகர்களும், நூலகப் பணியாளர்களும் பாராட்டி வந்தனர். இயற்கைச் சூழலின் பால் முருகனுக்கு ஈர்ப்பு ஏற்பட்டது போல அவனது மகன் குமரனுக்கு நூல்களின் மேல் ஆர்வம் ஏற்பட்டது. பள்ளிக் கூடம் முடிந்து வீட்டுக்கு வரும் குமரன் நூலகத்திற்குச் சென்று ஒரு மணிநேரமாவது படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான். நூலகத்திற்கு வரும் எந்த நூலையும்விட்டு வைக்கவில்லை. பள்ளி இறுதி வகுப்பில் மாநிலத்தில் முதல் மாணவனாக அவன் வருவதற்கும் இதுவே உதவியது.

தன் கைராசியின் காரணமாக, அம்மாவட்ட ஆட்சித்தலைவர் பங்களாவிலும் - தோட்ட வேலையை செய்துவரும் முருகனுக்கு, தன் மகனையும் ஒரு கலெக்டராக கற்பனை செய்து பார்பதில் மிக ஆர்வம் - இதுபற்றி தன் மனைவியிடம் அடிக்கடி பேசி வருவதும் வழக்கமாகிவிட்டது.

''படிப்பைப் பற்றி நான் என்ன கண்டேனுங்க நிறைய காசு பணமெல்லாம் வேணாங்களா அதுக்கு!'' என்று வருந்த மட்டுமே கனகத்திற்குத் தெரியும் ஆனாலும் எப்படியாவது தன் மகன் கலெக்டர் ஆனால் கார் பங்களா மகனுக்கு கிடைக்கும் என்ற அவா மட்டும் இருந்தது. தன் மகன் நன்றாக படிப்பதைக் கண்டு, நூலகத்திற்கு வருபவர்களிடமும் நூலகத்தில் வேலை செய்பவர்களிடமும் மேலே படிக்க வைக்க என்னென்ன செய்யவேண்டும் எவ்வளவு பணம் செலவாகும் என்றெல்லாம் கேட்டு வருவான் முருகன். அவன் நிலையில் படிக்க வைப்பது அவ்வளவு சுலபமா என்ன ?

கனவுலகில் மிதந்து வந்த முருகனுக்கு எதிர்பாராத அதிர்ச்சி ஒரு நாள் ஏற்பட்டது. நூலக

பொது நூலகச் செய்தி மடல்

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை 29-வது தேசிய நூலக வார விழா 14.11.1996 முதல் 20.11.1996 வரை நடைபெற்ற புகைப்படக் காட்சிகள்

மாண்புமிகு கல்வி அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் பொது நூலகச் செய்தி மடலை வெளியிட முதல் பிரதியை மாண்புமிகு தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி. மணி அவர்கள் பெறுகின்றார்.

படைப்பாளர், பதிப்பாளர், நூலகர் தினத்தில் தமிழ்நாடு அரசு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்பண்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்களும், இணைச்செயலாளர் திரு. ஆரோக்கியசாமி இ.ஆ.ப. அவர்களும் பங்கேற்கின்றனர்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் க. அன்பழகன் அவர்களிடமிருந்து கல்வித்துறை செயலாளர் திரு.சா.பா. இளங்கோவன் இ.ஆ.ப. அவர்கள் பொது நூலகச் செய்தி மடலின் பிரதியை பெறுகின்றார்.

தேசிய நூலக வார நிறைவு விழாவின் நிறைவு நாள் விழாவில் பொது நூலக இயக்குநர் அவர்களும், பேராசிரியர் ஆர்.எம். வாசகம், துணைவேந்தர் அண்ணா பல்கலைக்கழகம் அவர்களும் பங்கேற்கின்றனர்

அதிகாரி அவசரச் செய்தி என அழைக்க, அது அதிர்ச்சித்தரும் செய்தியாக அவன் தலையில் இடி விழுந்ததுபோல் ஆயிற்று சாலை விபத்தில் சிக்கி, அவன் மனைவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள செய்திதான் அவனுக்குக் கிடைத்தது.

''எம்புள்ளைய படிக்க வையுங்க . . . கலெக்டராக்குங்க. . '' இதுதான் கனகத்தின் கடைசி வார்த்தைகள்.

முன்னிருந்ததைவிட அதிக உறுதியுடன் இருந்தான் முருகன் அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துக் கொண்டு நல்ல கல்லூரியில் சேர்த்து 'ஸ்காலர்ஷ்'பில் படிக்க வைத்தான் குமரனை. வேப்பங்காற்றை சுவாசித்து வளர்ந்த பையன் குமரன், நல்ல பையனாக அறிவாளியாக மரியாதையுடனும் நடந்துக் கொண்டு எல்லோரிடமும் நல்ல பெயரைப் பெற்றான். பலரது பாராட்டுக்களும் கிடைத்தது. கல்லூரி பேராசிரியர்களும் அவனுக்கு எல்லா உதவிகளும் செய்தனர். நூல் படிக்கும்பழக்கத்தினால் எல்லாவித போட்டிகளிலும் அவன், முதலிடம் பெற்று பல பரிசுகளைத் தட்டிச்செல்லலானான்.

ஒரு நாள் நூலக அதிகாரி முருகனை கூப்பிட்டு அனுப்பினார்.

''முருகா - உன் பையன் அதிருஷ்டசாலிதாம்பா''

''என்னங்க சொல்றீங்க'' - முருகன்

''IAS படிக்க வைக்கணும்னு நீ ஆசைப்பட்டியே எப்படி படிக்க வைக்கறது - நிறைய புத்தகங்களை வாங்கணுமே பணத்துக்கு என்ன செய்யறதுன்னு கவலைப்பட்டியே, இப்ப இந்த லைப்ரரியிலேயே இந்த படிப்புக்கான நூல்கள் வாங்கி தனியா ஒரு ஸெக்ஷன் ஆரம்பிக்க உத்தரவு வந்திருக்கு - நூலக அதிகாரி தன் பேச்சை முடிக்கும் முன்பே முருகன் முகத்தில் ஆனந்தமும் மகிழ்ச்சியும் குடிகொண்டது.

அப்படின்னா, இனி என் குமரன் இங்க வரப்போற புத்தகத்த படிச்சாலே போதும்ங்கறீங்களா? அப்பாடா கடவுள் கண்ணைத் தொறந்துட்டாரு கனகத்துக்கு நான் கொடுத்த வாக்கு பலிக்கப்போகுது'' - முருகன் சந்தோஷத்தில் உறக்கவே பேசினான்.

குமரன் படித்தான் - IAS தேர்வில் முதல் மாணவனாகத் தேறினான் - பயிற்சிக்காக முசௌரிக்கு மகனை பிரிய மனமில்லாமல் வழியனுப்பி வைத்தான் முருகன் ''அப்பா கவலப்படாதிங்க - பயிற்சி முடிஞ்சு வந்ததும் உங்களை என்னோட கூட்டிக்கிட்டு போகிறேன். அதுவரை ஜாக்கிரதையா இருங்கப்பா'' குமரனின் குரலும் தழுதழுத்தது.

மகனை வழியனுப்பிவிட்டு தன் வளர்ப்பில் பேணிகாத்த வேப்பமரத்தடியில் வந்து படுத்தான் முருகன் மாதங்கள் ஓடின. இன்னும் ஒரு மாதத்தில் பயிற்சி முடிந்ததும் மகன் திரும்பிவிடுவான் தன்னையும் தன் சுற்றுப்புறத்தையும் மறந்து ஜடமாக காலத்தை தள்ளிக் கொண்டிருந்த முருகனுக்கு நூலக அதிகாரி அழைத்தது வெறுப்பாகவே இருந்தது.

''முருகன் அந்தமாத இறுதியில் ஓய்வு பெற வேண்டும் என்றும் - குவார்ட்டஸை காலி செய்துத் தரவேண்டும் என்று சொல்லியது அவனை ஸ்தம்பிக்க வைத்தது தனக்கு இவ்வளவு வயது ஆகி விட்டதா அவனால் நம்பமுடியவில்லை. குமரன் ஊரில் இல்லாதபோது தான் வளர்த்த வேப்ப மரத்தடியில் ஆறுதல் பெற்று வந்தது! இனி அதையும் பிரிய வேண்டுமா?. . .இந்தச் செய்தி முருகனை நிலைகுலைய வைத்தது.

''ஐயா, கொஞ்சம் தயவு காட்டுங்க என் மகன் குமரன் அடுத்த மாசம் வந்துடுவான் - அவன் வர்ற வரைக்கும் இங்கே தங்க அனுமதிச்சீங்கனா அது போதுமுங்க''.

- முருகன் - கலங்கிய கண்களோடு நூலக அதிகாரியை கேட்டான்.

அவர் என்ன செய்வார். அரசு உத்தரவை செயல்படுத்தத்தானே அவரால் முடியும் ?

மனம் ஒடிந்த முருகன் - தன் நிழலைத் தேடி ...வேப்பமர நிழலைத் தேடிச் சென்றான் கிளைகள் அசைய, முருகனை வா ! வா ! என்று அழைப்பது போன்று இருந்தது. இதுவும் முருகன் வளர்த்த பிள்ளைத்தானே! அவன் கண்களில் கண்ணீர்துளி! அது ஆனந்தக் கண்ணீரா !! மகனை நினைத்து சிந்திய அன்புக் கண்ணீரா ! மனைவிக்கு அளித்த வாக்கை செயல்படுத்தியதில் ஏற்பட்ட கண்ணீரா! அல்லது நூலகம் தன் மகன் உயர்வு பதவி அடைய வழி செய்து கொடுத்ததை நினைத்தா!! அதை இறைவன்தான் அறிய முடியும்...

தேசிய நூலகவார விழா

நூலகத்தின் வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாக 1919 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாளில் சென்னையில் கோகலே மகாலில் நடந்த முதல் இந்திய நூலக மாநாட்டினை ஸ்ரீ ஐயன்கீ வெங்கடரமண்யா தொடங்கிவைத்தார். இவர் நூலகத்துறைக்கு வடிவமைத்து கொடுத்தவராவார். இந்த வரலாற்று சிறப்புமிக்க நாளை மாநாட்டின் நினைவாகக் கொண்டு இந்திய நூலகச் சங்கம் 1968-லிருந்து நூலக வாரத்தைக் கொண்டாடி வருகிறது. மேலும் இதன் சிறப்பு அம்சமாக நூல்களை மிகவும் அதிகமாக படிக்கும் பழக்கத்தைக் கொண்ட நேருவின் பிறந்த நாளும் சேர்ந்து இவ்விழா சிறப்பு பெற்று வருகிறது. இவ்வாண்டு 29-வது தேசிய நூலக வாரவிழா நடைபெற்றுள்ளது. இவ்விழா தொடர்ந்து ஆண்டுதோறும் நடைபெறும். உலக இருள்போக்க, அனைவரும் கல்வி அறிவு பெற விஞ்ஞான அறிவுகள் மலர இவ்விழா என்றும் உறுதுணையாக விளங்கும்.

நூலகம் ஒரு கோயில்

அ. சுப்பையன்,
மூ. நிலை நூலகர்
காமராஜர் மாவட்டம்

நூலகம் என்பது கோயிலாகும்
நூல்கள் எல்லாம் கடவுளர்கள்,
நாளும் சுற்றி வலம்வருவோம்;
நாலும் கற்று நலம் பெறுவோம்;

புனிதம் மிகுந்த கோயிலிலே
புகுதல் போலும் நூலகத்தில்
அனைவரும் செல்வோம் பற்றுடனே
அனைத்தும் கற்போம் சிரத்தையுடன் !

எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும்
எண்ணிலடங்கா நூல்கள் இங்குண்டு;
பாப்பா பாட்டி அனைவருக்கும்
பயன்படும் நூல்கள் பலவுண்டு !

பொருளாதாரம் அறிந்திடலாம்;
புவியியல் கற்றுத் தேர்ந்திடலாம் !
மருத்துவம் கண்டு மகிழ்ந்திடலாம்;
மனோதத் துவமும் பெற்றிடலாம்

புத்தம் புதிய நிலைகளினைப்
புத்தியில் ஏற்றிப் புகழ்பெறலாம்;
சித்தம் தெளிந்து சீர்பெறலாம்;
சிறுமைக் குணங்கள் அகற்றிடலாம்!

நாளும் உழைக்கும் தோழர்களே
நல்ல பொழுதாய்க் கழித்திடவே
வேளை கிடைக்கும் போதெல்லாம்
விரும்பி வருவீர் நூலகமே !

பள்ளிப் படிப்பு மட்டும்தான்
பயன்படும் என்று எண்ணாதீர்;
உள்ள படிக்கு நூலகம்தான்
உதவிடும் என்பதை மறவாதீர் !

நூலகம் இல்லா ஊரினிலே
நுழைதல் கூட பாவமெனும்
காலம் ஒருநாள் வரக்கூடும்;
கண்டு தெளிவீர் தோழர்களே !

வீணே பொழுதைப் போக்காது
வெட்டிப் பேச்சுப் பேசாது
காண்போம் நல்ல நூல்களையே;
கற்போம் பற்பல கலைகளையே!

புத்தகம் ஒன்றே குறியென்று
புகலிடம் நூலகம் தானென்று
நித்தம் பொழுதைக் கழிப்பீரே
நீடு புகழைப் பெற்றிடுவீர் !

எல்லாம் அறிந்த மேதைகளும்
இங்கிருந்து சென்றவர்தான்
பல்திறன்களையும் கற்றிடலாம்;
பாங்காய் வருவீர் நூலகத்திற்கே !

பொது நூலகத்திலுள்ள ஒரு புத்தகத்தின் வேண்டுகோள் !

சு. சுந்தரராசன், பி.ஏ., பி.எல்ஐசி,
நூலகர், கிளைநூலகம், சாப்டூர்
மதுரை மாவட்டம்.

என்னைத் தேடித் தேடியேதான்
எடுத்து வந்து படிப்போரே,
கண்ணை என்மேல் செலுத்தியே, நற்
கருத்தைக் கதையைப் படிப்போரே,
உம்மை வேண்டி விரும்பியே, ஓர்
வேண்டு கோளை விடுகின்றேன்
செம்மை யான நூலென்னைச்
சீர ழித்துச் சிதைக்காதீர் !
கல்வி யறிவில் சிறந்தோர்கள்
கைவண் ணத்தால் நூலாகி
செல்வந் தன்னிலும் சிறப்புடைத்தாய்
தேச மெல்லாம் திகழ்கின்றேன் !
மெல்லப் புரட்டிப் படித்தே தான்
மெத்தக் கவனமாய்ப் பாதுகாப்பீர் !
செல்லப் பிள்ளை கைகளிலே
சிக்கிச் சிதைய வைக்காதீர் !
சிறிய குழந்தை விளையாட
செப்புச் சாமான், பொம்மைகளை
உரிய விதமாய்த் தந்திடுங்கள் !
உள்ளந் தன்னை உயர்வாக்கும்
அரிய பெரிய கருத்தெல்லாம்
அள்ளி யள்ளித் தருகின்ற
அரிய நூலாம் எனைத்தந்து
அல்லல் படவே வைக்காதீர் !
புத்தன் காந்தி போன்றோரும்
புத்தக வடிவில் இருந்தென்றும்
நித்தம் நல்ல அறிவுரைகள்
நேசம் வளர சொல்லிடுவார் !
புத்தம் புதிய நூல்களையும்
பொறுமையின்றி கையாண்டு
எத்தன் கையில் அகப்பட்ட
ஏந்திழை போல வருத்தாதீர் !
புத்த கத்துள் கிறுக்குவதும்
புரட்டு புரட்டு எனவெழுதி
சித்தம் நோகச் செய்வதுவும்
திறனாய் வாளராய்ச் சிலவார்த்தை
புத்தக மெல்லாம் எழுதுவதும்
புன்மை யாக கிழிப்பதுவும்
உத்தம வாசகர் செய்வாரோ ?
ஒருமுறை சிந்தனை செய்வீரே !
அரிய பெரிய முயற்சியோடு
ஆயிர மாயிரம் முதலீட்டில்
வரிவரி யாக வார்த்தைகளாய்
வாயிலாப் பேசும் புத்தகமாய்
நெறிமுறை சொல்லும் நீதிநூலாய்
நெஞ்சை யள்ளும் காவியமாய்
உரிய போது உதவுகின்ற
உத்தம நண்பனாய் நூலிருக்கும் !
அறிவை வளர்க்கும் அறிவியலும்
அன்பை வளர்க்கும் கதைகளுமாய்ச்
செறிந்த கருத்துள்ள களஞ்சியமாய்ச்
சிந்தை கவரும் சித்திரமாய்த்
தெரியா தெல்லாம் தெரியவைக்கும்
தேர்ந்த சிறந்த நூல்களுமாய்
புரியா தெல்லாம் புரியவைக்கும்
பொது நூலகத்தைப் போற்றிடுவீர் !

நூலகம் செல்வோம்
நூலகம் வளர்ப்போம்

திரு. தொ. நா. மோகன்
கண்காணிப்பாளர்
மாவட்ட நூலக அலுவலகம், திண்டுக்கல்

நூலகம் செல்வோம் - நூலகம் வளர்ப்போம்
நூலகம் செல்வோம் வாரிர் - தினம்
நூலகம் செல்வோம் வாரீர்
ஆலயம் சென்றருள் பெறுதல் போல்
அறிவைப் பெறுவோம் வாரீர்
பள்ளி தன்னில் படித்த கல்வி
பட்டம் பெறும்வரை - படித்த பின்னர்
படிப்புடனே தொடர்கல்வி வழங்கு கின்ற
பல்கலைக் கழகம் நூலகமாம் படிக்க வாரீர்!
நூலகங்கள் வளரவேண்டும், நாமெல்லாம்
உறுதுணையாய் நிற்கவேண்டும்
நூலகங்கள் வளர்ந்திட்டால் நாடுவளரும்
நாட்டினரும் வளர்வர் அன்றோ!



சந்தா விவரம்

ஒரு பிரதி (காலாண்டு இதழ்)	ரூ.10.00
ஆண்டு சந்தா	ரூ.40.00
ஆயுள் சந்தா	ரூ.500.00

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

பொது நூலக இயக்குநர்
737, அண்ணா சாலை,
சென்னை - 600 002.

சந்தா தொகை மணியார்டர் மூலமோ/ விரைவு காசோலையாகவோ அனுப்பவும்.

''நல்ல நூலகங்கள் அறிவொளியூட்டி வரும் ஆலயங்கள். நாட்டு முன்னேற்றத்திற்கு வழிவகைகள் காணும் பல விற்பண்ணர்களை உருவாக்கித் தரும் சக்தி படைத்தவை.

-எஸ்.ஜே. சாதிக்பாட்சா
தமிழக முன்னாள் அமைச்சர்

"தமிழகத்து அறிவியக்கம் தழைத்தோங்கட்டும்"

க. நடராசன்
மாவட்ட நூலக அலுவலர், நாகப்பட்டிணம்.

''இன்சொல்விளை நிலமா ஈதலே வித்தாகி
வன்சொல் களைகட்டி வாய்மை ஏரு அட்டி
அன்பு நீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன ஓர்ப்
பைங்கூழ்க் சிறு காலைச் செய்''

என்பது பதினென்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான ''பழமொழி'' என்னும் நூல் இம்மனித குலத்திற்கு வழங்கியப் பாடம். ஒரு மனிதன் பிறந்து அறிவும், ஆற்றலும், சிந்திக்கும் திறனும், பொது நோக்கும், அன்பும், ஆதரிக்கும் மனப் பக்குவமும் உண்மையும் அறநெறிப்பட்ட வாழ்வும் கொண்டுப் பெருமையுடன் வாழ்வில் திகழ் வதற்குக் கல்வியும், நல்ல நூல்களைப் படித்திடும் பழக்கமும் இன்றியமையாதது. ஆகும்.

இதற்கான அறிவுச் செல்வத்தை, ஆக்கப் பூர்வமானச் சித்தனைகளைக் கருத்துக் கருவூலத்தை அறிவு ஜீவிகள் காலங்காலமாகப் பின்வரும் தலைமுறைகளுக்கு வழங்கி வருகின்றனர். இத்தகையத் தன்னலங் கருதா உழைப்பாலேதான் இந்த மானுடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

வாழ்ந்து விட்டத் தலைமுறை, வாழத் தலைப்பட்டு விட்டத் தலைமுறைக்கு வாழ வழி காட்ட வேண்டும். கடந்த கால வரலாற்றை முன்னோரின் அர்ப்பணிப்புகளைச் சமுதாயம் வாழச் செய்தத் தியாகங்களை, முந்தைய நிகழ்வுகளைப்பின்வரும்சந்ததிகளுக்கு முறையாக உரைக்காததாலேயே பண்பாட்டுச் சிதைவுகளும், சமுதாயத்தில் சீரழிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

அத்தகைய அறிவுப் பணியை இலட்சிய உணர்வோடு ஏற்று 1950 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் கடந்த 46 ஆண்டு காலமாகப் பொது நூலகத்துறை மிகுந்த நம்பிக்கையோடு ஒரு மாபெரும் அறிவியக்கமாகவே செயல்பட்டு வருகிறது. படித்ததினால் அறிவு பெற்றோர் இப்பாரினில் பல்லாயிரம் உண்டு.

கடந்த 3000 ஆண்டுகளாகவே பிறப்பால் உயர்வு தாழ்வு காணபிக்கப்பட்டு கல்வி பெற்றிடவே வாய்ப்பற்ற இச்சமுதாயம் வெயிலுக்கு, மழைக்குக் கூடக் கல்வி நிலையங்களில், நூலகங்களில் அண்டி, ஒண்டிப் பழக்கப்பட்டிராதச் சமுதாயம்.

இச்சமுதாயத்திற்கு- சாதி, சமய வேற்றுமை களுக்கு அப்பாற்பட்டு ஏழை என்றும் செல்வந்த ரென்றும்பொருளாதாரப்பேதங்களைப்பார்க்காமல் கல்வியில் உயர்ந்து காணப்படுபவரென்றும், கல்வியறிவில் குறைந்தோர் என்றும் பாகுபாடுகளை எல்லாம் கடந்து, சமுதாயத்தில் அந்தக் காலம் தொட்டே அனைத்துத் துறை களிலும், ஒதுக்கப்பட்டத்தாய்க்குலத்திற்குக்கல்வி எதற்கு, படிப்பு எதற்கு என்றக் காலத்தைப் பின் தள்ளி, ஒரு சமுதாயச் சமத்துவ மையமாகிய ''எல்லோர்க்கும் எல்லாமும் கிடைப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்'' .என்றப் பொன்மொழி பொய்க்காதவாறு, பொதுமை நோக்கோடு தமிழகத்தில் பொது நூலகத்துறையின் பொது நூலகங்கள் பொது மக்களுக்கு அறிவுப் பணியாற்றி வருகின்றன.

தொடக்கப் பள்ளிகளிலிருந்துப் பல்கலைக் கழகங்கள் வரைப் பல்வேறு துறைகளில் படிப்பறிவைத் தந்து வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க ஆக்கப் பூர்வப் பணிகளைச் செய்து வருகின்றன. என்றாலும் அக்கல்வி நிலையங் களின் முக்கியமான அங்கங்களில் தலையாயது நூலகங்களாகும். அந்நூலகங்களைப் பயன் படுத்திக்கொண்டுதான் ஆசிரியகுலமும், மாணவர் உலகும் வெற்றியுடன் வெளிவருகின்றன.

அதன் பின்னர் அவர்கள் கற்றக் கல்விக்கு மெருகூட்ட, வாழ்வியலில் வெற்றி பெற, அவர்கள் சிந்தனை செழிக்க, ஆற்றல் பெருக, வாழ்க்கை உயரப் பெரும்பங்காற்றுவன பொது நூலகங்களேயாகும். இந்த உண்மையை யாருமே மறுக்க வியலாது. தாழ்ந்து கிடந்த இந்நாட்டு மக்களுக்கு நன்னடையும் , நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நிமிர்ந்த நெஞ்சுமும் நெறிகளும், சிந்தனைத் தெளிவும், பகுத்துணரும் ஆற்றலும், வல்லமையும் அளிப்பதான அரும் பெரும் அறிவுப் பணியை, ஆக்கப் பணியை நமக்குக் காலம் வழங்கிய நன்கொடை பொது நூலக இயக்குநர்ப் பெருந்தகை திருமிகு இரா. கண்ணன், எம்.ஏ, பி.எட்., அவர்களது ஒப்பற்ற வழிகாட்டுதலின் அடிப்படையில், மாநில, மாவட்ட மைய நூலகங்கள் முதல், கிளை நூலகங்கள், பகுதிநேர நூலகங்களிலிருந்து இயங்கு நூலகங்கள் வரை இன்றைய நிலையில் 2643 பணிமுனைகளும் செய்து பீடுநடைபோடுகின்றன. அந்த அருங்குனச் செம்மலின் அர்ப்பணிப்போடு கூடிய அயராதத் தொண்டால் ஆக்கப் பணிகள் பல துறையில் நடைபெறக் காத்திருக்கின்றன. தமிழக அரசின் தன்னேரில்லா முனைப்பால் தமிழகத்தில் பொது நூலகங்களின் எண்ணிக்கை குறிப்பிடத் தக்க அளவுக்கு உயரவிருக்கின்றன.

படிக்கின்றப் பழக்கத்தையுடைய நாடுதான் பண்பாட்டில் சிறந்து விளங்கும். நவில்தொறும் நூல்களைப் படிக்கும் தன்மையுடையச் சமுதாயம் தான் சிந்தனை ஆற்றலில் சீர்மை பெற்றுத் திகழும்., உயர்ந்தோர் சிந்தனைகளை, ஆன்றோர் கருத்துக்களைப் படித்தறியும் பண்பைக் கொண்ட நாடுதான் பாரில்- செயலாக்கத்தால் உயர்ந்து காணப்படும்.

"Reading maketh a full man
Conference a ready man - and
Writing an exact man"

என்றார் ஓர் ஆங்கிலப் பேரறிஞர். படிப்பறிவு ஒன்றுதான் ஒருவரை முழுமை பெற்ற மனிதராக்கும். படிப்பறிவு ஒன்றின் வாயிலாக வரும் சொற்கள் தான் ஒருவரை ஏற்ற ஒரு மனிதராக்கும், படிப்பறிவின் மூலமாக வெளிப்படும் ஒருவரின் எழுத்துதான் அவரைச் சமுதாயத்திற்கு உற்ற மனிதராக்கிடும்.

தமிழகத்துப் பொது நூலகத்துறை ஒரு மாபொரும் அறிவியக்கமாய்த் தழைத்தோங்கட்டும்

வாழ்க பொது நூலகங்கள்! வளர்க அறிவுப் பணி!!

படிப்பு நிறைய அனுபவத்தைத் தேடித் தருகிறது. ஆண்டுக் கணக்கில் கிடைக்காத அனுபவத்தை ஒரு மணி நேரத்தில் ஒரு நல்ல புத்தகத்தைப் படிப்பதிலிருந்து பெற முடியும்.

ஹெர்பெர்ட் ஸோரன்ஸன

குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புக்களில் பொது நூலகப்பணி

கோ. ஜெகதீசன்
மாவட்ட நூலக அலுவலர்
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர வைத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்''

என்று கல்வியின் உயர்வைச் சுட்டிக் காட்டினார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். ஒரு ஏழைக்கெழுத்தறிவித்தல் இந்த உலகிலேயே மிகப் பெரிய தருமமாகும். அதைவிட பெரிய தருமம் அவர் வாழ் நாள் முழுவதும் தொடர் கல்வி இலவசமாக வழங்குவதாகும்.

இன்றைய நாளில், பொருளாதார சூழ்நிலை இடம் கொடுக்கும் மேல் மட்டத்தில் உள்ளவர்களும், நடுத்தர வர்கத்தில் உள்ளவர்களும் பணம் கொடுத்து நூல்கள் வாங்க சக்திபடைத்துள்ளார்கள். அவர்கள் மத்தியில் படிக்கும் பழக்கம் வளர்கிறது. தினமும் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்கிறார்கள்.

ஆனால் வறுமைக்கோட்டிற்கு கீழ் மட்டத்தில் வசிப்பவர்கள் பணம் கொடுத்து நூல்களை வாங்கி அறிவுப்பசியை போக்க அவர்களது பொருளாதார சூழ்நிலை இடம் அளிக்கவில்லை.

இம்மாதிரி மக்கள் வசிக்கும் குடியிருப்பு களில் 'குடிசைப்பகுதி மாற்று வாரியம்' அவர்களுக்கு நல்ல குடியிருப்புக்கள் வழங்கி ஆதரித்து வருவதோடு அல்லாமல் அக்குடியிருப்பு வளாகங்களில் மருவத்துவ மையம், ஆலயம், விளையாட்டு மைதானம் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

''ஆறில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற மூதுரைக்கேற்ப ''நூலகம் இல்லா ஊறிலும் குடியிருக்க வேண்டாம்'' என்று மக்கள் உணர வேண்டும், என்பதால் குடிசைப்பகுதி குடியிருப்புக்களில், ஒரு குடியிருப்பை நூலகம் அமைக்க, குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஒதுக்கித் தந்துள்ளது.

''குறைந்த செலவில் நிறைந்த படிப்பு''

இப்பொன்மொழி பொது நூலகத்துறையின் சித்தாந்தமாகும். எனவே, இப்பொன் மொழிக் கேற்ப ஏழைய எளிய மக்கள் வசிக்கும் குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புக்களில் பொது நூலகங்களை தொடக்கி வைத்து, அங்கு வசிக்கும் பெரியோர்களுக்கு, மகளிர்களுக்கு, முழுவதும் இலவச தொடர் கல்வி அளித்து அவர்கள் மத்தியில் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளது

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர மக்கள் உயர்வர்
மக்கள் உயர மன்னன் உயர்வான்

எனவே, ஒரு நாடு உயர்வடைய வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும். வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமானால் அவர்கள் சிந்திக்க வேண்டும். அவர்கள் நல்ல பல அறிவு நூல்கள் படித்தல் வேண்டும். இந்நூல்கள் படித்தல் மூலம் படிக்கும் பழக்கம் ஏற்படும். படிக்கும் பழக்கத்தின் மூலம் சிந்தனை எழுத்தாக நல்ல நூல் வடிவல் உருவெடுக்கும். இதன் முலம் மக்கள் உயர்வடைவதன் மூலம் அந்நாடு முன்னேறுவதில் எவ்வித ஐயப்பாடும் இருக்க இயலாது.

எனவே, ஒரு நாடு பொருளாதார மற்றும் விஞ்ஞான முன்னேற்றத்தில் வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் மக்கள் அனைவரும் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

''தொட்டனைத்(தூ)ஊறும் மணல்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் ஊறும் அறிவு'' என்ற வள்ளுவரின் வாக்கு வெற்றி பெறும் இடம் பொது நூலகங்கள் என்பதால், குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புக்களில் நூலகம் அமைத்திருப்பது சாலச் சிறந்ததாகும்.

இப்பகுதியில் உள்ள நூலகங்கள் ''கற்றார்க்கும் கல்லார்களுக்கும் ஓர் படிப்பிடமாக, அறிவாலயமாக இருந்து நூலக உணர்வை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது.

குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புக்களில் வசிக்கும் ஏழைப் பெண்மணிகள் தினமும் ஆலயம் செல்வது போல், நூலகத்திற்கும் தினமும். சென்று நல்ல பல அறிவு நூல்களை படித்து, அன்றாட வாழ்விற்கு பயன் உள்ளதாக்கிக் கொண்டு, வாழ்வில் வளம் பெற றுள்ளார்கள். இப்பகுதிகளில் உள்ள நூலகங்கள், அவர்களது குடும்பத்தில் ஒரு அங்கமாக இருந்துக் கொண்டு அறிவுப்பசியை தீர்க்க பெரிதும் உ்றுதுணையாக இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

செவிக்கு உணவு இல்லாத போது, சிறிது வயிற்றுக்கு ஈயப்படும் என்ற கருத்துடன் உடன்பாடு வைத்துக் கொண்டு அப்பகுதியில் வசிக்கும் ஏழைச்சிறுவர்கள், மாணவர்கள் தினமும் நூலகத்திற்கு சென்று படிக்கும் காட்சியை, அச்சிறார்களின் பெற்றோர்கள் பார்க்கும் போது,

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்.

என்ற குறளை ஒவ்வொரு பெற்றோர்களும் நினைக்க வைக்கிறது.

ஆளும் உயரனும் - அறிவும் வளரனும்
அதுதாண்டா வளர்ச்சி
தம்பி - அதுதாண்ட வளர்ச்சி

என்று பாடிச் சென்ற கவிஞ்ஞனின் அறிவுரை, அப்பகுதி சிறுவர்கள் நூலகம் சென்று அறிவை வளர்த்துக் கொள்ள தூண்டு கோலாக அமைகிறது.

நாளைய உலகம் இளைஞர்கள் கையில் என்பதற்கு எடுத்துக்கட்டாக இப்பகுதியில் வசிக்கும் சிறுவர்களில் எவரேனும் ஒருவர் வருங்காலத்தில் விஞ்ஞானியாகவோ, ஏன் நோபல் பரிசு பெறக்க கூடியவராகவோ வருவார்களே ஆனால் அனைத்து பெருமையும் அங்கு செயல்படும் அந் நூலகத்திற்கே போய் சேரும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடில்லை என்று உறுதியாக சொல்லாம்.

குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புக்களில் வசிக்கும் மக்கள் தினமும் படிக்கும் பழக்கத்தை ஏற்ப்படுத்திக் கொண்டு. அறிவு வளர்ச்சி பெற்று, அதன் மூலம் வாழ்வில்

வளம் பெற்று, வெற்றி நடை போட, நூலகத்திற்கு சென்று படிப்பதின் மூலம் கிடைக்கின்றது என்பதால் அவர்கள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. மகிழ்ச்சியினால் வாய்விட்டு சிரிக்கின்றான். துன்பம் சிறிதும் அவர்களது இல்லத்தில் இல்லை என்பதால் ''இடுக்கண் வருங்கால் நகுக'' என்று தெய்வப்புலவர் வாக்கினை நூலகம் செல்வதின் மூலம் பொய்பித்து விட்டார்கள்.

''ஏழையின் சிரிப்பிலே இறைவனை காணலம்'' என்று சொல்வது போல- ஏழையின் மகிழ்ச்சியில் அறிவை காண பொது நூலகங்களே சிறந்த கோவில்களாக திகழ்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டங்கள்

தமிழ்நாட்டில் இப்போது வீரன் அழகு முத்து ஏ.டி. பன்னீர் செல்வம், ராஜாஜி ஆகிய 3 மாவட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றையும் சேர்த்து 29 மாவட்டங்கள் தமிழகத்தில் இப்போது இருக்கின்றன. இந்த மாவட்டங்களின் பெயர்களும், அதன் தலைநகரங்களும் வருமாறு:

மாவட்டம் பெயர்	தலைநகர்	மாவட்டம் பெயர்	தலைநகர்
1. சென்னை மாவட்டம்	... சென்னை	15. பசும்பொன் முத்துராமலிங்கம்	... சிவகங்கை
2. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்	... திருவள்ளூர்	16. ராமநாதபுரம்	... ராமநாதபுரம்
3. செங்கல்பட்டு அண்ணா	... காஞ்சீபுரம்	17. காமராஜர்	... விருதுநகர்
4. வடாற்காடு அம்பேத்கர்	... வேலூர்	18. கோவை	... கோயம்புத்தூர்
5. திருவண்ணாமலை சம்புவராயர்	... திருவண்ணாமலை	19. வ.உ. சிதம்பரனார்	... தூக்துக்குடி
6. விழுப்புரம் ராமசாமி படையாட்சி	... விழுப்புரம்	20. திருநெல்வேலி கட்டபொம்மன்	... திருநெல்வேலி
7. தென்னாற்காடு வள்ளலார்	... கடலூர்	21. மதுரை	... மதுரை
8. தீரன் சின்னமலை	... கரூர்	22. வீரன் அழகமுத்து	... தேனி
9. பெரும்பிடுகு முத்தரையர்	... திருச்சி	23. சேலம்	... சேலம்
10. திருவள்ளுவர்	... பெரம்பலூர்	24. ராஜாஜி	... நாமக்கல்
11. தஞ்சாவூர்	... தஞ்சாவூர்	25. மன்னர் திருமலை	... திண்டுக்கல்
12. ஏ.டி.. பன்னீர்செல்லம்	... திருவாரூர்	26. பெரியார்	... ஈரோடு
13. நாகை காயிதே மில்லத்	... நாகப்பட்டினம்	27. தர்மபுரி	... தர்மபுரி
14. புதுக்கோட்டை	... புதுக்கோட்டை	28. நீலகிரி	... உதகமண்டலம்
		29. கன்னியாகுமரி	... நாகர்கோவில்

சுவாமி விவேகானந்தர்

பெயர் : **கொ.ஞா. அம்பிகாதேவி**
ஒன்பதாம் வகுப்பு
சிறுமலர் மேல் நிலைப்பள்ளி

நான் சிறுமலர் மேல்நிலைப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி. எனது பள்ளியில் நடக்கும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்று நடக்கும் அனைத்துப் போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றுள்ளேன். அதற்கு எனக்கு மிகமிக உறுதுணையாக இருந்து வருவது நூலகம் தான். நூலகத்தின் மூலம் நான் பல புதிய புதிய தகவல்களையும், அறிவுக் களஞ்சியங்களையும், அறிவியல் கருத்துக்களையும் பெற முடிகிறது. குறிப்பாக எங்களைப் போன்ற மாணவச் சமுதாயத்திற்கு நூலகம் மிகப்பெறும் தொண்டு செய்துவருகிறது. சமீபத்தில் ''நூலகச் செய்திமடல்'' ஒன்றை பொது நூலகம் வெளியிடப்பட்டுள்ளதை அறிந்த நான் அந்தச் செய்திமடலை படித்து மிகவும் பயன் அடைந்தேன், அதனால் நூலகச் செய்திமடலில் எழுதி பங்குபெற வேண்டும் என்று விரும்பி ''சுவாமி விவேகானந்தர்'' என்ற கட்டுரையை எழுதியுள்ளேன். பொது நூலக இயக்குநர் அவர்கள் வாய்ப்பளித்தமைக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய இந்தியாவை உருவாக்குவதில் ஒரு மாபெரும் திருப்புமுனையாக அமைந்தவர் ''சுவாமிவிவேகானந்தர்''. அதனால்தான் அவரைப் பற்றி தெரிந்திராதவர்கள் இந்தியாவில் யாரும் இருக்க முடியாது.

விவேகானந்தரின் இயற்பெயர் ''நரேந்திரநாத் தத்தர்''. விசுவநாதர்-புவனேசுவரி தம்பதியினருக்கு அருந்தவ மகனாகப் பிறந்தவர் தான் சுவாமிஜி. செல்வச் செழிப்புள்ள குடும்பத்தைச்சார்ந்த விவேகானந்தர் வக்கீலுக்குப் படித்தவர். அவர் தந்தையார் 1884 ஆம் ஆண்டு இதய நோயால் காலமானார். அதன் பிறகு, உறவினர்கள் அவரது சொத்தை அபகரித்துக் கொண்டதால் ஒருவேளை உணவுக்கும் வழியின்றி குடும்பத்தாருடன் திண்டாடினார். சொத்து குறித்த வழக்கு கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் நீண்ட நாட்களாக நடந்து, பிறகு விவேகானந்தர் வெற்றி பெற்றார்.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் மிகச் சிறந்த சீடராக விவேகானந்தர் விளங்கினார். அவரது மறைவுக்குப் பிறகு அவரது சீடர்களை ஒன்று திரட்டி விவேகானந்தர் அவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சியளித்தார். கால்நடையாகவே இமயமலை முதல் குமரிமுனை வரை நடந்தார். தன் அமெரிக்க பயனத்திற்கு முன் கேத்ரி மஹாராஜாவை சந்தித்தார். அவரின் வேண்டுதளின் பெயரில் ''விவேகானந்தர்'' என்ற பெயரை ஏற்றுக் கொண்டார்.

மே மாதம் 31-ம் தேதி,1893 ஆம் ஆண்டு சுவாமிஜி பம்பாயிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்றார்.

செப்டம்பர் மாதம் 11-ம் தேதி, 1893 ஆம் ஆண்டு சிகாகோவில் கூடிய சர்வசமயப் பேரவை மானிட ஜாதியின் பண்பாட்டு வரலாற்றில் ஈடிணையற்ற நிகழ்ச்சி ஆகும். அப்பேரவையில் இந்து மதத்தின் பெருமையை உணர்த்தி, அதன் மூலம் அனைத்து மதங்களின் ஒற்றுமைக்கு ஓர் அற்புத வழியைக் காட்டியிருந்தார் சுவாமி விவேகானந்தர். அவர் பேரவையில் கூறிய ஒரு சில வரிகள்:-

''எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம் இறுதியிலே கடலில் சென்று சங்கமமாம் பான்மையினைப் போன்றுலகோர் பின்பற்றும் தன்மை யாலே துங்க மிகு நெறி பலவாய் நேராயும் வளைவாயும் தோன்றினாலும் அங்கு அவைதாம் எம்பெரும! ஈற்றில் உனை அடைகின்ற ஆறேயன்றோ! என்று கூறினார்

இதைத்தவிர அவர் தன் சொற்பொழிவின் போது ''அமெரிக்க சகோதரிகளே, சகோதரர்களே, என்று தான் முதலில் கூறினார். சுமார் நான்கு வருடங்கள் அங்கே அயராது வேதாந்த கருத்துக்களை பரப்பிவிட்டு, 1897 ஜனவரியில் தாயகம் திரும்பினார்.

சுவாமிஜி 1899 ஆம் ஆண்டு பேலூர் மடத்தை ஆரம்பித்தார். ''எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன். பண்டைய மதங்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று குறிப்பிட்டன. புதிய மதம் தன்னம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று சொல்கிறது'' என்ற போதனையைக் கூறிய விவேகானந்தர் 4-7-1902 ல் தனது 39-ம் வயதில் அமரரானார்.

"Arise, Awake and Stop Not till the Gold is Reached"

என்னும் சுவாமிஜியின் அறிவுரையை நினைவில் கொண்டு வாழ்கைக்கு ஊன்று கோலாகப் பயன்படுத்தினால் வாழ்கையில் வெற்றி நிச்சயம்.

நூல்கள் பட்டயம் (CHARTER OF BOOKS)
பத்து கட்டளைகள்

1. மக்கள் ஒவ்வொருவரும் படிக்க உரிமை கொண்டவர்.
2. கல்விக்கு - கல்வி வளர்ச்சிக்கு - நூல்கள் மிக அவசியம்.
3. எழுத்தாளர்கள் நல்ல புதிய கருத்தினை உருவாக்க சமூகம் உதவ வேண்டும்.
4. தேசிய வளர்ச்சிக்குப் பதிப்புத்துறை அவசியம் முன்னேற வேண்டும்.
5. பதிப்புத்துறை முன்னேற சாதகமான சூழ்நிலை வேண்டும்.
6. படிப்பவர்களுக்கும், பதிப்பாளர்களுக்கும் பாலமாய் இருப்பவர்கள் விற்பனையாளர்கள்.
7. செய்தியையும் அறிவையும் அழகுணர்வும் அறிவு வளர்ச்சிக்கும் ஊக்குகின்றவைகள் நூல்கள்.
8. நூல்களின் கருத்துக்களைத் தொகுத்து அனைவருக்கும் கொடுக்கும் பணி ஆயத் தொகுப்புப்பணி ஆகும்.
9. நூல்கள் பல்வேறு நாடுகளிடையே தடை இல்லாது பரவினால் உலக நாடுகளிடையே ஒருங்கிணைப்பு உணர்வு வளரும்.
10. உலகில் அமைதியான கூட்டுறவு வளரவும், உலக நாடுகள் ஒன்றையொன்று புரிந்து கொள்ளவும் உதவக் கூடியது நூல்களே.

மாறிவரும் நூலகங்கள்

கொ.செ. ஞானதேவ்
நூலகர், தேவநேயப் பாவாணர் மாவட்ட மையநூலகம்,
சென்னை - 600 002.

நூலகம் என்று சொல்லப்படும் பொழுதும், அதில் குறிப்பாக பொது நூலகம் என்று சொல்லப்படும் பொழுதும் நூலகம் சமூகத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் பெற்றதாக விளங்கி வருவதையும், நூலகம் தனது பணியை எவ்வளவு சிறப்பாக செய்து வருகிறது என்பதனையும் அறிய முடியும். சமூக முன்னேற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்கும் நூலகம் முன்னோடிகளாக திகழந்து வருகின்றது. பண்பாடுகள் கல்வியின் முன்னேற்றங்கள் சிறப்பதற்கு நூலகம் வழி அமைத்துக் கொடுக்கிறது. தொடர்ந்து கல்வியைப்பெற இயலாமல் போனவர்களும் கல்வியைப் பெருக்கிக் கொள்ளவும், வளர்த்துக் கொள்ளவும் நூலகம் உதவியாக இருக்கின்றது.

பொது நூலகம் எல்லோருக்கும் திறக்கப் பட்டிருக்கும், அதில் வயது வித்தியாசங்கள், இனவேறுபாடுகள், பணிசெய்யும்தன்மைகள், நிறங்கள், மதங்கள், சமயங்கள் என எவ்வித வேறுபாடுகளும் இன்றி எல்லோரும் நூலகத்தை பயன்படுத்தலாம்.

வில்லியம் எட்வர்ட் என்பவர் மக்களால் தொடங்கப்பட்டு, மக்களால் ஆதரிக்கப்பட்டு, மக்களால் பயன் பெறப்பட்டு சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு மக்களின் பணத்தால் நடத்தப்படுவதே நூலகம் என்று கூறினார்.

ரோனால்ட் பென்ச் என்பவர் பொது நூலகத்தைக் குறித்து நான்கு விளக்கங்களை கூறியுள்ளார்.

1. பொது நூலகம் எவ்விதமான வேறுபாடும் இன்றி நூல்களை இரவல் கொடுத்து உதவுகிறது.
2. பொது நூலகம் அங்கு அமையப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளி லிருந்து வரிகளைப் பெற்று இயங்கி வருகிறது.
3. எல்லோரும் நூலகத்தை இலவசமாக பயன்படுத்தலாம்.
4. எல்லா நூல்களையும் பெற்றுச் செல்ல உரிமை உண்டு.

கல்வி :

கல்விக்காகவும் கல்வியின் மேம்பாட்டிற் காகவும், அறிவின் வளர்ச்சிக்காகவும் நூலகம் என கருதப்பட்டிருந்த காலங்கள் மாறி நூலகங்கள் தகவல்களைத் தருகின்ற இடமாகவும் புதிய புதிய தலைப்புகளில் அறிவுக் கருத்துக்களை மிக வேகமாக கொடுக்கும் தகவல் மையமாக மாறி வருகின்றது.

சமூகத் தகவல் மையம் :

ஒவ்வொரு மனிதனும் தனக்கு தேவையான நூல்களை நூலகத்திற்கு சென்று படிப்பதும், இரவல் பெற்றுச் செல்வதும் சமுதாய அமைப்பில் நடை பெற்று வருவது நடைமுறையில் இருந்து வருகிறது. நாளிதழ்கள், பருவ இதழ்கள், புதினங்கள் பொதுவாக பொது நூலகத்தில் ப்டிப்பதாகும். தங்களுடைய இடைப்பட்ட நேரத்தை இவ்விதம் பயன்படுத்தி வந்தாலும்

அறிவியல் தொழிற் நுட்ப வளரச்சியால் நூலக வளர்ச்சியிலும் நவீன முறைகள் ஏற்படலாயிற்று.

மாற்றங்கண்டுள்ள விஞ்ஞான முறைகள் :

மாணவர்களும், ஆராய்ச்சி யாளர்களும் தங்களுக்குத் தேவையான குறிப்புகளை மிக விரைவாகவும் துல்லியமாகவும் பெறவே விரும்புகிறார்கள். இதன் காரணமாக தகவல் தொடர்புத் துறையில் கடந்த பத்து ஆண்டுகளில் கணிப்பொறியினை உபயோகப் படுத்துவது அதிகரித்து உள்ளது. கணிப்பொறி மற்றும் தகவல் தொடர்பு மூலமாக அறிவியல் தொழில் நுட்பத் துறைகளில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரியப்படுத்த தகவல் மையங்கள் பணியாற்ற வேண்டியுள்ளது.

காகிதமில்லா சமுதாயம் (Paperless Society)

எப்.டபுள்யூ. இலங்காஸ்டர் தந்துள்ள புரட்சிகரமான கருத்தைக் கருத்தில் கொள்ளுதல் முக்கியம். அவரது எதிர்காலக் கணிப்பு தகவல் அனைத்தும் மின் துகளியல் வெளியீடுகளாகத் தான் வெளிவரும் என்பதாகும். மேலும் அவரது கணிப்பு, உலக அளவில் பின் வருமாறு வெளியீடுகள் அமையும். எனவும் அமைகிறது.

1. உலகம் 2,000 ஆண்டினை எட்டும் நேரத்தில் தற்போது வெளியாகும் பருவ ஏடுகளின் நூற்றோகைகளும் அவைகளின் சாரங்களும் மின்துகளியலில் தான்வெளியாகும்.
2. அறிவியல்தொழில்நுட்பம்சமூகவியல், மானிட இயல் முதலிய பருவ ஏடுகள் 2,000 ஆண்டை எட்டும் முன் மின் துகளியல் மூலம் தான் வெளியாகும்.

அடுத்த நூற்றாண்டில் வாசகர்கள் தங்களது நூலகங்களில் இருந்து வழக்கமாக நூல்களை இரவல் எடுத்துச் செல்வது போல், Microfilm, Microfiche, Video, CD - ROM Disk போன்ற வற்றையும் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் நூலகங்கள் இருக்கும்.

அறிவு பரிமாற்ற முறைகளில் மாற்றம் :

வெகு விரைவில் இந்தியாவில் உள்ள ஆசிரியர்களும், ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு உள்ளோரும் குறிப்பாக வேகமாக மாறிவரும் Bio-Technology போன்ற துறைகளில் ஒருவருக்கொருவர் நேரடியாக தங்களது கணிப் பொறிமூலமாகவே தேவைப்படும்போது தொடர்பு கொண்டு கருத்து பரிமாற்றம் செய்து கொள்வார்கள். மேலும் முந்திய நிலைப் போல் தங்களது கட்டுரைகளை தட்டெழுத்து செய்து பருவ ஏடுகளுக்கு அனுப்புவதைத் தவிர்த்து தங்களது கணிப்பொறிகள் மூலமாகவே அக்கட்டுரைகளை அனுப்பி விடுவார்கள்.

மேலும் எதிர்காலத்தில் இந்நிலையையும் கடந்து கணிப்பொறியின் முன் அமர்ந்த ஆசிரியர் தன் கட்டுரையை படிக்க குரல் வழி வந்த வார்த்தைகளைக் கணிப்பொறி ஏற்று தொலை தூர கணிப் பொறிக்கு அனுப்பி அக்கணிப் பொறி அக்கட்டுரையை அச்சு வடிவில் தரும். அவ்வாறே தொலை தூரக் கணிப்பொறி அதன் வழி வந்த கட்டுரையை நம் கணிப்பொறி ஏற்று அச்சு வடிவில் பெற முடியும்.

அறிவு வளர்ச்சியும் நூல்கள் வெளியீடும்

அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை தகவல். தகவல் வெகு வேகமாக அறிவுத் துறையில் பரி மாற்றப்படவேண்டிய நிலையில் எல்லாநாடுகளும் இன்று உள்ளன. ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கும் இரு மடங்காக அறிவு வளர்ச்சி பெருகி வருவதைக் காணலாம். பழையனமாறி புதியவை தோன்றிய வண்ணம் உள்ளன. அறிவும் கல்வியும் ஒன்றை

ஒன்றுச் சார்ந்து பல புதிய உத்திகளை உருவாக்கி வருகின்றன. பெருகி வரும் அறிவு, அறிவியல் துறையிலும் தொழில் நுட்பத் துறையிலும் வளர்ந்து வருவதை எளிதில் காணலாம்.

பண வீக்கத்தின் விளைவு :

பொதுவாக விலை உயர்வு எல்லா நிலைகளிலும் அதிகரித்து வருகிறது. குறிப்பாக நூல்களின் விலையும், பருவ ஏடுகளின் சந்தாவும் அதிகரித்துள்ளது. பருவ ஏடுகளின் ஆண்டுச் சந்தா ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. நூல் அச்சடிக்கும் காகிதத்தின் விலை உயர்வு அடைந்து உள்ளது. இதனால் நூல்களின் விளைகள் ஏறி வழி அமைந்து விடுகிறது.

இட நெருக்கம் :

நூல்களின் எண்ணிகையின் காரணமாக இடநெருக்கடி ஏற்பட புதிய தற்கால கருத்துள்ள நூல்கள் கொண்ட நூல்களுக்கு இடமில்லாமல் போய் விடும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. நூலகங்களில் ஏற்படும் நெருக்கடிகளை ஓரளவு போக்குவதற்குப் பல கருத்துக்கள் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

1. Dormitry Library
2. Micro Film
3. Micro Fiche
4. Photocopy

நூலக கூட்டு ஒருங்கிணைப்பு - தொண்டாற்ற வழி செய்யும் ஓர் அமைப்பு

கூட்டுறவு முறையில் சில அடிப்படை கருத்துக்களின் மூலம் நூலகங்களும், பருவ ஏடுகளையும் அனைத்து நூலகங்களும் பகிர்ந்துக் கொள்ளலாம். இவைகளை ஒரு நூலகத்தின் சொத்தாகக் கருதாமல், நகர, மண்டல தேசியச் சொத்தாகக் கருதி வாசகர்களுக்குத் தொண்டு செய்யலாம்.

சரியான தகவலைச் சரியான தகவல் வேண்டுபவருக்குச் சரியான நேரத்தில் தந்து உதவ வேண்டும் என்பதே இன்றைய வளர்ந்து வரும் உலகத்தின் முக்கிய குறிக்கோளாகும். டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்கள் தந்துள்ள ஐந்து நூலகவிதிகளில் நூலகம் என்ற சொல் தகவல் என்ற சொல்லையும் குறிப்பதாகவே தெரிவித்துள்ளார்.

1. தகவல் பயன்படுத்துவதற்காக.
2. ஒவ்வொரு வாசகருக்கும் அவர்களுக்கு உரிய தகவல் தரவேண்டும்.
3. ஒரு குறிப்பிட்ட தகவலை அதற்கு உரிய வாசகர்களுக்குத் தரவேண்டும்.
4. தகவல் விரும்பும் வாசகர்களது காலத்தை கருதவேண்டும்.
5. தகவல் படைப்பு பல வடிவில் தொடர்ந்து வெளிவந்தவண்ணம் இருக்கும்.

முடிவுரை :

உலகத் தகவல் தொடர்பு, புதிய கல்வித் திட்டம், தொலைதூர கல்வித் தொடர்பு போன்ற காரணங்களினால் நூலகப் பயன்பாடும் நூலகத்திலிருந்து பெறுகின்ற தகவல் தொடர்பும் அதிகரித்துள்ளது. நூலகத்தை பயன்படுத்துகின்ற வர்களும் சமுதாயத்தில் அதிகரித்துள்ளனர்.

இந்திய அரசின், வயது வந்தோர் கல்வி திட்டம் காரணமாக இவர்களின் தேவையைபூர்த்தி செய்யவும் பொது நூலகங்கள் பயன்பட்டு வருகின்றன.

இந்திய அரசின் திட்டம், மாநில அரசின் திட்டங்களினால் வளர்ந்து வருகின்ற சமுதாய நல முன்னேற்றம், நகர்புற, கிராமப்புற வளர்ச்சி, குடும்ப

நலத்திட்டம், விவசாயம், குடிசைத் தொழில்கள், தொழிற்கூடங்கள், இவைகளுக்கான மூலதனங்கள், வசதிகள், போன்றவைகளுக்கு எவ்விதம் அரசிடமிருந்து பெறுவது, அதற்கான வழிமுறைகள் குறித்தும் பலவிதமான தகவல்களை தேவையுள்ள அனைத்து துறையினருக்கும் தந்து பொது நூலகங்கள் தொண்டினை செய்து வருகின்றது.

இவைகளின் மூலம் பொது நூலகம் சமுதாயத்திற்கு தகவல்களை தந்து சிறப்பான பணிகளை செய்து நாட்டிற்கு ஒரு இன்றியமையாத இடமாக விளங்கி வருகின்றது.

ஆலன் பன்ச் என்பவர் சமுதாயத்திற்கு தகவல் தருவது அந்த சமுதாயம் அன்றாட வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சனைகளை தீர்த்து உயர்வுக்கு வழி காணவும், சில இடங்களில் என்னென்ன தகவல்கள் மிக பின்னடைந்த பகுதிகளில் தேவை எனவும் கூறியுள்ளார்.

உடல்நலன், வீட்டு வசதி, தொழிற்பயிற்சி, வேலை வாய்ப்பு, குழந்தைகள் நலம், சேமிப்பு, மருத்துவம், சட்டம் போன்ற பலவிதமான தகவல்களுக்கு பொது நூலகம் சரியான தகவல்களை தந்தும் விஞ்ஞான தொலை தொடர்பு மூலமும் தொடர்பு கொண்டும் பணிகளை சிறப்பாக செய்து தவல்களை சமுதாயத்திற்கு விரைவாக தந்து உதவுகின்றது.

இவ்வாறு நூலகங்கள் தகவல் மையங்களாக மாறி வருகின்றன.

புத்தகங்களைப் படிப்பது. ஒருவனை முழு நிறைவான மனிதனாக்கும். கலந்தாய்வு செய்தல், துல்லியமான மனிதனாக்கும். புத்தகம் எழுதுதல், செயல் முனைப்பான மனிதனாக்கும்.

- பிரான்சிஸ் பேக்கன்.

நூலகங்களில் கணினியைப் புகுத்துவதின் அவசியம்

1. அதிக வேலைப் பளு குறைப்பு.
2. நூலகச் செயல்பாடுகளில் கட்டுப்பாட்டின் அவசியம்
3. விஞ்ஞான முறைப்படுத்தப்பட்ட செம்மையான செயல்பாடுகள்.
4. தரமான நூலகப் பணி.
5. வாசகர்களுக்குப்புதிய நூலகப் பணிகளை வழங்குதல்.
6. இரட்டிப்பு வேலைகளைக் குறைத்தல்.
7. இருக்கும் பணியாளர்களைக் கொண்டு பணிகளை திறம்படச் செய்து முடித்தல்.
8. கூட்டுறவு முறையில் தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல்.
9. சரியான, தரமான செய்திகளை உரிய நேரத்தில் பெறுதல்.
10. நூலக நிர்வாகத்திற்குத் தேவையான புள்ளி விவரங்களை உரிய நேரத்தில் சேகரித்தல்.

நூல் சேகரிப்பிரிவில் ஒருமுறை புத்தகவிவரப் பட்டியல் (Bibliography) தயாரிக்கப்பட்டால் அந்த விவரங்களை அடிப்படையாகக் கொண்டு மற்றப் பிரிவுகள் தங்களுக்குத் தேவையான தகவல்களைக் கணினிக் கட்டமைப்பு (Net Work) மூலம் பகிர்ந்து கொள்ளலாம்.

இராசாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிறுவனமும், பொது நூலக வளர்ச்சிக்கு அதன் உதவிகளும்

(Raja Rammohan Roy Library Foundation and its assistance for Public Library Development)

இர. ராமசாமி
உதவிகளப் பணி அலுவலர் (தெற்கு மண்டலம்)

தோற்றம்

இராசாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிறுவனம் தொடங்கப்பட்ட 1972ம் ஆண்டு பல வகைகளில் குறிப்பிடத் தக்க ஆண்டாக அமைந்தது. இந்தியா விடுதலை அடைந்த வெள்ளி விழாவினை அந்த ஆண்டில் கொண்டாடியது. அதே ஆண்டு உலக புத்தக ஆண்டு (International Book Year) ஆகவும் கொண்டாடப்பட்டது. இந்தியாவில் பல சமூக சீர்திருத்தங்களுக்கு முன்னோடியாக விளங்கி, பழைய மூடப் பழக்கங்களை எதிர்த்து, நவீன இந்தியாவை உருவாக்குவதில் ஒப்பற்றவராக விளங்கிய இராசாராம் மோகன்ராய் பிறந்த 200 வது ஆண்டு விழாவும் அந்த ஆண்டில் தான் கொண்டாடப்பட்டது. அன்னாரது நினைவை நீடித்து நிற்கச் செய்யும் வண்ணம் இந்தியப் பிரதமர் தலைமையில் அமைந்த இராசாராம் மோகன்ராய் இரு நூறாவது ஆண்டு விழாக் கொண்டாட்டக் குழு ஒரு போற்றத் தக்க முடிவு எடுத்தது. அந்த முடிவின் படி இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் நூல்களைக் கொண்டு சென்று நூல்களைப் படிக்கும் பழக்கத்தை வளர்க்கும் வண்ணம் நூலகங்களுக்கு உதவியளிக்கவும், ஊக்க மளிக்கவும் ஒரு அறக்கட்டளை உருவாக்கப் பட்டது.

இவ்வாறாக இந்திய அரசால் இராசாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிறுவனம் 1972ம் ஆண்டு மே 6ம் நாளில் கல்கத்தாவில் உள்ள தேசிய நூலக வளாகத்தில் துவக்கப்பட்டது. இந்திய அரசால் துவக்கப்பட்டு முழு நிதி ஆதாரங்களையும் அது இந்திய அரசிடமிருந்து பெற்றாலும் சுயாட்சி அதிகாரம் பெற்றதாக இயங்கி வருகிறது. இதற்காக மேற்கு வங்காள சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

நோக்கங்கள் :

இந்த அறக்கட்டளையைப் பதிவு செய்யும் போது அதற்கு 29 நோக்கங்கள் குறிக்கோள்களாகக் கொண்டிருந்தது. அவைகளில் குறிப்பிடத் தக்கவை.

1. நாட்டில் நூலக இயக்கத்திற்கு ஊக்கமளித்தல்.
2. தேசிய நூலகக் கொள்கை (National Library Policy) யை உருவாக்கி அதனை மத்திய, மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காகப் பணியாற்றுதல்.
3. நாட்டில் நூலகச் சட்டம் அமுல்படுத்தப் பாடுபடல்.

4. நூலகங்களுக்கு நிதி உதவியும், தொழில் நூணுக்க உதவியும் வழங்குதல்.

5. நூலக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நூலகச் சங்கங்களுக்கும், மற்ற அமைப்புகளுக்கும் நிதி உதவி அளித்தல்.

6. இந்நாட்டில் நூலக வளர்ச்சி தொடர்பான எல்லாவற்றிற்கும் இந்திய அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

7. இந்நாட்டில் நூலக வளர்ச்சி மற்றும் அதன் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கும் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல்.

8. நூலகங்களுக்கிடையேயான கடன் வழங்கல் முறையில் தேசிய நூலகங்கள், மாவட்ட நூலகங்கள் மற்றும் பிற வகை நூலகங்கள் ஆகியவைகளின் பணிகளை ஒருங்கிணைந்துத் ஒரு தேசிய நூலக முறைமை (National Library System) உருவாக்க உதவுதல். மற்றும்.

9. நூலக வளர்ச்சிக்கான ஆராய்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவைகளாகும்.

அறக்கட்டளையின் உறுப்பினர்கள்

அறக்கட்டளையின் உறுப்பினர்களின் விவரங்கள்:

1. இந்திய அரசு, பண்பாட்டுத்துறையின் அமைச்சர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் தலைவராக இருப்பார்.

2. இந்திய அரசு, பண்பாட்டுத் துறை செயலாளர்.

3. இந்திய அரசால் நியமிக்கப்பட்ட 13 பேர்களில் நால்வர் நூலகர்கள், ஒன்பது பேர் கல்வியாளர்கள்.

4. பின்வரும் நிறுவனங்களிலிருந்து ஒரு பிரதிநிதி.

அ. இந்திய நூலகச் சங்கம்.

ஆ. சாகிந்திய அகாதமி

இ. தேசிய புத்தக அறக்கட்டளை, இந்தியா.

5. கல்வித்துறை, சமூக நலத்துறை, நிதி அமைச்சகம் ஆகியவற்றின் சார்பாக இந்திய அரசால் நியமிக்கப்பட்ட மூவர்.

6. இயக்குநர், இராசாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை இதன் உறுப்பினர் - செயலாளர்.

அறக்கட்டளை உறுப்பினர் குழு ஒரு கொள்கை வகுக்கும் அமைப்பாகும். இதன் நிர்வாகத்தைக் கவனிக்க ஒரு நிர்வாகக் குழு செயல் படுகிறது.

அறக்கட்டளையின் செயல் திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்த நூல் தேர்வுக்குழு, நிதி உதவிக்குழு போன்ற பல குழுக்களும் துணைக்குழுக்களும் அவ்வப்போது அமைக்கப் படும்.

மண்டல அலுவலகங்கள்

அறக்கட்டளை வழங்கி வருகின்ற உதவிகளின் விளைவுகளை அறியவும் அவை செவ்வனே செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும் உதவிகளப்பணி அலுவலர்களின் கீழ் மண்டல அலுவலகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. தெற்கு மண்டல அலுவலகம் சென்னையிலும், மேற்கு மண்டல அலுவலகம் பம்பாயிலும் கிழக்கு மண்டல அலுவலகம் கல்கத்தாவிலும் டெல்லியில் வடக்கு மண்டல அலுவலகம் மற்றும் விருந்தினர் இல்லமும் அமைக்கப்பட்டுள்ளன.

பொது நூலக வளரச்சிக்கு ஆற்றி வரும் பணிகள்

நாட்டின் அனைத்து மாநிலங்கள், மத்திய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளிலும் பொது நூலக வளர்ச்சிக்கு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது அறக்கட்டளை. இத் திட்டங்களின் கீழ்

இதுவரை 22,000 த்துக்கும் மேற்பட்ட நூலகங்கள் பண உதவியும், நூல்கள் புத்தக அலமாரிகள், கட்டிட உதவி மற்றும் தொலைக்காட்சி, வீடியோ-கம்-ரெக்கார்டர் உதவிகளும் பெற்றுள்ளன.

நேரடி உதவி திட்டங்கள்

இந்நிறுவனம் அளித்து வரும் உதவிகளை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று நேரடி உதவி. இதனை இணை இல்லாத உதவி திட்டம் எனலாம். இரண்டாவது இணை உதவி திட்டங்கள். முதலில் நேரடி உதவி திட்டங்களைப் பார்ப்போம்.

நேரடி உதவி திட்டங்களாக இப்போது இரண்டு திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. அவைகளில் முதலாவது நேரடி நூல் உதவி திட்டம். இத்திட்டத்தின் படி இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்ட நூலகங்களுக்கும், மாநில மைய நூலகங்களுக்கும் கல்கத்தாவிலிருந்து நேரடியாக நூல்கள் அளிக்கப்படுகின்றன. இத்துடன் மத்திய அரசால் நிருவகிக்கப்பட்டு வரும் நேரு இளைஞர் மன்றம் போன்ற பல அமைப்புகளுக்கும் இலவச நூல்கள் வழங்கப் படுகின்றன. இதற்கென அமைக்கப்பட்டுள்ள மத்திய நூல் தேர்வுக்குழு நாடு முழுவதும் வெளியாகும் நூல்களில் இருந்து தரமான நூல்களைத் தேர்ந்தெடுத்து தருகிறது. இவ்வகைகளில் குறிப்புதவி நூல்களுக்கு முக்கியத்துவம் தந்து வாங்கப்படுகின்றன. ஆங்கில நூல்களே பெரும்பாலும் வாங்கி அளிக்கப் படுகின்றன.

சிறுவர் நூலகங்களுக்கு உதவி

சிறுவர்கள் மத்தியில் படிக்கும் பழக்கத்தினை வளர்ச்சி பெறச் செய்வதற்காக நாடு முழுவதும் உள்ள சிறுவர் நூலகங்களுக்கும் பொது நூலகங்களில் உள்ள சிறுவர் பகுதிக்கும் உதவி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு நூலகத்துக்கும் ரூ.5,000/- த்துக்குள் சிறுவர் நூல்கள் வாங்கவும், சிறுவர்களுக்கான மேசை, நாற்காலிகள் மற்றும் டேப்ரெக்கார்டர், வானொலிப் பெட்டி அல்லது டு-இன்-ஒன் போன்றவை வாங்கவும் இந்த உதவியினைப் பயன் படுத்திக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட மைய நூலகங்களும் இந்த திட்டத்தின் கீழ் ரூ.5,000/- மதிப்புள்ள சிறுவர் நூல்களைப் பெற்று பயனடைந்தன.

இணை உதவி திட்டங்கள்

இராசாராம் மோகனராய் நூலக அறக்கட்டளையிலிருந்து வழங்கப்படும் அதிக அளவிலான உதவி இணை உதவி திட்டங்களாகும். இந்த திட்டத்தின் படி ஒவ்வொரு மாநிலமும் அறக்கட்டளைக்கு ஒரு குறிப்பிட்ட தொகையினை ஒதுக்கித் தரவேண்டும்.

மாநில அரசு எவ்வளவு தொகையினை அளிக்கின்றதோ அதற்கு இணையான தொகையினை அறக்கட்டளையானது மாநில நிதிக்கு அளிக்கும். இவ்வகையில் சேர்ந்த மொத்த தொகையினையும் அந்தந்த மாநிலங்கள் தங்களது மாநில பொது நூலக வளர்ச்சிக்குச் செலவிடலாம். இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் இவ்வாறு இணை மாணிய உதவி பெற்று அதன் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை அமுல்படுத்தி பயன் பெறுகின்றன.

தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறையின் மூலம் ஆண்டுக்கு 15 லட்ச ரூபாய் இணை மாணிய உதவி பெற செலுத்தப்படுகிறது. இதற்கு இணை மாணியமாக 15 லட்ச ரூபாயை அறக்கட்டளை அளிக்கிறது. இரண்டும் சேர்த்து உள்ள 30 லட்ச

ரூபாய்கள் மாநிலத்தில் உள்ள பொது நூலகங்களின் வளர்ச்சிக்கு செலவிடப்படுகிறது. இந்த நிதியை எவ்வாறு செலவிடுவது என்பதை மாநில நூலகத் திட்டக்குழு (State Library Planning Committee) முடிவு செய்கிறது. பொது நூலக இயக்குநர் இக்குழுவின் செயலாளர். தமிழ்நாடு அரசு கல்வித்துறை செயலாளர் இக்குழுவின் தலைவர். மாநில அரசால் நியமிக்கப்படுகின்ற நியமன உறுப்பினர்கள் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். இத் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் பல்வேறு உதவிகளை இனி பார்ப்போம்.

இணை நூல் உதவி

இணை உதவி திட்டங்களில் பெரும் பாலான மாநிலங்கள் செயல் படுத்தும் திட்டம் நூல் உதவி திட்டமாகும். இத் திட்டத்தில் மாநில மொழிகளில் அந்தந்த ஆண்டுகளில் வெளியாகும் நூல்கள் தேர்ந்தெடுக்கப்படும் மாநிலத்தில் உள்ள பல்வேறு நூலகங்களுக்கு வழங்கப்படுகின்றன. இணை உதவித் தொகையில் பெரும்பகுதி நூல்கள் வாங்குவதற்கே செலவிடப்படுகின்றன. தமிழ் நாட்டில் உள்ள 1,500 க்கும் மேற்பட்ட பொது நூலகங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் நூல்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இயங்கும் நூலக சேவைக்கு உதவி

இணை நிதியிலிருந்து இயங்கும் நூலகங் களுக்கும் (MobileLibraries) கிராமப்புற நூல் வைப்பு மையங்களுக்கும் (Rural Book Deposit Centres) உதவி அளிக்கப் படுகிறது. இத் திட்டத்தின் கீழ் நூல்கள், சைக்கிள்கள், ரிக்ஷாக்கள், பெட்டிகள், பைகள் முதலியவைகளை இயங்கும் நூலகத்திற காக வாங்கலாம். இயங்கும் நூலக உதவி திட்டத்தின் கீழ் ஒரு நூலகத்துக்கு வேண்டிய நூல்கள், மற்ற பொருட்கள் வாங்கவதற்கு ரூ.20,000/- அளிக்கப்படுகிறது.

கருத்தரங்குள், பயிற்சி வகுப்புகள் நடத்த உதவி திட்டம்

நூலக சேவையின் தரம் வளர்ச்சியடை வதற்காக அவ்வப்போது நூலகங்கள் பற்றிய கருத்தரங்குகள் மற்றும் நூலகத்துறை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்த வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து இத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ் மாநில அரசு, நூலக இயக்குநர், மாநில மைய நூலகம், நூலக சங்கங்கள், நூலக பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் ஆகியவை நிதி உதவி பெறத் தகுதி உள்ளவை. பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் ஆகிய அமைப்புக்கள் நிதி உதவி பெறத் தகுதி உள்ளவை. பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் பாதி செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இத் திட்டத்திற்கு அதிக அளவாக ரூ.10,000/- வரை நிதி உதவி அளிக்கப்படும். இத் திட்டத்திற்கான மனுக்களை மாநில அரசு/மாநில நூலக திட்டக்குழு பரிந்துரை செய்ய வேண்டியது அவசியம். புத்தகக் கண்காட்சிகளுக்கும் இதன் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

நூல்கள் இருப்பு வைத்தலுக்கு உதவி திட்டம்

நூலக பொருட்களை சரியான முறையில் இருப்புவைக்கவும், காட்சிப் பொருளாக வைக்கவம் உதவி அளிக்க இத் திட்டம் வகை செய்கிறது. இத் திட்டத்தின் கீழ் புத்தக அலமாரிகள், அடுக்கு தட்டுகள் போன்றவை வாங்க ரூ.14,000/- வரை ஒரு நூலகத்துக்கு உதவி அளிக்கப்படுகிறது.

மாவட்ட அளவுக்குக் கீழுள்ள பொது நூலகங்களுக்கு இடவசதியை அதிகரிக்க உதவி திட்டம்

அரசு நூலகங்களுக்கோ அல்லது உதவி பெறும் பொது நூலகங்களுக்கோ அவைகளின் இடவசதியை அதிகரிக்கச் செய்வதற்கு ஒரு நூலகத்திற்கு ஒரு ஆண்டுக்கு ரூ.50,000/- வரை கட்டிட நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்த நிதி உதவியைப் பெறுவதற்கு அந்த நூலகத்தில் 2,000 த்துக்கு மேற்பட்ட நூல்களுக்கு மேல் இருக்க வேண்டும். மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் அது செயல்பட்டு வந்திருக்க வேண்டும். தமிழகத்தில் 35 கிளை நூலகங்களின் கட்டிடங்களைக் கட்டுவதற்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி உதவி கிளை நூலகங்கள், தாலுக்கா, வட்டார, நகர, கிராம நூலகங்களுக்குக் கிடைக்கும். புதிய கட்டிடங்கள் கட்டவோ, கட்டிட விரிவாக்கத்திற்கோ இதனைப் பயன்படுத்தலாம்.

மாநில மைய நூலகங்கள் மாவட்ட நூலகங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி, வி.சி.ஆர் உதவி

பொது நூலகப் பணிகளை ஒலி-ஒளி-சாதனங்களின் மூலம் மாறுபட்ட முறையிலும் அளிக்கும் வண்ணம் இத் திட்டம் உருவாக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் மாநில அரசால்நேரடியாகநடத்தப்பெறும்அல்லது உதவி பெறும் மாவட்ட நூலகங்களுக்கும், மாநில மைய நூலகங்களுக்கும் இணை நிதியிலிருந்து ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும், வி.சி.ஆர் மற்றும் அதன் துணைக்கருவிகளும், ஐந்து கேசட்களும் ஒரு ஆண்டுக்கு வாங்குவதற்கு நிதி உதவி அளிக்கப்படும். இவ்வாறு அளிக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியும், வி.சி. ஆரும் கல்வி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும். தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட மைய நூலகங்களும் இத்திட்டத்தின் கீழ் வண்ணத் தொலைக்காட்சி பெட்டியையும், வி.சி. ஆரையும் பெற்றுள்ளன.

பொது நூலகப் பணிகளை ஆற்றிவரும் சேவை நிறுவனங்களுக்கு உதவி

அரசு நூலகங்கள் மட்டுமல்லாது பல சேவை நிறுவனங்களும் பொது நூலகப் பணிகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆற்றி வருகின்றன. அவைகளுக்கு உதவும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

சேவை நிறுவனம் என்பது அரசினால் பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளையாக இருக்க வேண்டும். இதற்கென முறையாக அமைக்கப்பட்ட நிர்வாகக்குழுவும், அதன் கடமைகள், பொறுப்புகள் முதலியவை அமைப்புச் சட்டத்தில வரையறுக்கப்பட்டும் இருக்க வேண்டும். நிதி உதவிக்கு வேண்டுகோள் விடுப்பதற்கு முன்பு மூன்று ஆண்டுகளுக்குக் குறையாது அது செயல்பட்டிருக்க வேண்டும். ஒரு தனி நபர் அல்லது நபர்களின் குழுவின் லாபத்துக்காக நடத்தப்படுவதாக அந்த நிறுவனம் இருக்கக் கூடாது.

இத்தகைய சேவை நிறுவனங்களுக்கு நூல்கள் வாங்குவதற்கு ஆண்டுக்கு ரூ.15,000/-, மேசை, நாற்காலிகள், அலமாரிகள் மற்றும் தளவாடச் சாமான்கள் (Furniture and Equipments) வாங்குவதற்குரூ.30,000/-, கட்டிடங்கள் கட்டவும் கட்டிட மாற்றங்களுக்கும் ரூ.3,00,000/- வரை நிதி உதவி அளிக்கப்படும். இந்த நிதி உதவியைப் பெறும் சேவை நிறுவனம் நூற்றுக்கு ஐம்பது என்ற

விகிதத்தில் நிதி உதவிக்குச் சமமான தொகையினை தனது நிதி ஆதாரங்களிலிருந்து செலவிட தயாராக இருக்க வேண்டும்.

கட்டிட நிதி உதவி கேட்கும் சேவை நிறுவனங்களில் நூலகத்தில் 5,000 த்துக்கும் மேற்பட்ட நூல்கள் இருக்க வேண்டும்.

நிதி உதவி பெறுவது எப்படி?

அறக்கட்டளையிலிருந்து உதவி பெற விரும்பும் நூலகங்களும் சேவை நிறுவனங்களும் அந்தந்த மாநில நூலக திட்டக்குழுவின் அமைப்பாளராக உள்ள பொது நூலக இயக்குநரை அணுக வேண்டும். இக்குழுவின் பரிந்துரையின்படி மட்டுமே உதவிகள் அளிக்கப்படும்.

நூலக வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பிற பணிகள்

அறக்கட்டளையின் நோக்கங்களுக்கேற்ப பல பணிகளை இந்நிறுவனம் ஆற்றி வருகிறது. அறக்கட்டளையின் முயற்சியினால் ''தேசிய நூலகக் கொள்கை'' ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த அறிக்கையின் மீது மத்திய அரசின் ''உயர்மட்டக்குழு'' ஒன்று அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் இந்திய அரசால் ஏற்றுகொள்ளப் பட்டுவிட்டன. தேசிய நூலகக் கொள்கை விரைவில் பாராளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட உள்ளது.

நாடு முழுவதும் நூலகத்துறை தொடர்பாக நடை பெறும் பல கருத்தரங்குகள் மாநாடுகளுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. அத்துடன் அறக்கட்டளையின் சார்பாக அவ்வப்போது பொது நூலகங்கள் பற்றிய மாநாடுகளும், கருத்தரங்கு களும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் உள்ள பொது நூலகங்களில் இராசாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளையின் உதவி பெற்ற நூலகங்களைப் பற்றிய விவரங்களைத் தொகுத்து ''இந்திய பொது நூலகங்களின் விவரப் பட்டியல்'' (Directory of Indian Public Libraries) ஒன்றினை அறக்கட்டளை வெளியிட்டுள்ளது.

பொது நூலகம் தொடர்பான நமது நாட்டிலும், அயல் நாடுகளிலும் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைக் தொகுத்து ''ஆர்.ஆர்.ஆர்.எல்.எப். செய்தியறிக்கை'' (R.R.R.L.F. News Letter) ஒன்றினை காலாண்டுஇதழாக வெளியிடப்படுகிறது. இவ்விதழ் இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்ட மைய நூலகங்களுக்கும் அனுப்பட்டு வருகிறது.

இராசாராம் மோகன்ராய் நூலக அறக் கட்டளைதுவங்கி 25 ஆண்டுகள் முடிந்து விட்டன.

இதுவரை சுமார் 26 கோடி ரூபாய்களுக்கு மேல் பல வகையான உதவிகள் பொது நூலகங்களுக்கு அறக்கட்டளையால் அளிக்கப்பட்டுள்ளது. இனி வரும் ஆண்டுகளில் மேலும் அதிக அளவில் பொது நூலகங்களுக்கு உதவிகளை வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது.

நிறைய புத்தகங்களைச்சேகரித்து அவைகளைப் படிக்காமலிருப்ப வனுடைய நிலை தனக்கு அருகில் மெழுகுவர்த்தி எரிந்து ஒளி தந்து கொண்டிருப்பதை அறியாமல் ஆழ்ந்து தூங்கும் குழந்தையினுடைய நிலைக்குச் சமமாகும்.

ஹென்றிபீச்சர் (Henry Peacher)

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை தேசிய நூலக வாரவிழா சிறப்பு நிகழ்ச்சிகள் தொகுப்பு

பொது நூலகத்துறையின் இருபத்தி ஒன்பதாவது தேசிய நூலக வாரவிழா 14.11.96 முதல் 20.11.96 வரை மிகச்சிறப்பாக தேவநேயப் பாவாணர் மாவட்டமைய நூலகக் கட்டிடத்தில் நடைபெற்றது. 1968 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும், தேசிய நூலகவார விழா இந்த ஆண்டும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

14.11.96 அன்று நடைபெற்ற பொது நூலக தொடக்க விழாவில் வரவேற்புரையை இயக்குநர் திரு. இரா கண்ணன் அவர்கள் நூலகத்துறை வளர்ச்சி பெற்று வருவதையும் பணிகள் மேலும் சிறப்படைய உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.23 கோடியை நூலகத்துறைக்கு கிடைக்கச் செய்தால் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று கூறினார்கள்.

தலைமை உறையாற்றிய கல்வித்துறை செயலர் அவர்கள் நூலகத்தின் இன்றியமையாத அவசியத்தையும் அதனை வாசகர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் குழந்தைகளின் பிரியராக இருந்த முன்னாள் பாரதப் பிரதமர் நேரு சிறந்தப் படிப்பாளி, சிறந்த எழுத்தாளர். அவரது பிறந்த நாளில் குழந்தைகள் தினமும், தேசிய நூலக வாரவிழாவும் சிறப்புக்குரிய ஒன்றாகும் என்று கூறினார்கள். நூலக வரிபாக்கி கிடைத்தால் நூலகத்திற்கு செழுமையான பணிகள் செய்ய முடியும் என்று கூறினார்.

நூல் பதிப்பாளர்கள் கலந்து கொண்ட புத்தக கண்காட்சியை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். பொது நூலகத்துறையின் முதல் முயற்சியாக, வெளியிடப்பட்டுள்ள நூலகச் செய்தி மடலை மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வெளியிட முதல் பிரதியினை உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு கோ.சி. மணி அவர்கள் பெற்றுக் கொண்டார். செய்திமடலை வெளியிட்டு விழாவில் சிறப்புரை ஆற்றிய கல்வி அமைச்சர் அவர்கள் ''நூலக விழாவை கிராமப்புறங்களில் நடத்த வேண்டும் என்றும், இதன் காரணமாக அங்குள்ள மக்களிடம், நூலக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்றும் கூறினார். அடுத்த ஆண்டிலிருந்து மாவட்டத்துக்கு 10 ஒன்றியங் களிலாவது நூலக வாரவிழாவை நடத்த வேண்டும் என்றும் கூறினார். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 முதல் 100 புதிய கிளை நூலகங்கள் துவங்கப்படவேண்டும் என்றும், இதன் மூலம் அடுத்த சில ஆண்டுகளில் ஐயாயிரம் கிளை நூலகங்கள் அமைக்க வேண்டும் என்றும் கூறினார். வருகிற ஆண்டில் 625 கிராமங்களில் கிராமப்புற நூலகம் ஏற்படுத்த தீர்மானித்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறினார். கிராமமக்கள் இதற்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். படிக்கும் பழக்கத்தை மக்கள்

வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை அமைசர் அவர்கள் வலியுறுத்தினார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி. மணி அவர்கள் பேசும் பொழுது பொது நூலகத்துறை இயக்குநர் அவர்களும் கல்வித்துறை செயலர் அவர்களும் கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப நூலகத்துறை மேலும் வளர்ச்சி பெறுவதற்காக 23 கோடி நூலகவரி நிலுவையாக இருந்தாலும் அதனைக் கொடுக்க அரசு தகுந்த நடவடிக் கைகளை எடுக்கும் என்று உறுதியளித்தார்.

திரு. லேனாதமிழ்வாணன் ஆசிரியர் குமுதம் அவர்களின் வாழ்த்துரைக்குபிறகு திரு. இரா. முத்துக்குமாரசாமி தலைவர், தமிழ் நூல் வெளியீட்டார் அவர்கள் நன்றியுரையுடன் தொடக்க நாள் நிகழ்ச்சி இனிதாக நடைபெற்றது.

15.11.96 அன்று பதிப்பாளர், படைப்பாளர் நாளாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு வரவேற்புரை ஆற்றிய திரு.அகிலன் கண்ணன் - அவர்கள், விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று படைப்பாளர், பதிப்பாளர், நூலகர்,ஆகிய இந்த மூன்று பேரும் இணைந்து இந்த சமுதாயத்திற்கு நல்ல கருத்துக்களை புதுமையான தகவல்களை தருவதில்தமிழகம்முன்னோடியாகதிகழ்வதற்கான பணிகள் செய்து வருவதாகக் கூறினார்.

தலைமை உரையாற்றிய தமிழ் நாடு அரசு கல்வித்துறை இணைச்செயலர் திரு. சி. ஆரோக்கியசாமி, இ.ஆ.ப. அவர்கள்பேசும் பொழுது நூலகங்களும், நூலகர்களும் நல்ல நூல்களையெல்லாம் வாசகர்கள் படிப்பதற்காக வாய்ப்புகளையெல்லாம் செய்து தருகின்றார்கள் என்றும், ஒய்வு கிடைக்கும் பொழுதெல்லாம் நல்ல நூல்களை அனைவரும் படிக்கவேண்டும்என்றும், படிப்பதினால் ஒருவன் தன்னை சமுதாயத்தில் உயர்த்திக் கொள்ள முடியும் என்று பேகன் கூறியுள்ளபடி அதிகமாக நூல்களைப் படிக்க நூலகத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

வாழ்த்துரையில் திரு. எம். ராமகிருஷ்ணன், இ.செ.ப. இணை இயக்குநர் (செய்தி) சென்னை தொலைக் காட்சி நிலையம் அவர்கள் பேசும் பொழுது அமெரிக்க நூலகம், பிரிட்டீஷ் கவுன்சில் நூலகங்களில் தகவல்கள் மிகவிரைவாக கிடைப்பது போன்றுநம்நாட்டில் உள்ள அனைத்து நூலகங்களிலும் தகவல்கள் விரைவாக கிடைக்க வழிவகைகள் செய்ய வேண்டும். இந்தியாவைப் பற்றிய அனைத்து தகவல்களையும் தமிழ்நாட்டு நூலகங்களில் சேகரித்து வைத்து தகவல் வேண்டு வோர்க்கு உடனுக்குடன் கிடைக்க நூலகங்கள் முயலவேண்டும் என்று கூறினார்.

திரு. கவிக் கொண்டல் மா. செங்குட்டுவன் அவர்கள் பேசும் பொழுது பேரறிஞர் அண்ணா அவர்கள், வீடு கட்டும் பொழுது பூஜை அறை ஒன்றை தனியாக கட்டுவது போல் நூல்கள் வைக்க நூலக அறை ஒன்றை ஒவ்வொருவரும் கட்ட வேண்டும் என்றும், தற்பொழுது மிகச் சுருக்கமான படிப்பைத்தான் மக்கள் விரும்புகிறார்கள் என்று கூறி, அனைவரும் ஒருமணி நேரமாவது படிக்க வேண்டும், அவ்வாறு படித்த படிப்புகள் சமுதாயத்திற்கு பயன் உள்ளதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

பேராசிரியர் திரு. ஜி. பாஸ்கரன், நிறுவனர், கருணாகரன் நினைவு நூலகம் அவர்கள் திருக்குறள் ஆய்வு செய்ய தனியாக ஒரு இடம் நூலகத்தில் அமைத்து செயல்படுத்தினால் மிகவும்

பயன் உள்ளதாக இருக்கும் என்றும் கூறினார்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தமிழ்நாடு அரசு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் படைப்பாளர், பதிப்பாளர், நூலகர்களைப் பாராட்டி சிறப்புரையாற்றும்பொழுது ஒரு நூல்தான் ஒரு மனிதனை வடிவமைக்கிறது. லட்சிய மாணவனாக திகழ்வதற்கும், வாழ்வதற்கும் நூல்கள் பயன்படுகின்றன. அந்த நூல்களை நூலகத்திற்கு சென்று படிக்கும் எண்ணத்தையும், பழக்கத்தையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும், என்றும் நூல்களைப் படித்து வளமான எதிர்காலத்தை உருவாக்கப்பாடு பட வேண்டும் என்று கூறினார். தேவநேய பாவாணர் மாவட்ட மைய நூலகர் திரு. ஞானதேவ் அவர்கள் நன்றி கூறினார்.

16.11.96 ஆம் நாள் விழாவை கல்வியாளர் தினமாகக் கொண்டாடப் பட்டது. திருமதி. சுசிலா கணேசன் பொது நூலக துணை இயக்குநர் அவர்கள் வரவேற்புரை கூறினார்.

பொது நூலக இயக்குநர் திரு. இரா. கண்ணன் அவர்கள் தனது தலைமை உரையில் பத்திரிகையாளர்களும், சென்னை தொலைக்காட்சி நிலையமும், அகில இந்திய வானொலி நிலையமும் இவ்விதமான சிறந்த விழாக்களை தொகுத்து தங்களின் சாதனங்களின் மூலம் மக்களுக்கு கொண்டு செல்வதால் இவ்விதமான வார விழாக்கள் சிறப்பு பெறுகின்றன. ஒவ்வொரு துறைகளின் பணிகள் வெளியுலகிற்கு தெரியும்படியான நிலை உருவாகிறது. திரு. சு. பரமசிவன் அவர்கள் தொடக்க கல்வியில் பல்வேறு புதிய திட்டங்களை கல்விப் பணியில் செய்து கொண்டு வருகின்றார்கள். வண்டலூர் கிரசண்ட் பொறியியல் கல்லூரியின் பேராசிரியர் திரு. கே.எம். பாதுஷா குடிமைப்பணி போட்டித் தேர்வுகளில் அகில இந்திய அளவில் தமிழகத்திலிருந்து சிறந்த பயிற்சியின் மூலம் முதன்மை பெற்றுத்திகழ கல்விப் பணி செய்து வருகின்றார்கள். திரு. என்.சி. ராஜாமணி அவர்கள் உதவி இயக்குனர் சென்னை தொலைக் காட்சியில் ''காண்போம் கற்போம்'' என்ற பல்வேறு கல்வி நிகழ்ச்சிகளை தயாரித்து கல்விப் பணியை செய்து வருகின்றார்கள். திரு. கே. சந்திரமூர்த்தி, சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர் அவர்கள் கல்விப் பணிக்காக பலவித நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி யுள்ளார்கள். மேலும் நூலகத்துறையும் கல்வித் துறையும் இணைந்து கல்வித்துறைக்கு பயன்படும் விதத்தில் தொடர் கல்வியை பொது நூலகம் மூலம் தான் பெற முடியும் என்றும், எனது மகிழ்வெல்லாம் பொது மக்களுக்கு பயன்படும் துறையாக பொதுநூலகம் விளங்க வேண்டும் என்பதேயாகும் என்று கூறினார்.

திரு. கே. சந்திரமூர்த்தி நிகழ்ச்சித் தயாரிப்பாளர், சென்னை தொலைக்காட்சி நிலையம் அவர்கள் தனது உரையில் படிக்கும் பழக்கம் இன்னும் குறையவில்லையென்றும், மாணவர்கள் படித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப தங்கள் வாழ்க்கை முறையையும், நடைமுறைகளையும் மாற்றிக் கொள்கிறார்கள் என்று கூறினார்.

டாக்டர் என்.சி. ராஜாமணி இ.ஓ.ப., உதவி இயக்குநர், சென்னை தொலைக்காட்சி நிலையம் அவர்கள் தனது கருத்தை தெரிவித்து பேசுகையில் அமெரிக்காவில் தான் படித்த பல்கலை கழகத்தை பற்றி கூறிய பொழுது நூலகத்தை யார் சரியாக

பயன்படுத்திக் கொள்கிறார்களோ அவர்களுக்குத் தான் அதிக மதிப்பெண் கிடைக்கப்பெறும் எனக் கூறினார் எழுத்தாளர்கள் நூல்கள் வடிவில் வாழ்ந்து வருகிறார்கள் என்றும் செய்திப்பலகை, காண்போம் கற்போம் நிகழ்ச்சிகள் மாணவர்களின் அறிவும், கல்விபெருக்கமும் ஏற்படுவதற்கு வழிவகுத்துக் கொடுக்கின்றது. ஒவ்வொருவரும் வாழ்க்கையில் நூல்களை எழுதிவைத்தால் பின்னால் வருகின்ற மக்களுக்கு நல்ல கருத்துக்கள் கிடைக்க முடியும் என்று கூறினார். தமிழக நூலகங்கள் - தகவல் மையங்களாக மாற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

பேராசிரியர் டாக்டர் சரளாராஜ கோபாலன் அவர்கள் பேசுகையில் நூலகர்கள் எல்லோரையும் மேலே ஏற்றிவிடும் ஏணியாக மட்டும் இருப்பதில்லை. ஓடம் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு சென்று விடுவது போல், நூலகத்திற்கு வருகின்ற வாசகர்களை தங்களது வாழ்க்கையில் சரியான பாதையில் அழைத்துச் செல்பவர்கள் நூலகர்கள். நான் இந்த ஆசிரியரால் தான் இந்த பதவியை அடைந்தேன் என்று சொல்லி ஆசிரியரை தெய்வமாக கூறுவார்கள். நூலகர்கள் வாசகர்களுக்கு சிறந்தமுறையில் வழிகாட்டினால் தெய்வமாக மதிக்கப்படுவார்கள் என்று கூறினார். எந்த ஒரு நாட்டிலே அதிக நூலகங்கள் இருக்கின்றதோ அந்த நாட்டில் சமுதாய முன்னேற்றங்கள் சிறந்ததாக இருக்கும். நூலகத்தை அழித்துவிட்டால் ஒரு நாட்டின் முன்னேற்றத்தையும் அழித்துவிடலாம். அந்த அளவில் நூலகம் சிறந்ததாக கருதப் படுகிறது என்று கூறினார். இந்த செய்திமடலின் மூலம் நூலகர்களுக்கு ஒரு எழுச்சி ஏற்பட்டி ருக்கிறது. உற்சாகம் ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர்களின் தனித்திறமை, ஆற்றலை புரிந்து கொள்ள இம்மடலின் மூலம் முடிகிறது என்று கூறினார்.

பேராசிரியர் டாக்டர் கே.எம். பாதுஷா இயக்குநர், கிரசண்ட் குடிமைப்பணிப் பயிற்சி மையம் அவர்கள் பேசும்பொழுது நூலக செய்திமடல் ஒரு முதலீடு, அது சமுதாயத்திற்கு மிகத் தேவையானது. இந்த முத்திங்கள் இதழ் எல்லா கல்வி இடங்களுக்கும் செல்லவேண்டும் என்றார். ஒவ்வொரு நிமிடமும் நாம் வளர்ந்து வருகிறோம். தமிழில் புதிய கலைச் சொற்கள் உருவாக வேண்டும், புழக்கத்தில்தான் சொற்களுக்கு பயன்பாடு உருவாகிறது என்றார் நூலக இயக்கம் மக்களின் இயக்கம் என்றும், கேரளாவைப் போன்று ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு நூலகம் இருப்பது சிறப்பானதாக இருக்கும் என்றும், எங்கு நூலகம் வளர்கிறதோ, எங்கு தகவல்களை உடனுக்குடன் பெருகிறார் களோ அங்கு சமுதாய முன்னேற்றம் விரைவு படுத்தப்படுகிறது என்று கூறினார்.

திரு. சு. பரமசிவன், மாநில தொடக்கக் கல்வித்திட்ட இயக்குநர் அவர்கள் தனது சிறப்புரையில் நூலகம் ஒரு நாட்டில் இருந்தால்தான் அந்த நாடு அனைத்துச் சிறப்புகளை பெறமுடியும், நூலகம் நாட்டிற்கு வழிகாட்டியாகவும், தகவல்மையமாகவும் விளங்குகிறது என்றும் ஒரு அமைப்பு சிறப்படைய, முக்கியத்துவம் பெறு வதற்கு நூலகம் தேவையாக உள்ளது என்று கூறினார் கணிப்பொறி இல்லையென்றால் நூலகம் இல்லை. இன்று ஏற்பட்டள்ள அறிவியலின் துரித வளர்ச்சியின் காரணமாக (இண்டர்நெட்) தொடர்புவலை இணையம் மூலமாக பல்வேறு தகவல்களை உடனுக்குடன் பெறமுடியும் என்று தெரிவித்தார்.

20.11.96 அன்று நூலகவாரவிழவின் நிறைவு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் தலைமை உரையில் பொது நூலகத்துறையின் இயக்குநர் திரு. இரா. கண்ணன் அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 625 கிராமங்களில் நூலகம் அமைக்க அனுமதி கிடைக்கப் பெற்றதற்கும் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தொடக்க விழாவின் போது நூலகத்துறைக்கு உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.23 கோடியினை கொடுக்க அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று உறுதி அளித்ததற்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டு இது குறித்து பொது நூலகத்துறை மிகவும் மகிழ்வு கொள்வதாகவும் கூறினார்கள்.

பொது நூலகத்துறையினர் மக்களுக்காக செய்து வரக்கூடிய நல்ல திட்டங்களை, பணிகளின் விரிவாக்கங்கள் குறித்து எடுக்கப்பட்டு வருகின்ற நிகழ்ச்சிகளை யெல்லாம் தொலைக்காட்சி நிலையமும், வானொலி நிலையமும் அவ்வப்பொழுது தந்துவருகின்ற ஒத்துழைப்பும், விளம்பரங்கள், புதிய நூல்கள் அறிமுகம் ஆகியவைகள் அவ்வப்பொழுது காட்டப்படுவதால் வாசகர்களின் வருகை நூலகத்திற்கு அதிகரித்து வருவது குறித்தும் பேசிய இயக்குநர் அந்தத் துறை யினருக்கு தனது மகிழ்வான நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள். மேலும் நூலகத்தைக் குறித்த நிகழ்சிகளை அவ்வப்பொழுது பத்திரிகைகள் வெளியிடுவதால், வாசகர்கள் விழிப்புணர்வு பெறுவதற்கும் நூலகத்தின் சிறந்த பணிகளை அறிந்தும், மக்களுக்கு சிறந்த நூலகச் செய்திகள் சென்று அடையவும் ஒத்துழைப்பு தந்த அத்துறை யினருக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.

படைப்பாளர், பதிப்பகத்தாரின் இரண்டு பேரும் இணைந்து இப்படிப்பட்ட நூலக விழாக்களை நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குவதால் சமுதாயத்தில் மக்களுக்கு நல்ல நூல்களைக் குறித்த தகவல்கள் கிடைக்கின்றன. குறிப்பாக புத்தகக் கண்காட்சிகள் மாணவ, மாவியர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக, சமுதாய மறுமலர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்றது எனக் கூறினார்.

மேலும் அடுத்த ஆண்டு நடைபெறும் நூலக விழாக்கள் கல்வி அமைச்சரும், கல்விச் செயலர் அவர்கள் கூறியபடியும் கிராமங்களில் எல்லா இடங்களிலும் நடைபெறும் என்று கூறினார்கள்.

இந்த பொது நூலகத்துறை சிறிய துறை என்றாலும் வளரக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது என்றும், இப்படி வளரவேண்டிய ஒரு துறைக்கு தொலைக்காட்சி நிலையம், வானொலி நிலையம், பத்திரிகைகள் ஆகியவைகள் கல்வித்துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தி வருவதையும் குறிப்பிட்டு அதற்காக வாசகர்களின் சார்பாகவும், நூலகர்களின் சார்பாகவும் தனது மகிழ்வை தெரிவிப்பதாக கூறினார்கள்.

நூலகச் செய்திமடல் மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெளிவர இருப்பது குறித்தும் தெரிவித்த இயக்குநர் அவர்கள் இம்மடல் சமுதாயத்திற்கு சிறந்த பணியினை செய்து அகில இந்திய அளவில் பெருமைபடக் கூடிய ஒன்றாக திகழ வேண்டும் என்று தலைமை உரையில் கூறிமுடித்தார்.

சிறந்த இலக்கிய நூல்கள் சமுதாயத்திற்கு மிகவும் பயன் உள்ள நூல்கள் நிச்சயமாக

வாங்கப்படும் என்றும் தனக்கு தமிழில் மிகுந்த பற்று உண்டு என்றும், சமுதாயத்திற்கு பயன் உள்ள நூல்கள் வாங்குவதில் தடை ஏதும் இல்லை என்றும் கூறினார்கள்.

புத்தகக் கண்காட்சியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டியும் வாழ்த்துரையும் வழங்கிய பேராசிரியர் ஆர்.எம். வாசகம், துணை வேந்தர் அண்ணா பல்கலைக் கழகம் அவர்கள் முதலில் முதல்பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு பெற்ற தாகம், பாரி, ஏரிஸ் பதிப்பகத்தாருக்கு பொன்னாடை போர்தினார்கள். தனது வாழ்த்துரையில், தமிழில் பாடபுத்தகங்கள் உலக அரங்குக்கு இன்னும் அதிக அளவில் வரவேண்டும் என்று கூறினார் உலக அளவில் பார்க்கும் பொழுது தமிழகத்தில் வருடத்திற்கு 2500 நூல்கள் பதிப்பு செய்கிறார்கள் என்பது குறைவாக உள்ளது என்றும் மேலை நாடுகளில் 10 லட்சம் முதல் 20 லட்சம் நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. சிறந்த நூல்களுக்கு அங்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன எனக் கூறினார்.

மேலும் இன்றைய விஞ்ஞானத்தின் அபரிதனமான வளர்ச்சி காரணமாக அச்சுத் துறையில் Letter Press, Laser Printing போன்றவைகள் மறைந்து மின்இயலில் வளர்ச்சி பெற்று எல்லாம் கணிப்பொறியின் மூலம் நடைபெற்று வருவதாகக் கூறினார்கள். சங்கத் தமிழ் நூல்கள் அனைத்தும் CD ROM (Compact Disk) மூலம் ஒரேதட்டில் கொண்டு வந்துவிட முடியும் என்று கூறினார்கள். மேலும் குறைந்த செலவில் சுமார் 1000 டாலரில் சங்க இலக்கியத்தை கொண்டு வரமுடியும் என்று கூறினார் இண்டர்நெட் மூலம் தமிழ் செய்திகளை உலக அளவில் தொடர்பு படுத்த முடியும் என்றும் கூறினார்கள், மொழிவளர்ச்சிக்கு இவ்வித இணையங்கள் பெரிதும் உதவ முடியும் என்று கூறினார்.

பல தமிழ் நூல்கள் சிறுகதை, நாவல்கள், இலக்கியங்கள் ஆகியவைகள் தட்டில் வடிவெடுத்து (Computer Disk) வந்ததால் நூல்களின் வடிவமைப்பு குறைவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் அகில உலக அளவில் இந்தியா முன்னேற அடிப்படை அறிவை வளர்த்து, அறிவியல் நுட்பத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், தொழிற் நுட்பத்தை பெருக்க வேண்டும் என்றும் கூறினார்.

திரு. ஏ. நடராஜன், இயக்குநர் சென்னை தொலைக்காட்சி நிலையம் அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் கூறியதுபோல் நூலக விழாக்கள் பட்டி தொட்டிகளிலும் பிரதிபலிக்க வேண்டும் என்று கூறினார்கள். உழைக்காமல் எதனையும் பெற முடியாது என்றும், படிப்பும் உயர்வுக்கு ஒரு வழிகாட்டியாக திகழும் என்றும் கூறினார்கள்.

''நூல் நயம்'' நிகழ்ச்சி மூலம் புதிய நூல்களை அறிமுகப்படுத்தியும், நூல்களை விமர்சனம் செய்வதையும் தொலைக் காட்சியின் மூலம் செய்து வருவதாகக் கூறினார் இவ்விதம் நூலகத்தில் சேர்க்கப்படும் புதிய நூல்கள் குறித்து புதிய நிகழ்ச்சி நடத்தவும் இந்தியாவிலேயே சென்னை தொலைக்காட்சி நிலையம்தான் இவ்விதமான சிறந்த பணியினை செய்து வருகின்றது என்றும் நூலகத்தை எப்படி பயன்படுத்த வேண்டும், எவ்விதம் கையாள வேண்டும் என வீடியோ எடுத்து தொலைகாட்சியின் மூலம் காட்டினால் பயன்உள்ளதாக இருக்கும் எனவும் கூறினார்கள்.

பேராசிரியர் திருமதி அரசு மணிமேகலை பேசுகையில் இன்றைக்கு நாட்டில் ஒவ்வொரு Cable TV மூலமும் தொலைகாட்சி

நிகழ்ச்சிகளினாலும் நூல்களை படிக்கும் பழக்கம் மிகுந்த அளவில் குறைந்துவிட்டது எனவும் முக்கியமாக மாணவர்களிடம் இந்த குறை அதிகம் உள்ளதை சுட்டிக்காட்டிப் பேசினார். இலக்கியத்தால் உள்ளம் பண்படுகிறது. எழுத்தின் ஆற்றல் வளர்வதின் காரணமாக புதிய கருத்துக்கள் மலர்கின்றன. ஒரு சமுதாயத்தை மாற்றும் சக்தியாக எழுத்துக்கள் பிரதிபலிக்கின்றன, எனறும் நூல்களும் பத்திரிகைகளும் நாட்டின் சரித்திரத்தையே மாற்றவல்லது என்பதை பல எடுத்துக் காட்டுகளின்மூலம் கூறினார்.

சிறந்த ஆசான்களாக, அறிவாளிகளாக திகழ்வதற்கு நூல்கள் தேவைப்படுகின்றன. நூல்களை படிப்பவர்கள் அனைவரும் சிறப்புபெறுகின்றனர். மனங்கள் பக்குவப் பெறுகின்றன. நூல்கள் மட்டும்தான் அறிவுரைகளை, ஆற்றல்களை, நல்லவைகளை தரமுடியும் என்று வலியுறுத்தினார்.

7-ஆம் நூற்றாண்டில் வந்த யுவாங் சுவாங் இந்தியர்களுக்கு ஏமாற்ற தெரியாது, நேர்மையின் பிறப்பிடமாக இந்தியர்கள் இருக்கின்றனர் என்று கூறியுள்ளதையும், 13-ஆம் நூற்றாண்டில் கர்ணல்பிரபு பேராசை என்பது இந்தியர்களுக்கு சிறிதும் இல்லை என்று கூறியுள்ளதும், 18-ஆம் நூற்றாண்டில் பிஸிமேன் என்பவர் இந்தியர்கள் பொய்பேசாதவர்கள் என்று கூறியிருப்பது இந்தியர்களின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது என்றும் இந்தச் செய்திகளை நூல்களின் மூலமே தெரிந்துக்கொள்ள முடிகிறது. இவ்வாறு நம்நாடு திகழ மக்கள் அனைவரும். ''சிறந்த நூல்களை'' படிக்க வேண்டும் என்றும், விஞ்ஞானமும், புதிய கண்டுபிடிப்புக்களும் ஏற்பட்டாலும் நூல்களுக்கு என்றும் அழிவு என்பது இல்லை என்று கூறினார்.

நான்கு நாள் நிகழ்ச்சிகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றது ஒவ்வொரு நாள் நிகழ்சிக்கும், பத்திரிகையாளர்களும், ஏராளமான நூலகர்களும், வாசகர்களும் வந்திருந்து விழாவினை சிறப்பித்தனர்.

ஒவ்வொரு நாள் நிகழ்ச்சிகளும், அதே நாளில், தொலைகாட்சியல் தமிழ்ச் செய்தியில் காண்பிக்கப்பட்டது, சிறப்பு அம்சமாக கருதப்படுகிறது. மேலும் 26.11.96 அன்று அனைத்து நிகழச்சிகளின் தொகுப்பும் தொலைகாட்சிகளில் காண்பிக்கப் பட்டன.

நூல்களைக் கல்லாதவன் முடவன் ஆவான். ஆசிரியர்மூலம் கற்காத கல்வி பயன் அளிக்காது; வெள்ளத்தால் போகாதது; நெருப்பில் வேகாதது; கொடுக்கக் குறையாதது; கள்வனால் அபகரிக்கப்படாதது எது? அதுதான் கல்வி.

\- விவேகசிந்தாமணி

காட்டில் இருக்கும் மரம் மரமல்ல. கற்றறிந்தோர் அவையில் கல்லாது நிற்பவன் தான் மரம். தன்னைவிடக் கற்றறிந்தவன் சிறப்புடையோன். கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

\- மூதுரை.

படித்து பழக வேண்டும்

சுசிலா கணேசன்
துணை பொதுநூலக இயக்குநர்

படித்துப் பழகுங்க - நீங்க
படித்தப்பழகுங்க
படித்து பழக நேரமில்லேனா
கேட்டு பழகுங்க - படிக்க வச்சு
கேட்டு பழகுங்க

படித்துப் பழகுங்க - நூல் பல
படித்து பழகுங்க
படிக்க இடம் இல்லையின்னா
தேடிச் செல்லுங்க - நூலகத்தை
தேடிச் செல்லுங்க

படித்துப் பழகுங்க - தினமும்
படித்துப் பழகுங்க
எழுதப்படிக்க தெரிஞ்சவங்க
எழுத்துக்கூட்டி படிப்பவங்க
எல்லாருக்கும் நல்ல இடம்
இதைத் தேடிச் செல்லுங்க - அதுதான்
நூலகமுன்னு தெரிந்து கொள்ளுங்க

பள்ளிக் கூடம் செல்லும் பசங்க
படிச்சுப்புட்டு - வேலைத்தேடும்
எல்லாருக்கும் ஏற்ற இடம்
இந்த இடமுங்க - அதுதான்
நூலகமுங்க

வயசுரொம் ஆச்சுதுன்னு
நினைக்காமல்வயசானவங்க
எல்லாருக்கும் சிறந்த இடம்
இந்த இடமுங்க - அறிவு பொழுது போக்க
ஏத்த இடம் நூலகம் தாங்க

புதுசு புதுசா வாங்கும் நூலை
பாதுகாத்து வைக்கும் இடம் நூலகமுங்க
- அதை
தலைமுறையா பயன்படுத்த
பழக்கவேணுங்க
பிள்ளைகளை பழக்க வேணுங்க
படிக்கச் சொல்லி பழக்க வேணுங்க
படித்து பழகுங்க - நாளெள்ளாம்
படித்து பழகுங்க - நூலை
படித்து பழகுங்க - நூலகத்துக்கு வந்து
படித்து பழகுங்க

நவில்தொறும் நூல் நயம் போலும்
பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு.

(வள்ளுவர்)

''வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி''

(பாரதியார்)

நூலகர் அறிமுகம்



பெயர்	**ந. பாண்டுரங்கன்**
பிறந்த இடம், தேதி	திருவில்லிபுத்தூர், 19.6.50
கல்வி, பொது சிறப்பு	வரலாற்றில் முதுகலை நூலகவியலில் சான்றிதழ்
பணி செய்யும் இடம்	கிளை நூலகம், ஞான ஒளிபுரம் மதுரை - 625 016 1971-ல் தேனூரில் தொடங்கி ஞானஒளிபுரம் வரை ஒன்பது ஊர்களில் நூலகப் பணி செய்துள்ளேன்.
ஆற்றியுள்ள சிறப்புப் பணிகள்	வாடிப்பட்டியில் தனியாக இருந்து ஊரின் மையமான பகுதியில் ஆறுலட்சம் மதிப்புள்ள இடத்தைப் பெற மிகவும் முயன்று நூலகப் பெயரில் பட்டா வாங்கியும் ஆக்ரமிப்புக்களை அகற்றப் பாடுபட்டு செய்து முடித்துள்ளேன்.
பாராட்டும் பரிசும் பெற்றிருப்பின் அவைபற்றிய விபரங்கள்	புகார்களுக்கு இடமின்றிப் பணியாற்றிவருவது, அரிமா மற்றும் பல அமைப்புக்களில் இலக்கிய உரைகள் நிகழ்த்தியுள்ளேன்.
எழுத்துத்துறையில் அனுபவம் இருப்பின் எழுதிய நூற்கள் விபரம்	பள்ளிக்காலத்திலிருந்து இன்றுவரை நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகள் அச்சில் வந்துள்ளன.

பட்டை தீட்டத்தீட்ட வைரம் ஒளிரும், புடம் போடப் போட பொன்மின்னும், அரைக்க அரைக்கச் சந்தனம் கமழும். அதைப் போன்றே படிக்கப் படிக்க அறிவு பெருகும். இவையனைத்தையும் உள்ளடக்கியே ''கற்றனைத் தூறும் அறிவு'' - என்றார் வான்புகழ் வள்ளுவர் தொடர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படாதபோது கற்றகல்வி பெருகி வளர வாய்ப்பு இல்லாது போகும். கற்ற கல்வியைத் தொடர்ந்து வளர்த்துக் கொள்ளவும், கற்கும் ஆர்வத்தை மேலும் வளர்க்கவும், வாழ்நாளெல்லாம் அறிவு வளர்ச்சிக் கல்வி பெறவும் வாய்ப்பளிப்பதே நாடு தழுவிய நூலக இயக்கம்.

GOVERNMENT OF TAMIL NADU

ABSTRACT

PUBLIC LIBRARIES - Opening of 625 Village Libraries in Tamil Nadu - Orders - Issued.

EDUCATION, SCIENCE AND TECHNOLOGY (K1) DEPARTMENT

G.O.(Ms) No.66 — Dated : 30.1.96

Read :

1. G.O.Ms.No.248, Revenue, date 23.3.93
2. Government letter No.29335/K1/92-93 date 25.4.95
3. Director of Public Libraries Letter No.6320/C1/92 dated 28.4.92 and 29.9.95

* * * * *

ORDER :

Section 45(4)(b) of the Public Libraries Act 1948 provides for the opening of Branch Libraries in Villages where the population is more than 5000. The Government have proposed to open such Libraries in 625 Villages. Accordingly the Director of Public Libraries has sent proposals for opening of 625 Village Libraries in Tamil Nadu.

2. After careful examination, the Government accept the proposal of the Director of Public Libraries for opening of 625 Village Libraries in the Villages shown in the Annexure to this order subject to the following conditions.

I. OPENING OF VILLAGE LIBRARIES :

(i) The Libraries may be opened in the Villages mentioned in the annexure to this order. They have a distinction between the Branch Libraries and New Libraries. They may be called as 'Village Libraries'.

(ii) The Local people may be requested to contribute infrastructure facilities such as rent free buildings till the construction of own buildings by the Local Library Authority, sites and furniture etc.

(iii) Necessary books to the tune of 2000 volumes, dailies and periodicals will be distributed by the concerned Local Library Authority as in the case of other Libraries.

(iv) Enrolment of minimum 200 members is pre-requirement for opening of New Libraries.

II. WORKING HOURS :

The Village Libraries will work from 9.00 a.m. to 12.00 Noon and 4.00 p.m. to 6.30 p.m. excluding weekly holidays and Government holidays as in the case of other branch libraries.

III. APPOINTMENT OF LIBRARIANS :

(i) The minimum qualification prescribed for the post of "Village Librarians" will be plus 2 passed with C.L.I.S.

(ii) A sum of Rs.500/- will be collected from the Village Librarian as Security Deposit as done in the case of other Grade III Librarians.

(iii) The Village Librarians will be paid Rs.1,000/- only as a consolidated pay per mensum. This consolidated pay will be met by the respective Local Library Authorities. Other ex-gratia payment if any allowed by the Government will be paid to them.

IV. MAINTENANCE OF VILLAGE LIBRARIES :

(1) Electricity Charges (2) Postages (3) Sweeper Charges and (4) Rent (wherever rent free buildings are not available) will be met by the concerned Local Library Authorities.

V. ADMINISTRATION OF VILLAGE LIBRARIES :

The District Library Officer will be the competent authority for the administration and function of these Village Libraries. The Director of Public Libraries will be monitoring the activities of these libraries as in the case of other Libraries in all matters.

VI. APPOINTMENT OF SURVEY AND LAND RECORDS DEPARTMENT STAFF AS VILLAGE LIBRARIANS

Orders have been issued in G.O.Ms.No.248, Revenue Department, dated 23.3.93 for the absorption of consolidated pay staff of Survey and Land Records Department based on their educational and other qualification on priority basis in the existing vacancies of other departments. It is suggested to appoint the surplus Surveyors drawing consolidated pay in the Survey and Settlement Department in the Public Libraries Department as Librarians in the posts to be created for appointment in the 625 new Libraries. Accordingly, the Director of Survey and Settlement furnished a list of staff on consolidated pay in that department who have given their option for appointment as Librarians.

The Village Librarians will be appointed from the list of candidates, retrenched in the Survey and Settlement, as furnished, by the Director of Survey and Settlement Department after obtaining a fresh option from them.

VII. TRAINING :

If the retrenched persons from the Survey and Settlement Department as furnished by the Director of Survey and Settlement have not acquired the C.L.I.S. qualification, they will be given

C.L.I.S. training by the Institute attached to the Directorate of Public Libraries after appointment as 'Village Librarians'. They will be absorbed as Grade III Librarian as and when regular vacancies arise. The seniority of the persons of Survey and Settlement Department will be taken into consideration, strictly on the basis of the list furnished by the survey and settlements Department. The remaining vacancies will be filled up by the Part-time Librarians already working in the Local Library Authorities who satisfy the procedure of appointment. After exhausting the candidates of the above categories, the remaining posts will be filled up by the competent authroty following the usual procedure of appointment.

VIII. PAYMENT :

The entire cost of new category of Librarians, termed as "Village Librarians" on consolidated pay will be paid directly from the respective Local Library Authorities. The identified Local Library Authorities of the following districts Dharmapuri, Pudukkottai, North Arcot-Ambedkar, Kanniyakumari, Ramanathapuram, Thiruvannamalai - Sambuvarayar, Chidambaranar, South Arcot Vallalar and Villupuram Ramasamy Padayatchiar Districts where the cess collection is less than Rs.10/- lakhs will have to be reimbursed of the entire cost for opening of these Libraries as "Development Grant" by the Government as their receipts may not be enough to meet the additional expenditure due to the opening of these village Libraries.

3. The Director of Public Libraries is directed to take necessary further action to implement directed to take necessary further action to implement the orders in para 2 above immediately.

4. This order issues with the concurrence of Finance Department vide its' U.O.No.5586/FS/P/95 dated 21.11.95.

(BY ORDER OF THE GOVERNOR)

L.N. VIJAYARAGHAVAN,
Secretary to Goverment.

To
The Director of Public Libraries, Chennai - 2. Director of Survey and Settlement, Chennai - 5.
Finance Department, Chennai - 9. Revene Department, Chennai - 9.
Personnel and Aministrative Reforms Dept., Chennai - 9.
Examiner, Local Fund Accounts, Chennai - 108.
The Director of Treasuries and Accounts, Chennai - 35.
All DistrictCollectors except Chennai. All District Library Officers, except Dist. Library Officer, Chennai.
Information and Tourism Department, Chennai - 9. (for publicity).
Copy to : SF-1
SCs-50.

// forwarded by order //

Section Officer

வாசகர் கனவை நினைவாக்கும் தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகம்

நூலகர், மைய நூலகம்

நுண்ணறிவு தருகின்ற அழைப்பே இங்கு
நூலகத்தின் வரவேற்பு
கண்மணிகள் மனிதனுக்குத் தேவை ! நாட்டின்
கண்ணான நூலகமோ எங்கும் தேவை !

தேனிருக்கும் நூலகமே, மானிடத்தின் மாமருந்தே என்றெல்லாம் தனது மனத்திலே கற்பனையாக மலரச் செய்து, கனவு உலகத்திலே சஞ்சரித்து நூலகம் அமைய வேண்டிய முறைகள் குறித்துச் சிந்தித்த வாசகர் ஒருவர், எப்படியெல்லாம் நூலகம் அமைய வேண்டும் என நினைத்தாரோ - அந்த வாசகரின் எண்ணங்களை எல்லாம் இன்றைக்கு உண்மைகளாக்கி, மிகப் பெரிய தமிழ் அறிஞரின் பெயரைத் தாங்கிக் கொண்டுள்ள தேவநேயப் பாவாணர் மாவட்டமைய நூலகம் இன்று புதுமைப் பொலிவைப் பெற்றுள்ளது. இவை மட்டுமல்லாமல்,

''வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க் கிருக்கை தந்தும்,
ஆசித்த நூல் தந்தும் புதிய நூல்கள்,
அமைந்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை
நேசித்தே வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்ற தொண்டிழைப்பீர் ! சமுதாயச்சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்!''

என அன்றைக்குப்புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஒரு நூலகம் எப்படி இருக்க வேண்டும் என்று கூறினாரோ, அதன்படியே இந்த நூலகம் அமைந்து இன்று மறுமலர்ச்சி பெற்றுள்ளது.

புரட்சிக் கவிஞரின் எண்ணப்படி புதிய சமுதாயத்தை உருவாக்க நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் நூலகம் உருவாக வேண்டும் என்பதிலும், அது அறிவுக் கூடமாய், ஆராய்ச்சி நிலையமாய், பண்பூட்டும் பல்கலைக் கழகமாய் சமுதாய அறிவுமையமாய்த் திகழவேண்டும் என்பதிலும், அவற்றிற்கேற்ப நூலகப் பணி, கல்வி, உலக நடப்பு, கலாச்சாரம், பொருளியல், நவீன முன்னேற்றங்கள், அறிவியல் வளர்ச்சிகள், தொடர்பு சாதனங்கள் போன்றவற்றில் மிகுந்த கவனம் செலுத்தி புதிய புதிய தகவல்களை வாசகர்களுக்குத் தந்து தனது பணியினைச் செம்மையாகச் செய்து வருகின்றது என்பதையும் கனவாய் நினைத்த அந்த வாசகருக்கு இன்று நினைவாகச் சிறப்பான தொண்டுகளைச் செய்து வருகிறது. இது இந்த நூலகத்தின் சிறப்பான பணிகளுக்குக் எடுத்துக் காட்டாகும்.

அமெரிக்காவில் ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் வருமானத்தில் 10-ல் ஒரு பங்கை தங்களின் குழந்தைகளுக்கு புத்தகங்கள் வாங்க செலவிடுகிறார்கள்.

மாவட்ட நூலக அலுவலர்களாக பதவி உயர்வு பெற்றவர்களின் பெயர்களும் பணி இடமும்

டி. வையாபுரி	-	தர்மபுரி மாவட்டம்
எச். கணேசன்	-	நீலகிரி மாவட்டம்
ஆர்.வி. சண்முகசுந்தரம்	-	திண்டுக்கல் மாவட்டம்
ஜி. நாச்சிமுத்து	-	கோவை மாவட்டம்
கோ. ஜெகதீசன்	-	செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்
எஸ்.கே. பாண்டுரங்கன்	-	நாகை காயிதேமில்லத் மாவட்டம்
கு. சாம்பசிவம்	-	கடலூர் வள்ளலார் மாவட்டம்
அ. முத்தையா	-	இராமநாதபுரம் மாவட்டம்
க. அய்யாப்பிள்ளை	-	திருநெல்வேலி கட்டபொம்பன் மாவட்டம்

விலை உயர்ந்த புத்தகம்

அமெரிக்காவைச் சேர்ந்த ஜான் ஷோப் டர்னர் என்னும் பெண்மணி 2 கோடியே 60 லட்சம் வார்த்தைகள் கொண்ட ஆங்கில அகராதியை தயாரித்து இருக்கிறார் 34 அத்தியாயம் கொண்ட நூல்களாக இதை வெளியிட்டு உள்ளனர். இந்த புத்தகத்தின் விலை 2 லட்சத்து 85 ஆயிரம் ருபாய் ஆகும்.

மொத்தம் 6 ஆயிரம் புத்தகங்கள் அச்சிட்டதில் இதுவரை 3 ஆயிரம் பிரதிகள் மட்டுமே விற்றுள்ளன. பல்கலைக் கழகத்தின் உபயோகத்திற்காக இந்த ஆங்கில அகராதி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜான் ஷோப் டர்னர் இந்த புத்தகத்தை தொகுத்து எழுதுவதற்கு 14 வருடங்கள் பிடித்தது. உலகின் மிக விலை உயர்ந்த புத்தகங்களில் இதுவும் ஒன்று.

கவிஞர் : **ஆதி. வெங்கடேசன்,**
ஏ.எல். 18, பகுதி-
சத்துவாச்சாரி, வேலூர் 632 009.

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் வேலூர்தந்தை பெரியார் ஈ.வெ. ராமாசாமி மாவட்ட மைய நூலகத்தில் நடைபெற்ற '29-வது தேசிய நூலக வார விழா' கவியரங்க நிகழ்ச்சியல் 18.11.96 அன்று வாசித்த கவிதை.

நானின்றி நீயில்லை மானிடனே!

நூல்களை அகத்தே கொண்டதால்
நான் நூலக மானேன் - இன்று
என் பெருமை உரைப்பதற்கே
நானே பேசுகின்றேன்!
செவிமடுப்பீர்! சிந்திப்பீர்!

'நானின்றி நீயில்லை மானிடனே - முத்தமிழ்
நதியன்றி மொழியில்லை தேனுடனே!
நானும் தேய்கின்ற நிலவுதான் வானுடனே!
நித்தம் தேயாத நூல்கள்தான் என்னுடனே!

அத்தை மகள் ரத்தினம் அணைப்பது உன்னை!
இந்த
வித்தை மகள்விரிப்பதுவோ (அறிவுத்) தென்னை!
ஆலமரத்தைத் தாங்குவதோவிழுதுகள் - இந்த
அறிவுமரத்தைத் தாங்குவதோ நூலறிஞர்கள்

நடமாடும் நூலகமாய்
உந்தன் எதிரே நான் வரினும்
என்னைக் கண்டும் காணாமல் போகும்
ஒ....மானிடனே! நில்!

ஆண்பாதி ஆடைபாதி என்பார்கள் - நானோ
அறிவில்லாதவன் மனிதனே இல்லையென்பேன்
அன்னை சோறூட்டி வளர்த்தாள் உன்னை! - நான்
அறிவூட்டி வளர்க்கும் சிற்றன்னை!

நான்யார் தெரியவில்லையா?
நான்தான் நூலகம் பேசுகின்றேன்!

இல்லை இல்லை ஊருக்குள்ளிருக்கும்
உன் இதயம் பேசுகின்றேன்
இல்லை இல்லை ஊருக்குள்ளிருக்கும்
உன் மூளை பேசுகின்றேன்.

ஆள் மட்டும் வளர்ந்திருக்கும் மானிடனே!
அறிவை வளர்க்க என்னை நாடு!
நல்ல நூல்நயம் தேடு!
கத்தியைத் தீட்டும்மானிடனே - உன்
புத்தியைத் தீட்ட என்னை நாடு!
புனித வாழ்வு தரும் புத்தகத்தைத் தேடு!

'மரத்தின் கோணலை நீக்கலாம் - ஒரு
சாதாரண நூல்-என்னகத்தே உள்ள
நூல்களோ உன் மனத்தின்
கோணலை நீக்கும் வா! - சிறந்த
மன வலிமை தரும் வா!
விரிவான வானத்தை உன் சிறிய வீட்டில்
அடக்கிட வா! அறிஞர்களுடன்
அளவளாவ வா! இந்த
உலகம் என் மடியில் - அதில்
ஊஞ்சலாட நீ வா.

உன் சுவாசம் நான்
உனது ரத்த நாளங்கள் நான்
இதுநாள் வரையில் ஏன்
என்னை நாடவில்லை!
இனியாகிலும் என்னை நாடு!

நிறை மனிதனாய் பாட்டுப்பாடு
நூலகம் இல்லா ஊரில் - நீ
நுகர வேண்டாம்
நூல்கள் இல்லா வீட்டில் - நீ
பிள்ளைகளை வளர்க்க வேண்டாம்
நூலகம் இன்றேல் அது நகரமல்ல நாகம்!
நூலகம் இன்றேல் அது கிராமமல்ல
அது மிகவும்சிரமம்!

ஓ மானிடனே!
உன் வீட்டிற்கு சன்னல்போல்
உனக்கு நான்.

உன் வீட்டுப் பூட்டுக்குத்
திறவுகோல் போல்
உன் அறிவுக்குத் திறவுகோல் நான்!

இதில் தற்புகழ்ச்சி ஏதுமில்லை
அறியாதார் நடுவே
ஆனமட்டும் உரைப்பதில்
தவறேதுமில்லை! தற்பெருமையுமில்லை!

இனியாகிலும் என்னில்
உன்னை ஐக்கியப்படுத்திடு - நான்
உன்னுள்ளிருந்து உனக்கு
நல்வழி காட்டிடுவேன் - உன்
அகக்கண் திறந்திடுவேன்.

ஓ... குடத்திலிட்ட விளக்குகளே!
குன்றாக நானிருப்பேன் - அதில்
ஒளிவிளக்காய்த் திகழுங்கள்!
உயர் மனிதனாய் ஓங்குங்கள்.

நூலகம் சென்றால் 8 கோடி டாலர் சம்பாதிக்கலாம் !

வாடிகன் நூல் நிலையத்தில் மாணவன் ஒருவன், பிரபலமாகாத தத்துவ ஞானி ஒருவரின் நூல்களைப் படித்துக் கொண்டிருந்தான். மிகப்பெரிய ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தபோது, அதற்குள், அந்த தத்துவ ஞானி கையெழுத்திட்ட ஒரு காகிதம் அவன் கண்ணில் பட்டது. அதில், 'இந்த காகிதத்தை பார்க்கின்றவர் புரோபேட் கோர்ட்டுக்கு சென்று கோப்பு எண்.162/ ரோமாபுரி, பிப்ரவரி 15, 1784ஐ பார்க்கவும்,' என்று எழுதப்பட்டிருந்தது. அந்த மாணவன் அப்படியே செய்தான். அந்தத் தத்துவஞானி தன்னுடைய சொத்துமுழுவதையும் அவருடைய புத்தகத்தில் அந்த குறிப்பிட்ட பகுதிவரை பொறுமையாக படிக்கிறவருக்கு சேர வேண்டும் என்று உயில் எழுதி வைத்திருந்தார். 170 வருட வட்டியும் சேர்த்து அந்தப் பணம் 360 கோடி ரூபாய் மதிப்பை பெற்றிருந்தது. - 'நிறைவான வாழ்க்கைக்கு நேரம் ஒதுக்குங்கள்'

With Best Compliments from:

M.C.C. BANK OFFERS

13% for 46 days Term Deposits

Dividend of 17.5% paid to the share-holders highest

in the banking sector

54 branches in the City of Chennai

First licenced C.C.B. in the State of Tamil Nadu By RBI

Net profit crossed Rs.18 crores

INVEST! EARN!! PROSPER!!!

MADRAS CENTRAL CO-OPERATIVE BANK LTD

114/1, Prakasam Salai, Broadway
Madras-600 108.

பதிவு எண் :3585/96-E (பொது நூலகச் செய்திமடல்)

With Best Compliments from:

If you want to be "seen" by businessmen don't miss advertising in TRINITY MIRROR



English daily simultaneously Published from **Madras, Coimbatore** and Madurai.

From the people who have been bringing you **Makkal Kural**, the popular Tamil daily, since 1973. Carries the **latest stock market / share prices on the same day. And news on public issues, new ventures, and economic Policy matters, every day.**

Features current events, political affairs, sports ...
In-flight newspaper on IA, BA, AI, MAS, SA, NEPC, etc.
Excellent distribution network ensures delivery even in rural areas ... and Bombay, Delhi, Bangalore and other State capitals/metros.

For details, contact :
The Advertisement Manager
TRINITY MIRROR
The National Daily for the People
1, First Main Road, United India Colony, Kodambakkam,
Madras - 600 024. Phone : (044) - 4831188/4836464
Fax : (044) - 4832833